Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.00

கருணாநிதி
பதவி துறப்பாரா?

NAZHIKAI
London

APRIL 2010

# நாழிகை

International Tamil Newsmagazine




## புதிய யாழ்ப்பாணம்

Niru BRAND®

The N°.1 choice
of Tamils in Canada, Europe & UK.

*"Quality you can taste!"*

North America:

Niru Enterprises Inc.
Tel : +1 416-750-1976
Email: info@niru.com
www.niru.com

Europe:

Niru Europe Ltd,
Tel: +44 20 8640 8228
Email: sales@niru.co.uk
www.niru.co.uk



SOLD
RED CARPET
Thinking of
Buying or Selling
Real Estate
RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Canada - Toronto வுக்கு
அண்மித்த பகுதியில்......
Real Estate Service
வீடு, வியாபாரம் வாங்க, விற்க.....
Karu Kandiah FRI. CRES,
Real Estate Broker / President
* 20 Years Real Estate Experience
* Multi Award Winner
Dir: 416-284-5698
Bus: 416-284-5555
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6

## ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
## 24 மணிநேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

# DEEPAM

* செய்திகள் * காலைக்கதிர் * சின்னத்திரைத் தொடர்கள்
* அரசியல் ஆய்வு விவரணங்கள் * மகளிர், சிறுவர் நிகழ்ச்சிகள்
* நீங்களும் நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
* இசை, நடன நிகழ்ச்சிகள் * புத்தம் புதிய திரைப்படங்கள்


## உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி

சந்தா விசேட சலுகைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்

DEEPAM

**DEEPAM TV**
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163 STAINES ROAD, HOUNSLOW, MIDDLESEX, TW3 3JB, UK

Tel: + 44 (0)208 814 6565, Fax: + 44 (0)208 814 1144
Email: info@deepamtv.tv Web: www.deepamtv.tv




14 | அட்டை செய்தி
இலங்கை
புதிய யாழ்ப்பாணம்

10 | இலங்கை
திசை புரியாத தேர்தல்

18 | இந்தியா - தமிழ்நாடு
கருணாநிதி பதவி விலகுவாரா?

20 | இந்தியா
மொழிவாரி மாநிலம்

24 | உலக விவகாரம் - அமெரிக்கா
ஒபாமா: ஓர் ஆண்டு

28 | உலக விவகாரம் - பருவநிலை மாற்றம்
பஞ்சபூதங்களுடன் ஒரு சதுரங்கம்



32 | கலை
கர்நாடக இசைக்கு வைர அலங்காரம்


16 | செவ்வி
ஈ.வி.எஸ்.கே. இளங்கோவன்
ஈழத் தமிழர் உரிமைகளில் இந்தியா உறுதி

36 | விளையாட்டு - கிரிக்கெட்
கண்ணாடியும் காவிய நாயகனும்

38 | சிறுகதை
ஓட்டம்



42 | சினிமா
நோர்வே தமிழ் திரைப்பட விழா




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: V, No: 1
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 426 4105 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
**Canada - Tel: 416 613 2770**
**Chennai - Circulation & Subscriptions:** K Aiyasamy 36 Kana Bagh Street 4th Lane Triplicane Chennai-600 005 Tel: 9840424655
**Sri Lanka Agent:** P S Sundaram & Sons 406 George R de Silva Mawatha Colombo 13 Tel: 4902304/2471250
**Anual Subscription** (12 issues): **UK** £20.00 **Europe** £25.00 **Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £30.00
Payable to **Pannews (IBAN: GB70 LOYD 3096 6602 2983 78)**

# இலங்கைத் தமிழரின் சுபீட்சம்

'நியமம்' என்பது கற்னை. யதார்த்தத்தில் அது அரூபமானது. எனவே, அரசியலிலும் நியமம் என்று எந்தக் காலத்திலும் எந்த அரசியல்வாதியையும் கூறிவிடமுடியாது; கூறவும்முடியாது.

இவ்விதமாகவே, இலங்கையிலும் தமிழர் பிரச்னையில், பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம்பெற ஆயத்தமான காலப்பகுதியிலிருந்து, தமிழ் அரசியல் தலைவர்கள் மீது குறைகளும் குற்றச்சாட்டுகளும் ஏதோ ஒரு தரப்பிலிருந்து சுமத்தப்பட்டேவருகிறது. சேர். பொன். இராமநாதன், ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம் என்று, சுதந்திர காலத்திலிருந்து தமிழர் தலைவர்களாக விளங்கிய அனைவர்மீதும் இந்தக் குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளூடாக, இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களுடைய நியாயமான அரசியல் உரிமைகளுக்கான நடவடிக்கைகள், ஒரு 'விடுதலைப் போராட்டம்' என்ற வடிவத்தோடு ஒரு பரிணாம வளர்ச்சியைப் பெற்றுவந்தது. குறிப்பாக, 1949இல், திரு .ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்து, திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் இலங்கை தமிழ் அரசு கட்சியை ஆரம்பித்ததிலிருந்து, இந்த 'சுதந்திர' - 'விடுதலை' உணர்வு, அந்த நடவடிக்கைகளில் உயிர்ப்புக்கொண்டது.

'சமஷ்டி கட்சி' (Federal Party) என்பதனை தமிழில் தமிழ் அரசு கட்சி என்று அவர்கள் பெயரிட்டமையே இந்த உயிரூட்டத்தை துல்லியமாக வெளிப்படுத்தும்.

'தமிழ் பேசும் மக்கள்' என்ற புதிய சொற்பதத்துடன், திரு செல்வநாயகம் முஸ்லிம் மக்களையும் இதில் இணைத்தார்.

சமஷ்டி கோரிய திரு செல்வநாயகம், 1972இல் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இலங்கை முற்றிலும் விடுபட்டு, இறைமையுள்ள குடியரசானதும், மலையக தமிழர் தலைவர் திரு. எஸ். தொண்டமான் உள்பட மற்றைய தமிழ்த் தலைவர்களுடனும் இணைந்து, இலங்கையில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வாக தனிநாடு கோரிக்கையை 1976இல் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற மாநாட்டில் முன்வைத்தார். அரசியல் முதிர்ச்சியும் வாழ்வின் முதிர்ச்சியுமுற்ற அக்காலத்தில் திரு செல்வநாயகம் இந்தத் தீர்மானத்தை எடுத்தபோது, அரசாங்கம் ஒரு மாற்று திட்டத்தை முன்வைத்தால் அதை தமிழ் மக்கள்முன் சமர்ப்பித்து, அவர்களின் அபிப்பிராயத்தை கோருவதற்கும் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த தனிநாடு தீர்மானம், தமிழ் அரசுக் கட்சியின் காந்தீய வழியிலான சாத்வீக முறையையே வற்புறுத்தினாலும், இது, அந்த விடுதலைப் பாதையில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி, இளைஞர்களின் தீவிர எழுச்சிக்கும் ஆயுத போர் நடவடிக்கைகளுக்கும் கால்கோளிட்டது.

இதுதொடர்பில், 1970 பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட் சியின் அ. அமிர்தலிங்கமும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் மு. சிவசிதம்பரமும் தோல்வியுற்றிருக்காவிட்டால், வரலாற்றில் இப்படியொரு பரிமாணத்தை அந்த கட்டத்தில் சிலசமயங்களில் அது எய்தியிருக்கமாட்டாதென்ற ஒரு கருத்தும் கூட உண்டு.

எப்படியெனினும், ஒரு வளர்ச்சிப் பாதையில் இந்த வரலாறு நகர்ந்து வந்தது. ஆனால், இலங்கைத் தமிழர்களின் இந்த உரிமைப் போராட்ட வரலாற்றில் அடுத்த அடி - அடுத்த நகர்வு என்பது சூனியமாகிவிட்ட ஒரு நிலைமையில் இன்று அவர்கள் வந்து நிற்கிறார்கள். இது ஏன்? எப்படி?

யார் காரணம்? என்ன காரணம்?

இந்த சூனிய நிலையிலிருந்து இந்த இனம் அதன் அடுத்த அடியை - நகர்வை சரியான விதத்தில் தொடர்வதற்கு இந்தக் கேள்விகளுக்கான விடைகளை இந்த இனம் தெளிவாக தெரிந்துகொள்ளவேண்டும்.

'சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது' என்ற இந்தக் கூற்று, ஒரு கட்டத்தில் இந்த ஆயுத போராட்டம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. வேளாண்மை நன்கே செழித்தது. ஆனால், அது வீடு வரவில்லை. முற்றாக அழிந்தது. ஏன்?

'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்ற ரீதியில் இலங்கையில் இப்போது பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. 2009 மே 18 வரை, 'தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் வேறல்ல; விடுதலைப் புலிகளே ஈழத் தமிழினத்தின் ஏக பிரதிநிதிகள்' என்று கூறியவர்கள், 'ஆயுதம் ஏந்திய போராளிகளைத் தவிர, அவர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்களும் ஆதரவு அளித்தவர்களும் புலிகளாகிவிடமாட்டார்கள்' என்ற மறுதலிப்போடு, 'சந்தையை' இழந்துவிட விரும்பாதவர்களாக, வெளிநாடுகளில் வட்டுக்கோட்டை தீர்மானம் என்றும், நாடுகடந்த தமிழீழமென்றும் வாக்கெடுப்புகளில் ஈடுபடுகின்றனர்.

2005இல் நடைபெற்ற இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்த முடிவும், தற்போது நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுத்த முடிவும் மஹிந்த ராஜபக்ஷ இந்த இரண்டு தேர்தல்களிலும் ஜனாதிபதியாக வெற்றியைப் பெறுவதற்கு வாய்ப்பளித்தன.

'உன்னுடைய வயதை விட, என்னுடைய அரசியல் அநுபவம் அதிகம்' என்று, இந்திய பிரதமராகவிருந்த ராஜீவ் காந்திக்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன கூறியபோது, இலங்கையின் இறையாண்மைக்கு சவால் விடுத்து, இந்திய விமானப்படை விமானம் யாழ்ப்பாணத்துள் அத்துமீறிப் பிரவேசித்து உணவுப் பொட்டலங்களைப் போட்டதும், இலங்கையில் சிங்கள ராஜதந்திரம் கெட்டித்தனமாக செயல்பட ஆரம்பித்தது.

இதேவேளையில், 'இந்தியாக்காரனுக்கு இட்லியும் சாம்பாரும் இருந்தால் போதும்' என்று, நகைத்து மகிழ்ந்தது தமிழ் ராஜதந்திரம்.

'எமது இறைமையை போரில் நாம் இழந்துவிடவில்லை' என்று, நீதிமன்றத்தில் மு. திருச்செல்வம் 1976ஆம் ஆண்டு வாதிட்டார். இப்போது, 'இறைமையை நாம் தாரைவார்த்து விட முடியாது' என்று கூறுவதன் அர்த்தம் என்ன?

ஸ்ரீமான் பொதுஜனத்தின் இதுபோன்ற கருத்துக்கள் காய்தல் உவத்தலின்றி உணரப்பட்டு, கேள்விகளுக்கு விடைகளுடன், உண்மைகளில் தெளிவையும் எற்படுத்தி, இந்த சூனிய இடத்தில் அடுத்த அடியை - நகர்வைத் தொடரும்போது தான், இலங்கையில் தமிழ் மக்களுடைய தியாகமும், பேரிழப்பும், துயரமும் நிறைந்த அந்த விடுதலைப் போராட்டம் - விடுதலைப் பயணம், சுபீட்சத்தை நிறைக்கும். ■

# உலகம்



அமெரிக்கா

## நூறு ஆண்டு கால சட்டமூலம்

அமெரிக்க வரலாற்றில் நீண்ட ஒரு கனவின் நனவாக, 32 மில்லியன் மேலதிக அமெரிக்கர்களுக்கு உடல்நல பாதுகாப்பை விஸ்தரிக்கும் சட்டத்தை ஜனநாயக கட்சியினர் நிறைவேற்றியுள்ளனர். ஏழு அதிகப்படியான வாக்குகளால் இந்த சட்டமூலம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது. ரெடி ரூஸ்வெல்ற், றிச்சார்ட் நிக்சன், பில் கிளின்டன் ஆகியோரால் முடியாதுபோன இந்த விவகாரத்தை அதிபர் பராக் ஒபாமா நீண்ட தன் விடாமுயற்சியில் சாதித்திருக்கிறார்.

சுமார் நூறு ஆண்டுகால விவாதங்களுக்கும் விரக்திக்கும் பின்னர் அமெரிக்க மக்களுக்கு இந்த பொதுவான வசதி ஈற்றில் கிட்டியிருப்பதாக ஒபாமா தெரிவித்திருக்கிறார். இதன்மூலம் ஏறத்தாழ முழு அமெரிக்க மக்களுக்கும் உடல்நல காப்புறுதி கிட்டுகிறது. எனினும், இதனைத் தாம் தொடர்ந்தும் எதிர்த்தே தீருவதாக குடியரசு கட்சியினர் சபதமிட்டுள்ளனர். பெருந்தொகைச் செலவினத்தைக்கொண்ட இத் திட்டத்தை தலைநகருக்கு வெளியே அமெரிக்க மக்கள் ஏற்கவில்லை என்று குடியரசு கட்சி தெரிவிக்கிறது.

இத் திட்டத்துக்கு அடுத்த பத்து ஆண்டுகளில் ஏற்படும் 940 பில்லியன் அமெரிக்க டொலர் செலவினத்தை சரிக்கட்ட செல்வந்தர்கள்மீது புதிய வரிகள் விதிக்கப்படவுள்ளன.

"மிகப் பெரும் விடயங்களைச் சாதிக்கவல்ல மக்களாகவே நாம் இன்னமும் இருக்கிறோம்'' என்று அதிபர் பராக் ஒபாமா தெரிவித்திருக்கிறார்.

இந்தியா

## காசு மாலை



இந்தியாவின் சர்ச்சைக்குரிய உத்தரபிரதேச மாநில முதல்வர் மாயாவதிக்கு, முழுக்கமுழுக்க ஆயிரம் ரூபா நோட்டுக்களாலான மிகப்பெரிய மாலை ஒன்று, அவரது பகுஜன சமாஜ கட்சியின் வெள்ளிவிழாவில் பரிசாக அணிவிக்கப்பட்டது. இதன் பெறுமதி நான்கு லட்சம் டொலர்களுக்கும் இரண்டு மில்லியன் டொலர்களுக்கும் இடைப்பட்டதாக இருக்குமென்று கருதப்படுகிறது.

அதிகரிக்கும் குற்றச்செயல்களும் மோசமான சுகாதார வசதிகளும் மிகக்குறைந்த கல்வியறிவு வீதமும் கொண்ட, இந்தியாவின் பின்தங்கிய மாநிலங்களில் ஒன்றான உத்தர பிரதேசத்தின் முதலமைச்சர் மாயாவதி, ஆடம்பர செலவினங்களில் பொதுப்பணத்தை மிகப்பெருமளவில் விரயம்செய்வதாக குற்றஞ்சாட்டப்படுகையில், இந்த ரூபாய்நோட்டு மாலை விவகாரம் இந்திய பாராளுமன்றத்திலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி, பாராளுமன்றம் இடைநடுவில் ஒத்திவைக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வை உயர்த்துவதற்காகவென்று இந்தியாவின் முதலாவது பெண் தலித் முதலமைச்சராக பதவியேற்றவர் மாயாவதி. இந்தியாவின் பிரதமராகவேண்டுமென்ற அவரின் விருப்பை அவர் பலதடவைகளில் வெளிப்படுத்திவருகிறார்.

அமெரிக்கா

## மும்பாய் தாக்குதலில் அமெரிக்க பிரஜை



மும்பாய் தாக்குதலுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அமெரிக்க பிரஜையான டேவிட் ஹெட்லி நீதிமன்றத்தில் ஒப்புதல் தெரிவித்திருக்கிறார். முஸ்லிம்களை புண்படுத்தும் விதத்திலான கேலிச் சித்திரமொன்றை பிரசுரித்ததாக டனிஷ் பத்திரிகை ஒன்றின்மீது தாக்குதலுக்கு திட்டமிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு, சிக்காக்கோ நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையிலேயே ஹெட்லி மும்பாய் தாக்குதல் தொடர்பான ஒப்புதலையும் அளித்திருக்கிறார்.

பாகிஸ்தான் தந்தைக்கும் அமெரிக்க தாய்க்கும் அமெரிக்காவில் பிறந்தவரான ஹெட்லியினுடைய இயற்பெயர் டாவூட் கிலானி. 2002ஆம் ஆண்டு தொடக்கம் பாகிஸ்தான் தீவிரவாத இயக்கமான லஷ்கார்-ஈ-ரைபாவுடன் இயங்கிய இவர், கண்காணிப்பு பணிகளுக்காக இந்தியா சென்றுவருவதற்கு வசதியாக பெயரை மாற்றினார்.

டனிஷ் பத்திரிகை தாக்குதல் தொடர்பில் இவர் சிக்காக்கோ விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டிருந்தார். 2008 டிசம்பரில் நடைபெற்ற மும்பாய் தாக்குதலில் லஷ்கார்-ஈ-ரைபா இயக்கம்மீது இந்திய, பாகிஸ்தான் அரசுகள் குற்றம்சுமத்தியுள்ளன. 170பேர் இத் தாக்குதலில் மரணமடைந்திருந்தார்கள்.

**பாகப் பிரிவினைப் பிரச்னை வெடிக்கும்போது லீலாவிநோதங்கள் வெளிவருகின்றன**

# காமத்தின் போர்வையாக காவி

**சிலருக்கு ஏமாற்றும் எண்ணம் இருக்கிறது. பலருக்கு ஏமாறும் மனம் இருக்கிறது. வேஷங்கள் கலைந்து எல்லாம் ஏமாற்று என்று தெரியவந்ததும் மக்கள் விலகுகிறார்கள். அப்புறம் வேறு காவி, வேறு கால்கள் கிடைக்கின்றன. வேஷம் தொடர்கிறது.**

சாமியார்களுக்கும் மாமியார்கள் இருக்கிறார்கள் என்றார் கவிஞர் கண்ணதாசன். அது பரவாயில்லை. பெண்டாட்டியின் இம்சை தாங்காமல் 'கூறாமல் சந்நியாசம் கொள்' என்று, இல்லறத்திலிருந்து வெளியேறிய சாமியார்களுக்கு மாமியார் இருப்பது நியாயமே. இல்லறமில்லாத நிலையில் சில சாமியார்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மாமியார்கள் இருப்பதே இன்றைய தமிழ்நாட்டின் போலிக் காவியுலக வளர்ச்சி. காவி இப்போது காமத்தின் போர்வையாகிவிட்டது.

ஒரு சாமியார் இரண்டு மாமியார் வீட்டுக்கும் அவ்வப்போது போய்வருகிறார். இன்னொரு சாமியாரை வரவேற்க மாமியார் வீடு காத்திருக்கிறது. இந்தமாதிரி சம்பவங்கள் சில புதிய உண்மைகளுக்கு வெளிச்சம் போடுகின்றன.

சம்பாதிக்க வேண்டுமா, அதிகம் படிக்கவேண்டியதில்லை. அதிகம் உழைக்கவேண்டியதுமில்லை. அவர்களுக்கு ஓர் அறிவுரை: 'ஏதாவது ஒரு கட்சியில் சேர்; கொடி பிடி; பிறகு தடி பிடி. அப்புறம் பதவியைப் பிடி. உடனே பணத்தைப் பிடி. அதன்பிறகு எல்லோரும் எல்லாமும் உன் பிடியில்.' ஆக, அரசியல்வாதியாவது சரியான பிழைப்பு.

அரசியல்வாதியாகிச் சேர்த்த பணத்தைக் காப்பாற்றவேண்டுமே. கழிப்பறைகளிலும் மாட்டுத் தொழுவங்களிலும் பூஜையறைகளிலும் மெத்தைகளிலும் எவ்வளவு பணத்தைத்தான் பதுக்குவது? பதுக்கும் பணம் குட்டிபோடுவதில்லையே. அதைச் சில வியாபாரிகளுக்கு வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து, அவர்கள் அதை ஏதாவது ஒரு தொழிலில் போட்டுப் புரட்டினால் கள்ளப்பணம் குட்டிபோடும். அது, வாங்கியவர்களுக்கும் கொடுத்தவர்களுக்கும் லாபம் தரும். நஷ்டப்பட்டால் கேட்பதற்கில்லை. நஷ்டம் என்று வியாபாரி சொல்லிவிட்டாலும் அரசியல்வாதி சட்டப்படி அந்தப் பணத்தைக் கேட்டுப் பெறமுடியாது. ஆனாலும் நேரடியாக, மறைமுகமாக ஏமாற்றும் வியாபாரிகளுக்கு ஏதாவது தொந்தரவு ஏற்படுத்த முடியும்.

மூன்று, நான்கு தலைமுறைகளாக வியாபாரம் செய்துவருபவர்கள் செய்யாத விளம்பரத்தைப் புதியவர்கள், நேற்றுவரை ஒன்றுமில்லாதவர்களாக இருந்தவர்கள் செய்கிறார்கள். பரம்பரை பரம்பரையாக தொழிலில் இருந்து வருபவர்கள் செய்யத் துணியாத முதலீட்டை இவர்கள் திடீரென்று செய்கிறார்கள். முக்கிய வர்த்தக இடங்களில் பெரிய பெரிய மனைகளை வாங்கிப்போட்டு உயர, உயரமான கட்டடங்களை பிரமாதமான வெளி, உள் ஜோடனைகளுடன் கட்டுகிறார்கள். எக்கச்சக்கமான சரக்குகளை கொள்முதல் செய்கிறார்கள். நன்றாக விற்கிறார்கள்; அதிக லாபம் காண்கிறார்கள்.

நூற்றுக்கணக்கான வருடங்களாக இருந்துவரும் ஆதீனங்கள், மடங்களின் தலைவர்கள், இருக்கும் சொத்தைக் காப்பாற்றிக்கொள்ளவே திணறுகிறார்கள். புதிதாக சொத்து வாங்க முடியவில்லை. குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களுக்கு, கட்டடங்களுக்கான வாடகையை வசூலிக்கமுடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆனால், எந்தப் பரம்பரைப் பெருமையும் இல்லாமல், ஆன்மீக நூல்களில் சிறிதும் ஞானமில்லாமல் மடம் தொடங்குகிறேன்; பீடம் தொடங்குகிறேன்; சிகிச்சை அளிக்கிறேன்; மோக்ஷம் தருகிறேன் என்று சொல்லிக்கொள்ளும் புதுவகை தீர்த்தானந்தாக்களும் காமாநந்தாக்களும் செல்வச் செழிப்பில் கொழிக்கிறார்கள். புதிய கடைகளுக்கு வாடிக்கையாளர்கள் கூட்டம் கூட்டமாகப் போவது போல், இந்தப் புது ஆனந்தாக்களுக்கும் கூட்டம் கூடுகிறது. மற்ற எல்லா வியாபாரங்களையும் தூக்கியடிக்கும் நிலைமைக்குப் போய்விட்டது, போலி சாமியார்களின் வியாபாரம்.

புதிய வியாபாரிகளின் முதலீட்டில் ஊழல் அரசியல்வாதிகள், அதிகாரிகளின் பணமும் செல்வாக்கும் புழங்குவதுபோல், பல மடாநந்தாக்களின் ஆசிரமங்களுக்கும் கறுப்புப் பணம் போய், காவியாகி பிறகு வெள்ளையாகிவிடுகிறது.

'முடி' மட்டுமே முதலீடு என்றுள்ள ஒரே வியாபாரம் சாமியார் வியாபாரம். 'முடி' என்பது ஜடாமுடி, மற்றும் தாடி. இரண்டும் தானாக முளைக்காவிட்டாலும் போகிறது; ஒட்டவைத்துக்கொள்ளலாம். சினிமா வந்துவிட்ட பிறகு இந்தத் தொழில்நுட்பம் மிக நன்றாக முன்னேறிவிட்டது. காக்கி உடைக்குக் கிடைக்காத மரியாதை காவி உடைக்குக் கிடைக்கிறது; சமயங்களில் காக்கியும் காவியின் காலடியில் விழுந்து கிடக்கிறது. ஒருவர் போலிச் சாமியாரானால் அறுசுவை உணவு கிடைக்கிறது; ஏயர்கண்டிஷன்ட் மாளிகை கிடைக்கிறது. பல ஏக்கர் நிலம் கிடைக்கிறது. அதிலே உயிரை விட்டுப் பலர் பயிர் வளர்ப்பார்கள்.

கொஞ்சம் பேசத் தெரிந்திருந்தால் போதும்; சாமியார்கள் தம்மைச் சுற்றி ஒளிவட்டம் சுழலவிட்டுக்கொள்ளலாம். அதிகம் கூட்டம் கூட்டிக்கொள்ளலாம். கேட்டுக் கைதட்டி மகிழ மக்கள் காத்திருக்கிறார்கள். அறுபது வயதுக்கு உள்பட்ட மக்கள் நம் இதிகாசங்கள், புராணங்கள் இவற்றிலிருந்து வெகுதூரம் விலகிவந்துவிட்டார்கள். புதிய சாமியார்கள் ஏற்ற இறக்கத்துடன் தொடர்ந்து தமிழிலோ ஆங்கிலத்திலோ தப்புத் தவறான மேற்கோள்களுடன் பொருத்தமில்லாத குட்டிக்கதைகளுடன் பேசினால், மக்கள் கேட்டுக் கைதட்டி மகிழ்ந்து, வணங்கி, பணிந்து நிற்கத் தயாராகிவிட்டார்கள்.

சாமியார்களுக்கு 'செக்' புத்தகம் தவிர வேறு எதிலும் எழுதத் தெரிய வேண்டும் என்ற அவசியம் இல்லை. சில பொய் எழுத்தாளர்களும் பேயெழுத்தாளர்களும் அபாரமான கட்டுரைகளை எழுதிக்கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். பத்திரிகைகள் கொடுப்பதைவிட அதிகமான சன்மானத்தை சாமியார்கள் கொடுத்துவிடுவார்கள். அல்லது, அவர்கள் சார்பாக வேறு யாராவது கொடுப்பார்கள். யாரோ எழுதியது என்பது நன்றாகத் தெரிந்தும் அதைச் சாமியாரின் புகைப்படங்களுடன் வெளியிட பத்திரிகைகள் தயாராக இருக்கின்றன. 'ஜன்னலை மூடு; உளவுக் கண் வரும்' என்ற கட்டுரைத் தொடர் வகைகள் நிறைய வருகின்றன. வீட்டில் பூஜை அறை இருப்பதுபோல, பத்திரிகையென்றால் ஏதாவதொரு சாமியாரின் கட்டுரைத் தொடர் இருக்கவேண்டும் என்பது தமிழ்ப் பத்திரிகை உலக நியதியாகப் போயிற்று.

சாமியார் என்ற முகமூடியில் போலி நபர்கள் நிறைய சம்பாதிக்கிறார்கள். அந்தப் பெயரை வைத்துக்கொண்டு சுற்றியிருக்கும் போலிகளும் சம்பாதிக்கிறார்கள். இவர்களுக்குள் பாகப் பிரிவினைப் பிரச்னை வெடிக்கும்போது சாமியார்களின் லீலாவிநோதங்கள் வெளிவருகின்றன. சாமியாரைச் சுற்றியிருப்பவர்களும் சம்பாதிக்கிறார்கள். சாமியாரே ஒட்டுத் தாடியை உதறிவிட்டு ஓட நினைத்தாலும் மற்றவர்கள் பிடித்துவைத்துக்கொள்வார்கள். 'மற்றவர்கள்தான் என்னைச் சாமியாராக நடிக்கவைத்தார்கள்' என்று இனி பொலிஸ் விசாரணையில் வாக்குமூலம் வரலாம். காவல் துறைக்குத் தெரியாமலா கசமுசாக்கள் நடந்திருக்கும்? பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கு எதற்கு என்று ஒதுங்குபவர்கள் சிலர். ஆதாயம் அடைபவர்களும் பலர்.

'ஆகா, விட்டேனா பார்; சாமியாரைக் கைதுசெய்; ஆசிரமத்தைக் கொளுத்து. மதம் போயிற்று' என்று கூப்பாடு போடுபவர்களும் இத்தனை நாள்கள் இதே தேசத்தில்தானே இருந்தார்கள்? அப்போது இவர்களால் இவற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லையா? போலிச் சாமியார்களில் பலர் பெண் பித்தர்களாக இருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. பெண் பித்தர்களில் பலர் சாமியார்கள் வேடம் தரித்துக்கொள்கிறார்கள் என்று சொல்வதே சரி.

இந்தச் சாமியார்களும் கெட்டிக்காரத்தனமாக அதிகாரிகளையும் தொழிலதிபர்களையும் கவசங்களாக வளைத்துப் போட்டுக்கொள்கிறார்கள். சாமியார்கள் அகப்படும்பொழுது தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட பெரிய மனிதர்கள் சாமியார்களையும் காப்பாற்றிவிடுகிறார்கள். இந்தப் பெரிய மனிதர்களில் பலர் வலுவில் போய் சாமியார்கள் கால்களில் விழுபவர்கள் அல்லர். சாமியார் கும்பல் இவர்களைச் சம்பந்தப்படுத்துவது, போலிக் காவி வியாபாரத்துக்குத் தேவைப்படும் 'குட்வில்' ஆகும். இது, போலிச் சாமியார்களைக் காப்பாற்ற உதவுகிறது.

ஏன் பொதுமக்கள், அரசியல் தொண்டர்கள், அரசியல் தலைவர்கள். தொழிலதிபர்கள், அதிகாரிகள் இப்படிப் போலிச் சாமியார்களின் கால்களில் விழுகிறார்கள்?

நம் சமுதாயத்தில் தலைமைப் பொறுப்புகளை வகிக்கும் பலருக்கு தலைமைப் பண்புகள் இல்லை. அவர்களுக்கும் அடிமைப் புத்தி மட்டுமே இருக்கிறது. தாங்கள் விழுவதற்கான கால்களை அவர்கள் தேடுகிறார்கள். தலைவர்களே அப்படியென்றால், தொண்டர்களைப்பற்றியும் பொதுமக்கள் பற்றியும் எதுவும் கேட்கவேண்டாம். கால்கள் தட்டுப்பட்டால் அவர்கள் விழுவதற்குத் தயார், அசிங்கமான கால்களுக்கு பாத பூஜை செய்யவும் தயார்.

கடவுளைப் பக்தர்கள் நேரடியாகக் கும்பிடலாம். சாமியார் என்ற இடைத்தரகர் எதற்கு? பக்திப் பாடல் புத்தகங்கள், புராணங்கள் பல இருக்கின்றன. அவற்றைப் படிக்கலாமே. போலிச் சாமியார்களின் பேச்சுக்களை ஏன் கேட்கவேண்டும்?

சிலருக்கு ஏமாற்றும் எண்ணம் இருக்கிறது. பலருக்கு ஏமாறும் மனம் இருக்கிறது. போலிகளின் வேஷங்கள் கலைந்து எல்லாம் ஏமாற்றுவேலை என்று தெரியவந்ததும் மக்கள் விலகுகிறார்கள். அப்புறம் வேறு காவி, வேறு கால்கள் கிடைக்கின்றன. வேஷம் தொடர்கிறது. அடிமைத்தனமும் தொடர்கிறது. எங்கள் கால்கள் விழுவதற்காகவே படைக்கப்பட்டவை. எழுவதற்காக அல்ல. அதுதான் இந்தியா. காவிக்குக் களங்கம் ஏற்படுத்தியுள்ள இந்தியா.

■




Nalli 80 YEARS SINCE 1928
First and the Finest
Nalli
பைரவி
கலெக்ஷன்
Code No.BH09007
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com Website : www.nalli.com
• சென்னை • பெங்களூரு • கோயம்புத்தூர் • தில்லி • ஐதராபாத் • மதுரை • மும்பை • திருச்சி • திருநெல்வேலி • சிங்கப்பூர் • USA

# திசை புரியாத தேர்தல்

## யுத்தத்தில் வாரியிறைக்கப்பட்ட பணம் இப்போது தேர்தலில் விரயமாகிறது

**தண்டாயுதன்**



இலங்கையில் பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஒன்றாக அணிசேர்ந்திருந்த கட்சிகள் பிளவுபட்டு புதிய வேட்பாளர்கள், புதிய தேர்தல் சின்னங்கள் என்பவற்றுடன், கட்சித் தாவல்களும் மும்முரமாகவே இடம்பெற்றிருக்கின்றன.

கட்சித் தாவல்களைப்பொறுத்தவரை, தென்னிலங்கைக் கட்சிகள் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கில் கடந்த பொதுத் தேர்தலின்போது 22 ஆசனங்களைப் பெற்றிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பும் புதிய உறுப்பினர்களை உள்ளடக்கியிருக்கிறது. கடந்த பொதுத்தேர்தலில் இதில் போட்டியிட்ட சிலர் இம்முறை ஆளுங்கட்சியுடன் சேர்ந்துள்ளனர். அதேசமயம், தமிழ் தேசிய கூட்டமைப்பில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் பல புதிய முகங்கள் வேட்பாளர்களாகியுள்ளனர்.

அரசியலில் 'நிரந்தர நட்புமில்லை; பகையுமில்லை' என்று சொல்வதுண்டு. இலங்கையைப் பொறுத்தவரை இக்கூற்று மிகவும் பொருத்தமானதாகவே இருக்கிறது. கட்சித் தாவல் என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு இம்முறை இடம்பெற்றுள்ளது. இதில், தமிழீழ விடுதலைப் புலிகளது 'குரலாக' இருந்துவந்த தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் விதிவிலக்கல்ல என்பதே சற்று வியப்பானது.


அரசியல் நிலவரம் மட்டுமன்றி, இராணுவ தரப்பிலும் அதன் கட்டமைப்பில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் வடக்கே வன்னிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான யுத்தம் சூடுபிடித்திருந்தது. அந்த யுத்தத்துக்கு தலைமைவகித்த அப்போதைய இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நாட்டில் சகல தரப்பினராலும் பாராட்டுப்பெற்றிருந்தார். அரவது இராணுவ ரீதியான வெற்றி பெரிதும் மெச்சப்பட்டது.

ஆனால், கடந்த ஆண்டில் அப்போது பாராட்டுக்களைப்பெற்ற பொன்சேகா, கடந்த ஜனவரி மாதம்

**ஜனாதிபதி தேர்தலில் ஒரே அணியில் நின்ற சரத் பொன்சேகாவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒரே தொகுதியில் ஒருவரோடொருவர் போட்டியிடுகின்றனர்**

**எதிர்க் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள பிளவு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தனக்கு சாதகமாக்கும் என்று நம்புகிறது அரசு**

**மனம்போன போக்கில் தமிழ் வேட்பாளர்கள்**





சரத் பொன்சேகா
ரணில் விக்கிரமசிங்க
இரா. சம்பந்தன்

நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டிருந்தார். அத் தேர்தலில் அவர் தோல்விகண்ட நிலையில், தற்சமயம் இராணுவ நீதிமன்ற விசாரணைகளுக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நடத்துவதில் நீண்ட அநுபவத்தைக் கொண்டிருந்தவர் ஜெனரல் சரத் பொன்சேகா.

சில வருடங்களுக்கு முன்னர் இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்ட சமயம், பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரினால் இராணுவ தலைமையக வளாகத்தில்வைத்து கடும் தாக்குதலுக்குள்ளாகியிருந்தவர் பொன்சேகா.

குற்றுயிராய்க்கிடந்த சரத் பொன்சேகாவை காப்பாற்றுவதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டிருந்தது. உயிர்ப்பிச்சை அளிக்கப்பட்ட நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பை எதிர்கொள்ளும் முழுப்பொறுப்பும் ஜெனரல் பொன்சேகாவிடம் ஜனாதிபதி ராஜபக்ஷவினால் ஒப்படைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கெதிரான யுத்தத்தைக் கிழக்கிலும் அதன் பின்னர் வடக்கே வன்னியிலும் நடாத்தி, அந்த அமைப்பை நிலைகுலைய வைப்பதில் ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவ ரீதியாக முக்கிய பங்காற்றினார். இருந்தபோதிலும், இந்த இராணுவ வெற்றிகளின் பின்னணியில் ஜெனரல் பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்ததே தற்போது அவரை அரசியல் வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் அதலபாதாளத்துக்கு தள்ளியிருக்கிறது.

இராணுவ நீதிமன்ற விசாரணைகள் தற்சமயம் அவர்மீது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இறுதிக்கட்ட யுத்த நடவடிக்கைகளின்போது இராணுவத்தினர் நடாத்திய தாக்குதல்களில் சரணடைய வந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் உள்பட, ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார். அவ்வாறு அவர் குறிப்பிட்டமை, இராணுவ நடவடிக்கைகளுக்கு குந்தகமளிப்பதாக அரசதரப்பில் தெரிவிக்கப்படுகிறது

அதேசமயம், இராணுவ தளபதியாக பதவியிலிருந்த காலத்தில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டமை மற்றும்

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையென, பொன்சேகாமீது குற்றச்சாட்டுக்கள் அடுக்கடுக்காக சுமத்தப்பட்டுள்ளன.

ஒரு வருடத்துக்கு முன்னர் இலங்கையின் உத்தம புத்திரர் என்ற ரீதியில் உயர்வாக பேசப்பட்ட சரத் பொன்சேகா, தற்போது மிகக் கேவலமான முறையில் நடத்தப்படுகின்ற ஒருவராக இருக்கிறார். ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் என்ற ரீதியில் போட்டியிட்ட சரத் பொன்சேகா தற்சமயம் தமது அரசியல் வாழ்விலும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவை ஒருமுகமாக ஆதரித்த ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) ஆகிய கட்சிகள் பிளவுபட்டுள்ளன. எதிர்வரும் தேர்தலுக்கான கட்சிச் சின்னத்தை தெரிவு செய்வதில் ஏற்பட்ட இழுபறி காரணமாகவே இப் பிளவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஜே. வி. பி. அணியினர் சார்பாக சரத் பொன்சேகா போட்டியிட முன்வந்துள்ளார்.

இவ்வாறு எதிர்க் கட்சிகளிடையே பிளவுகளும் பிரச்னைகளும் ஏற்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனது தரப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைப்பது உறுதியென அரசாங்க தரப்பு மார்தட்டி நிற்கிறது.

இது இவ்வாறிருக்க, வடக்கு-கிழக்கில் பலம் வாய்ந்த நிலையில் இதுவரை காலமும் இருந்துவந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு தற்சமயம் பல புதிய முகங்களோடு பொதுத் தேர்தலில் களமிறங்கியுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தில் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பலர் இந்தத் தடவை பொதுத் தேர்தலில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

இவர்களில், பிரபாகரனின் தந்தையார் திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் இறுதிச் சடங்கை நடாத்திய சிவாஜிலிங்கம், கஜேந்திரன், கிழக்கிலங்கையைச் சேர்ந்த தங்கேஸ்வரி கதிராமன், வன்னியைச் சேர்ந்த சிவநாதன் கிஷோர் ஆகியோர் முக்கியமானவர்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள சர்ச்சை காரணமாக அக் கட்சியிலிருந்தும் விலகியுள்ளவர்களில் மிக முக்கியமானவராக அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளங்குகிறார். அமரர்களான குமார் பொன்னம்பலத்தின் புதல்வரும் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பேரனுமான கஜேந்திரகுமார், தனிவழியில் நின்று பொதுத் தேர்தலில் தமக்கென அணியமைத்துப் போட்டியிடுகிறாார்.

இலங்கையின் தற்போதைய நிலபரத்தை நோக்குகையில் எங்கும் எதிலும் ஒரு குழப்பமான நிலையே காணப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் முடிவுற்று ஒரு மாதமே ஆகிய நிலையில் படைத் தரப்பில் களையெடுப்புகள் மும்முரமாக இடம்பெற ஆரம்பித்தன. சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக இருந்தவர்கள் என்ற ரீதியில் பொலிஸ், முப்படைகள் ஆகியவற்றில் பல முக்கிய பதவிகளில் இருருந்தோர் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டும் இடமாற்றம் செய்யப்பட்டும், அவர்கள் வகித்த பொறுப்புக்களிலிருந்து ஒதுக்கப்பட்டும் காணப்படுகின்றனர்.

சரத் பொன்சேகா விவகாரமானது இலங்கையின் அரசியலில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது. இராணுவ ஆட்சிகள் ஏற்பட்டு ஜனநாயக அரசியல்வாதிகள் சிறைவைக்கப்படுவதும், மரண தண்டனைக்குள்ளாக்கப்படுவதும் வழக்கமாகும். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை கடந்த ஒருவருட காலம்வரை பலம்மிக்க இராணுவ தளபதியாக இருந்துவந்த சரத் பொன்சேகா தற்போது ஒரு கிரிமினல் கைதிபோல சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

தற்செயலாக, நடந்துமுடிந்த ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றிபெற்று பதவிக்கு வந்திருந்தால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கதை தர்மசங்கடமாகவே இருந்திருக்குமென்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் அவரது சகோதரர்களான பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் பஷில் ராஜபக்ஷ ஆகியோருக்கு சரத் பொன்சேகா பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பார்.

அதேசமயம், இராணுவ ரீதியாகக் கூட பல்வேறு பாரிய பிரச்னைகள் தோன்றியிருக்கும். ஏனெனில், சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக செயல்பட்டவர்கள் எனக் கருதப்பட்ட படையதிகாரிகள் பலர் பாதிப்புகளைச் சந்தித்திருந்தனர். எனவே, சரத் பொன்சேகா ஜனாதிபதியாகியிருந்தால் முப்படைகளின் கட்டமைப்பில் அவரும் தனது கைவரிசையைக் காண்பித்திருப்பார்.

தற்போது தடுப்புக் காவலில் இருந்தபடியே பொதுத் தேர்தலில் ஜே. வி. பி. அமைப்பின் கூட்டணி சார்பாக போட்டியிடுகிறார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியில் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்து போட்டியிட சரத் பொன்சேகா முன்வந்துள்ளார். கொழும்பு மாவட்டம் ஐக்கிய தேசிய கட்சியின் கோட்டையாகும். எனவே, சரத் பொன்சேகா இக் கோட்டையைத் தகர்ப்பாரா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

இது இவ்வாறிருக்க, வடக்கு-கிழக்கு அரசியல்கூட வேடிக்கையானதாகவே இருக்கிறது. கடந்த இருபத்தைந்து வருட காலத்தில் ஒழுங்கான முறையில் தேர்தல்கள் வடக்கு-கிழக்கை முழுமையாகத் தழுவி இடம்பெறவில்லை. அரச கட்டுப்பாட்டுப் பகுதி, புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதி என பிளவுகளும் அச்சுறுத்தல்களும் இருந்ததோடு, ஓரிரு வாக்குகளுடனேயே பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட நிலையும், 'வேட்டு'களின் பலத்தோடு வாக்குகள் போடப்பட்டு தேர்வுகள் இடம்பெற்ற நிலையுமே காணப்பட்டது.

ஆனால், சுமார் 25 வருடங்களின் பின்னர் வடக்கு-கிழக்கில் துப்பாக்கிகளின் ஆதிக்கமின்றி தேர்தல் இடம்பெறுகிறது. இதன் காரணமாக முன்னர் பெட்டிப்பாம்பாக அடங்கியிருந்த அரசியல்வாதிகள், அவர்களது கையாட்களாகியோரும் இத்தடவை தமது மனம்போன போக்கில் வேட்பாளர் தெரிவு, கட்சி நடவடிக்கைகள் என செயல்பட்டுவருகின்றனர்.

எனவே, இந்த தடவை பாராளுமன்ற தேர்தலை நோக்கும் பட்சத்தில் 'அடாவடித்தனமான' அரசியலேகளை கட்டியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கடந்த காலங்களில் அதாவது இலங்கையின் இருண்ட யுகமென வர்ணிக்கப்பட்ட கடந்த முப்பது வருட காலத்தில் அரசாங்கம் யுத்தம், யுத்தமென பணத்தை வாரியிறைத்து, நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தது. ஆனால், தற்போது யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் தேர்தல் என பணம் கோடி கோடியாக கொட்டி விரயமாக்கப்படுகிறதென்பதே நாட்டு மக்களின் பொதுவான அபிப்பிராயமாக இருக்கிறது. ■

சுதந்திரமாக உங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள
எமது சேவைகள் உங்களுக்கு வழிகாட்டும்!

Personal & Corporate Advice
Retirement planning
Mortgage arrangement service and Financial re-engineering
Life assurance and protection planning
Mortgage Conveyancing
Investment planning
Key event advisory service

**Debt Problems?**
call us for **confidential** and **expert** advice



**Free Consultation**
to solve your financial problems

**Mortgage 4US**
Independent Financial Advisers

**Karthigesu Sivanesan** MBA BSc Eng FPC
Independent Financial Adviser
**Mobile:** 07775 578 552

**Tim Drakes** MSci CEFA CEMAP
Independent Financial Adviser
**Mobile:** 07515 891 295

**020 7386 0924**
**www.mortgage4usltd.com**
6 Barton Road, London W14 9HD

FSA

Mortgage 4US Ltd (FSA No.478944) is an appointed representative of Unleash Advice Partnership Ltd (FSA No. 473157) which is authorised and regulated by the Financial Service Authority.










# புதிய யாழ்ப்பாணம்

















படங்கள்:
ஜொனிஸ்டன்



பிரபாகரனின் பிறந்தநாளை நானும் கொண்டாடினேன்தான். ஆனால்...

**சந்திப்பு | ஈ. வி. கே. எஸ். இளங்கோவன்**

# ஈழத் தமிழர் உரிமைகளில் இந்தியா உறுதி

## சம உரிமையுடன் அவர்கள் வாழவேண்டும்

முன்னாள் மத்திய வர்த்தக, கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் 'அரசியலுக்கு சரிப்பட்டுவராத அதிக நேர்மையானவர்' என்று சொன்னார், இந்தியாவின் மிக அநுபவம் வாய்ந்த பத்திரிகையாளர் ஒருவர்.

பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கரின் பேரனான இளங்கோவன், இந்திய தேசிய காங்கிரஸ் பிரமுகரான ஈ. வி. கே. சம்பத்தின் புதல்வர். தந்தையாரைப்போலவே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்.

2004 பொதுத் தேர்தலில் கோபிசெட்டிபாளையம் தொகுதி எம்.பி.யாக லோக்சபாவுக்கு தெரிவாகி அமைச்சரான இவர், கடந்த மே மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் ஈரோடு தொகுதியில், மக்கள் திராவிட முன்னனேற்ற கழக வேட்பாளரிடம் தோல்வியுற்றார். தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் ஒரு விமர்சனப் போக்கைக்கொண்ட இவரின் அடையாறு இல்லம், கடந்த மாவீரர் தினத்தன்று பெற்றோல் குண்டு வீச்சுக்குள்ளானது. அதேதினம், கனடாவில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசிய திரைப்பட இயக்குநர் சீமான், கனடிய பொலிசாரால் நாடுகடத்தப் பட்டார்.

மாலி

**❛ இலங்கையில் சீனா, பாகிஸ்தான் மாத்திரமல்ல, அமெரிக்க நலனும் இருப்பதை நாம் தெரிந்துதானிருக்கிறோம். ஆனால், இந்தியாவின் நலனில் இவை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்திவிடாதபடி பார்த்துக்கொள்ள இந்தியாவுக்கு வழிவகைகள் தெரியும் ❜**

**கேள்வி: இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்த அந்த யுத்தத்தை நிகழ்த்தியது இந்தியாவேதான் என்று தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ. நெடுமாறன், மக்கள் திராவிட முன்னேற்ற கழக தலைவர் வை. கோபால்சாமி ஆகியோர் கூறுகிறார்கள்; இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?**

**இளங்கோவன்:** நேருவின் காலம் தொடக்கமே இலங்கையின் பூர்வீக தமிழர்களதும், இலங்கையில் வாழ்கின்ற இந்திய வம்சாவழித் தமிழர்களதும் நலன்களில் இந்தியா அக்கறை கொண்டுதானிருக்கிறது. ஆனால், பிரபாகரனின் தீவிரவாத நடவடிக்கைகளையும் அவரின் ஈவிரக்கமற்ற - மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளையும் உலக நாடுகள் பலவற்றையும் போலவே இந்தியாவும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியா பிரிவினையையும் தீவிரவாதத்தையும் எதிர்கொண்ட ஒரு நாடு.

ஆனால், விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக ஈழத் தமிழர்களை இந்தியா நேசிக்கவில்லை என்பதும் அர்த்தமல்ல. பழ. நெடுமாறன், 'வைகோ' ஆகியோரை நான் மதிக்கிறேன். ஆனால், நான் நினைக்கிறேன் அரசியலில் அவர்களுக்கு எற்பட்டுவிட்ட விரக்தியில் தடம் மாறி, இல்லாத பிரபாகரனை உயிருடன் இருப்பதாக கூறி, தீவிரவாதத்துக்கு துணைபோகிறார்கள். இந்த போக்கை அவர்கள் மாற்றிக்கொண்டு, ஆக்கரீதியான வழியில் இலங்கைத் தமிழர்களுக்கு அவர்கள் பாடுபடவேண்டும். அப்போது தமிழக மக்களும் அவர்களுக்கு ஆதரவளிப்பார்கள். அரசும் அவர்களுக்கு துணைநிற்கும்.

நான் கடைசிவரை, எனது மனசாட்சிக்கு சரி என்று தோன்றுவதை சொல்வேன்; செய்வேன். பிரபாகரனின் பிறந்தநாளை நானும் கொண்டாடினேன்தான். ஆனால், ராஜீவ் காந்தியை அவர் கொன்றார். இலங்கையில் பல அரசியல் தலைவர்களை அவர் கொன்றார். மற்றைய இயக்க தலைவர்களை - போராளிகளைக் கொன்றார். முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி இரவோடிரவாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றினார். இந்த வன்முறைப் போக்கைத்தான் நான் எதிர்க்கிறேன்.

**கேள்வி: விடுதலைப் புலிகளுடைய நடவடிக்கைகள் எப்படியிருந்தாலும், அந்த அமைப்பு தோற்றுவதற்கான 'நியாயமான காரணம்' இருந்தது என்பது யதார்த்தமானது. அதனாலேதான் இந்தியாவின் அநுசரணை, ஆதரவும்கூட ஆரம்ப காலங்களில் இருந்தது. இலங்கையில்கூட விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை தமிழ்மக்கள் முழுக்கமுழுக்க ஆதரித்தார்களா என்பதைவிட, அந்த இயக்கம் உருவாவதற்கான காரணம் அவர்களை அப்படியொரு நிலைக்கு நிர்ப்பந்தித்தது என்பது முக்கியமானது. இப்போது, விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில், அந்த மக்களின் தீர்க்கப்படாத பிரச்னைகளின் தீர்வுக்கான ஒரு தார்மீக பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது தானே?**

இலங்கையில், தமிழ் மக்களும் அந்த நாட்டில் முதல்தர குடிமக்களாக, சம உரிமையுடன் வாழ்வதற்கான முயற்சிகளில் இந்தியா நிச்சயமாக ஈடுபடும். இலங்கையின் ஜனநாயக நடவடிக்கைகளில் இந்தியா தலையிடமாட்டாது என்றாலும், அங்கு தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும் என்பதில் இந்தியா உறுதியாகவே இருக்கிறது.

**கேள்வி: இந்தியாவில் தங்கியிருக்கின்ற இலங்கை தமிழ் அகதிகளுக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கவேண்டுமென்று திராவிட முன்னேற்ற கழகம் கோருகிறது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

நாமும் அதனை வரவேற்கிறோம். ஒருமைப்பாடும் மத சார்பின்மையுமான இந்தியாவின் அரசியலமைப்பை ஏற்று, இந்திய குடிமக்களாக குடியுரிமைபெற உண்மையாக விரும்புபவர்களுக்கு அது வழங்கப்படலாம். அதேவேளை, இந்த போர்வையில் தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் புகுந்துவிடாத விளிப்பும் அவசியமானது.

**கேள்வி: இலங்கைக்கும் சீனாவுக்குமிடையேயான நட்பு, பிராந்திய ரீதியில் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் எதனையும் ஏற்படுத்தவில்லையா?**

ஒவ்வொரு நாடும் தன்னுடைய இறைமையை - சுதந்திரத்தை காப்பாற்றவும் பொருளாதாரத்தைப் பெருக்கவும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அது அண்டை நாடுகளுக்கு சிலசமயங்களில் சில சிரமங்களை ஏற்படுத்தலாம். ஆனால், அது இன்றைய காலகட்டத்தில் தவிர்க்க இயலாதது. இலங்கையில் சீனா, பாகிஸ்தான் மாத்திரமல்ல அமெரிக்க நலனும் அங்கு இருப்பதை நாம் தெரிந்துதானிருக்கிறோம். ஆனால், இந்திய நலனில் இவை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்திவிடாதபடி பார்த்துக்கொள்ள இந்தியாவுக்கு வழிவகைகள் தெரியும். அதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டேயிருக்கிறது.

**கேள்வி: கச்சதீவை இந்தியா மீண்டும் தனதாக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கோரிக்கை எழுப்பப்படுகிறதே...?**


கச்சதீவை இந்தியா ஏற்கனவே இலங்கைக்கு வழங்கிவிட்டது. நாம் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தி, அதனை ஏற்றுக்கொண்டால் அதன்படி நடப்பதுதான் அழகு. அந்த விதத்தில் கச்சதீவு ஒப்பந்தத்தை இந்தியா ஏற்றுக்கொள்கிறது. அதேபோல, இலங்கையும் நேரு காலத்திலிருந்து இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை முழுமையாக அங்கீகரித்து நடைமுறைப்படுத்தவேண்டும். ■

# கருணாநிதி பதவி விலகுவாரா?

**அவர் விரும்பினாலும், குடும்ப பிரச்னை இதில் அவருக்கு பெரும் பிரச்னையாகிறது**

பிங்காட்சன்






தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி எதிர்வரும் ஜூன் மாதத்துக்குப் பின்னர் அதாவது, உலக செம்மொழி தமிழ் மாநாடு முடிந்தபின்னர், பதவியிலிருந்து விலகி, ஓய்வெடுக்கப்போவதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை எவரும் - அவருடைய கட்சித் தொண்டர்கள்கூட, உண்மையென்று எடுத்துக்கொள்ளவில்லை. இம்மாதிரியான அறிவிப்புகளை அவர் வெளியிடுவது புதிதன்று. சில ஆண்டுகளுக்கு முன்னர், விடுதலைப் புலிகள் 'வைகோ' வைப் பயன்படுத்தி தன்னைக் கொலை செய்யத் திட்டமிட்டதாக கூறி பதவி விலக முன்வந்தார். தொண்டர்கள் கண்ணீர் பெருகினர். ஆனால், அவர் பதவி விலகவில்லை. தி. மு. க. வில் முக்கிய தலைவராக - மகன் ஸ்டாலினுக்கு போட்டியாக, இளைஞர்களின் தலைவனாக உருவாகிக்கொண்டிருந்த வைகோ (வை. கோபால்சாமி), கட்சியிலிருந்து விலக நேர்ந்தது. 2001ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின்போது, "இதுவே நான் போட்டியிடும் கடைசித் தேர்தல்'' என்று அறிவித்தார். ஆனால், அதன்பிறகு போட்டியிட்டு, ஐந்தாவது முறையாக முதலமைச்சரானார். அவருடைய திராவிட முன்னேற்றக் கழக (தி.

**'தம்பி ஸ்டாலின் முதலமைச்சராகட்டும்; எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், கட்சியின் தலைமைப் பொறுப்பை எனக்குக் கொடுங்கள்'**
**- அழகிரி**


மு. க.) வரலாற்றைப் பார்த்தால், இந்த முதலமைச்சர் பதவியை எப்படி தன் சாணக்கிய தந்திரத்தால் பெற்றார் என்பது தெரியவரும். அண்ணாவின் மறைவுக்குப் பின் நெடுஞ்செழியன், மதியழகன், அன்பழகன் என்று மூத்த தலைவர்கள் பலர் இருக்க, அவர்களை ஓரம்கட்டிவிட்டு அடைந்த பதவியல்லவா அது?

எம். ஜி. ஆரின் மறைவுக்குப் பின்னர், "எனக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுங்கள்; உங்களுடைய செருப்பாக இருப்பேன்'' என்று மன்றாடிப் பெற்றதல்லவா இந்த முதலமைச்சர் பதவி! எனவேதான், அவருடைய அறிவிப்பை தொண்டர்கள் ஏற்க தயங்குகி





அழகிரி



ஸ்டாலின்



கனிமொழி

படங்கள்: யோகா

றார்கள். ஆனால், இம்முறை பதவி விலக தடையாக இருப்பது அவரு டைய குடும்ப பிரச்னைதான்.

கலைஞருக்கு வயது 86. இன்னும் தளராத உற்சாகத்துடன் பல விழாக்க ளில் கலந்துகொள்கிறார். என்றாலும், உடல் தளர்ந்துவிட்டது.

"தினமும் ஐந்தரை மணிக்கே எழுந் துவிடும் என்னால், இன்று காலை 10 மணிவரை கண்விழிக்க முடியவில்லை. என் குடும்பத்தினரே பயந்துபோய் மருத்துவருக்கு ஆளனுப்பிவிட்டனர்'' என்று அவரே ஒருமுறை கூறினார்.

எனவே, இம்முறை அவர் உண்மை யிலேயே பதவி விலகத்தான் விரும்புகி றார் போலவே தோன்றுகிறது. ஆனால், அவர் பதவியிலிருந்தும் அரசி யலிலிருந்தும் விலகிவிட்டால் விளை வுகள் எப்படி இருக்கும்?

ஏற்கனவே கருணாநிதிக்கு கட்சி யின்மீதிருந்த பிடிப்பும் குடும்பத்தின்மீ திருந்த அதிகாரமும் தளர்ந்துவிட்டன என்றே தோன்றுகிறது. இளைய மகன் மு. க. ஸ்டாலின்தான் அடுத்த முதல மைச்சர் என்று உறுதிப்படுத்தும் வகை யில் ஸ்டாலினை துணை முதலமைச்ச ராக்கிவிட்டார். மூத்த மகனுக்கு மத்திய அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொடுத்து, டில்லிக்கு அனுப்பிவிட் டார். ஆனால், பிரச்னை தீரவில்லை.

டில்லி மந்திரிப் பதவியை 'அஞ்சா நெஞ்சன்' அழகிரி விரும்பவில்லை. மத் திய அமைச்சரவைக் கூட்டங்களுக்கு அவர் செல்வதேயில்லை. ஏதேனும் இடைத் தேர்தலில் போட்டியிட்டு, மாநில அரசில் மந்திரி ஆகிவிடுவார் என்றுகூட ஊகங்கள் எழுந்தன.

'தம்பி ஸ்டாலின் முதலமைச்சரா கட்டும்; எனக்கு ஆட்சேபணை யில்லை. ஆனால், கட்சியின் தலை மைப் பொறுப்பை எனக்குக் கொடுங் கள்'' என்று கேட்கிறார் மு. க. அழகிரி.

ஏற்கனவே அழகிரி தென் மாவட் டங்களில் முடிசூடா மன்னனாக கோலோச்சிவருகிறார். வட மாவட் டங்களிலும் தனது செல்வாக்கை விரி வுபடுத்த முயன்றுவருகிறார். ஸ்டாலி னுக்கும் அழகிரிக்குமிடையே 'பனிப் போர்' நிலவுகிறது. இந் நிலையில், கட்சி அழகிரியின் கைக்குப் போய்விட் டால், தான் வெறும் செல்லாக்காசாகி விடுவேன் என்று ஸ்டாலின் அஞ்சுகி றார்.

மதுரையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட அழகிரியின் பிறந்தநாள் விழாவில் 'அப்பாவுக்குத் தப்பாமல் பிறந்த பிள்ளை' என்ற, அழ கிரியின் வரலாறு கூறிப் புகழும் புத்தகம் வெளியிடப்பட்டது. 'அழகிரி - *Chemical Minister - CM* அழகிரி' - என்று எங்கெங்கு நோக்கினாலும் போஸ்டர்கள், பிரமாண்டமான விளம்பரங்கள். அந்த CM அழகிரி *'Chief Minister'* அழகிரிதான் என்று அவை அறிவித்தன.

மத்திய மந்திரிப் பதவியை உதறி விட்டு, மாநில அரசுக்கு அழகிரி வரு வது, எப்போதுமே தனக்கு ஆபத்து என்று ஸ்டாலின் கருதுகிறார். கருணா நிதி ஓய்வுபெறுமுன்னர் தனக்குக் கட் சிப் பொறுப்பு கிடைக்கவேண்டும் என்று அழகிரி விரும்புகிறார்.

கருணாநிதி பதவியை விட்டுவிட் டால் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை; தங்கள் செல்வாக்கு குறைந்துவிடும்; தாங்கள் ஒதுக்கப்பட்டுவிடுவோம் என்று அவருடைய துணைவியார் ராசாத்தி அம்மாளும் மகள் கனிமொழி யும் கருதுவதாக தெரிகிறது. எனவே, கருணாநிதி ஓய்வுபெறுவதை அவர் கள் விரும்பவில்லை என்றே கூறப்படு கிறது.

கருணாநிதி பதவி விலகிவிட்டால், கனிமொழிக்கு மத்தியில் அமைச்சர் பதவி கிடைத்தால்தான் பாதுகாப்பு என்று ராசாத்தி அம்மாள் கருதுவதாக கூறப்படுகிறது. இப்படியான குடும்பப் பிரச்னைகள் காரணமாக, உண்மையி லேயே விலக நினைத்தாலும் பதவி விலகமுடியாத இக்கட்டான நிலைக்கு கருணாநிதி தள்ளப்பட்டிருக்கிறார் என்றே தெரிகிறது. ஏற்கனவே, மூத்த மகன் அழகிரிக்கு செல்வாக்கு மிகுந்து வருகிறது. முக்கிய எதிர்க்கட்சியான அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பலமிழந்து உற்சா கம் குன்றி இருக்கும் நிலையில், அந்தக் கட்சியில் உள்ள முக்கிய பிரமுகர் களை - செல்வாக்கான புள்ளிகளை அங்கிருந்து தி. மு. க. வுக்கு கொண்டுவ ரும் பணியை வெற்றிகரமாக நிறைவேற் றிவருகிறார் அழகிரி. அண்மையில் நடந்த அனைத்து இடைத் தேர்தல்களி லும் மகத்தான வெற்றியைக் கட்சிக்கு உருவாக்கிக் கொடுத்தவர் அழகிரிதான் என்பதையும் தொண்டர்கள் உணர்ந்தி ருக்கிறார்கள். தன்னிடம் கட்சியை ஒப் படைக்காமல் கருணாநிதி பதவிவில கக்கூடாது என்கிறார் அழகிரி.

எனவே, கருணாநிதியின் காலத்துக் குப் பிறகு உடனடியாக ஸ்டாலின் முத லமைச்சராகக்கூடும் என்றாலும், அந் தப் பதவியில் அவர் நீண்ட நாள்கள் நீடிப்பாரா என்பது சந்தேகமே. கட்சி பிளவுபடும் வாய்ப்பும் இருக்கிறது என் கிறார்கள் அரசியல் அவதானிகள். ■

# மொழிவாரி மாநிலம்

## நேருவின் திட்டத்தில் இணைக்கப்பட்ட தெலுங்கானா மீண்டும் பிரிவினை கோருகிறது

தனஞ்செயன்

நூற்றுக்கனக்கான உயிர்களையும் கோடிக்கணக்கான மதிப்புள்ள உடைமைகளையும் பலிகொண்ட தெலுங்கானா பிரச்னை இன்று இந்தியாவின் முன் பெரும் சவாலாக உருவெடுத்து நிற்கிறது. ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்ற அரை நூற்றாண்டுக் கோரிக்கை இன்று பற்றி எரியும் பிரச்னையாக மாறியிருக்கிறது. மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீஹார் ஆகிய மாநிலங்கள் மிக எளிதாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில், தெலுங்கானா விவகாரம் மட்டும் ஏன் இந்த அளவுக்கு பிரச்னையாக மாறியிருக்கிறது?

இதற்கான விடையைக் காண வரலாற்றில் சற்றுப் பின்னோக்கிப் பயணம் செய்யவேண்டும். இந்தியா 'தனிப் பெருமை' கொண்டாகக்கூடிய பிரச்னைகள் என்று இரண்டு பிரச்னைகளைக் குறிப்பிடலாம். முதலாவது, சாதிப் பிரச்னை; இரண்டாவது மொழிப் பிரச்னை. உலகில் வேறு எந்த நாட்டிலும் இந்த இரு விஷயங்களும் இந்த அளவுக்கு நீடித்திருப்பதோ, தொடர் இழப்புகளை உருவாக்குவதோ இல்லை. இந்த இரு விஷயங்களுக்கும் துணை விளைவுகளும் அதிகம். இதில், மொழிப் பிரச்னை சுதந்திர இந்தியாவில் பூதாகார வடிவை எடுத்தது. இந்தப் பூதத்தின் பசியை தணிக்க, நேரு மொழிவாரியாக மாநிலம் பிரிக்கப்படும் என்று அறிவித்து, அதை நடைமுறைப்படுத்தினார். ஆனால், குடிக்கும் தண்ணீர் சில சமயம் மூச்சுக் குழாயில் புகநேர்ந்தால் என்னவாகுமோ, அதேநிலைதான் சில மாநிலங்களை மொழியை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு பிரித்தபோது ஏற்பட்டது. தொண்டைக் கமறல், மூச்சுத் திணறல் போலவே, தொடர் தகராறுகள், பெரும் கலவரங்கள் என்பவை தொடர்கதையாகிவிட்டன. இதுதான் தெலுங்கானாவை உள்ளடக்கிய ஆந்திராவிலும் நடக்கிறது என்று கூறலாம்.

கலவரங்கள் ஒருபுறமிருக்க, தெலுங்கானா கோரிக்கை பலவித நியாயமான அம்சங்களை உள்ளடக்கியது. தெலுங்குமொழி பேசினாலும்கூட, தெலுங்கானா என்று அறியப்படும் பகுதியும் இதர ஆந்திரப் பகுதியும் அரசியல் ரீதியாக, மக்களின் வாழ்வுமுறை ரீதியாக கடந்த 800 ஆண்டுகளாக தனித்தன்மை படைத்ததாகவே இருந்துவந்துள்ளன. தெலுங்கானாவில் பத்து தனி மாவட்டங்கள் இருக்கின்றன. அவை, மகபூப் நகர், நலகொண்டா, ரஸ்கா ரெட்டி, மேடக், கரீம் நகர், நிஜாம்பாத், அடிலாபாத், ஹைதராபாத், வாரங்கல், கம்மம். இவற்றில், ஐந்து மாவட்டங்களின் பெயர்கள் நேரடி இஸ்லாமிய பெயர்கள் என்பதைக் காணலாம். இதற்குக் காரணம் இருக்கிறது. இவை அனைத்தும் சுதந்திரம் அடையும்வரை நிஜாம் மன்னர்களின் ஆட்சியில் இருந்தன. பிரிட்டிஷ் ஆட்சியில்கூட தெலுங்கானா பகுதி நிஜாம் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பிரிட்டிஷ்காரர்களுக்கு முன்னால் ஆட்சிசெய்த விஜயநகரப் பேரரசு போன்ற அரசுகள்கூட, ஏனைய ஆந்திராவைத்தான் ஆட்சிசெய்தன. ஏனைய ஆந்திராவில் ராயலசீமா உள்ளிட்ட 13 மாவட்டங்களில் ஒரு பெயர்கூட இஸ்லாமியச் சாயலில் இல்லை.

தெலுங்கானா பகுதியில் ஆட்சி செலுத்திய நிஜாம், அனைவருக்குமான மன்னராக நடந்துகொண்டார் என்று கூறமுடியாது. தெலுங்கு மொழியைக் கற்றுக்கொள்ளக்கூட அங்கு உரிமை மறுக்கப்பட்டது. பள்ளிகளில் உருது மொழிதான் கற்பித்தல் மொழியாக இருந்தது. தெலுங்கு மொழி பழகு மொழியாக மட்டுமே இருந்தது. மக்களின் வாழ்க்கைத் தரமும் மிக மோசமானதாகவே இருந்தது. இதை மக்கள் முடிந்தவரையில் எதிர்த்துவந்தார்கள். கம்யூனிச சிந்தனை உலகுக்கு அறிமுகமான சில காலத்திலேயே, தெலுங்கானாவை அது வந்தடைந்தது. பதப்படுத்தப்பட்ட விளைநிலம்போல தெலுங்கானாவின் நிலை இருந்ததால், கம்யூனிச விதை உடனடியாக வேர்விட்டு, தழைத்து வளர்ந்தது. இந்திய சுதந்திர காலத்தில், கம்யூனிஸ்டுகளின் தாக்கம் பெருமளவில் தெலுங்கானாவில் இருந்தது. இன்றும்கூட, ஆந்திராவையும் அண்டை மாநிலங்களையும் அச்சுறுத்தும் நக்சலைட்டுகளின் தாயகம் தெலுங்கானா பகுதிகள்தாம்.

சுதந்திரத்துக்குப் பின்னர் நிஜாம் மன்னர் இந்தியாவுடன் இணைய மறுத்தார். 1948ஆம் ஆண்டில் இந்திய இராணுவம் ஹைதராபாத்தில் நுழைந்து, நிஜாம் படைகளைத் தோற்கடித்தது. புதிய மாநிலமாக ஹைதராபாத் மாநிலம் உருவானது. அப்போதுகூட, கடலோர மாவட்டங்களான நெல்லூர், பிரகாசம் குண்டூர், கிருஷ்ணா, கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, விசாகபட்டினம், விஜய நகரம், ஸ்ரீகாகுளம் போன்ற ஒன்பது மாவட்டங்கள், இவைதவிர, ராயலசீமா பகுதிகள் போன்றவையும் ஹைதராபாத் மாநிலத்தின் பகுதிகளாக ஆகவில்லை. இவை அனைத்தும் சென்னையைத் தலைநகராகக்கொண்ட சென்னை மாகாணத்துக்குள் இருந்தன. 1950களிலேயே இந்த மாவட்டங்கள் சென்னையிலிருந்து பிரிந்து, தனியாக தெலுங்கு பேசும் ஆந்திர மாநிலமாக ஆக்கப்படவேண்டும் என்று பெரும் போராட்டங்கள் நடந்தன. 1952இல் சென்னை மாகாண தேர்த



லில், இதற்கு ஒப்புக்கொள்ளாத காங்கிரசுக்குச் சட்டசபையில் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதே கால கட்டத்தில் ஆந்திரா மாநிலம் கேட்டு உண்ணாவிரதமிருந்த பொட்டி ஸ்ரீராமுலு இறந்துபோனார். வேறு வழியின்றி, காங்கிரஸ் அரசு ஆந்திராவை உருவாக்கியது. இதன் தலைநகரம் அப்போது ஹைதராபாத் அல்லை. கர்னூல் தலைநகராக அறிவிக்கப்பட்டது.

இதன் பிறகுதான், மொழிவாரி மாநிலங்கள் அமைப்பது என்ற முடிவை அன்றைய காங்கிரஸ் அரசு செயல்படுத்த முனைந்தது. 1956ஆம் ஆண்டில், மொழியை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு தெலுங்கானாவையும் சேர்த்து ஆந்திரப் பிரதேசம் உருவானது. தலைநகரம் கர்னூல் என்பது மாறி, ஹைதராபாத் என்று முடிவானது. அதன்பின், தெலுங்கானா மறுபடியும் புறக்கணிப்புக்கு உள்ளாகும் பகுதியானது. ஏற்கனவே அப்பகுதி மக்கள் கல்வி, தொழில்நுட்பம் போன்றவற்றில் பின்தங்கிய நிலையிலேயே இருந்தார்கள். மற்றும் இயற்கை வளங்களும் குறைவாகவே இருந்தன. ஒன்றிணைந்த ஆந்திரமாக மாறிய பிறகு, அதிகாரம், பதவிகள் போன்றவை தெலுங்கானா பகுதியினருக்குக் கிடைக்கவில்லை. கடலோர ஆந்திரப் பகுதியைச் சேர்ந்தவர்கள்தாம் தெலுங்கானா பகுதிகளிலும் அதிகாரம் செலுத்தினர். ஆந்திராவின் பகுதியில் இருந்த மாவட்டங்களான விஜயவாடா, திருப்பதி மற்றும் விசாகப்பட்டினம் போன்றவை நகரங்களாகி வளர்ச்சிபெற்றன. இதுபோல ஒரு நகரமேனும்கூட தெலுங்கானா பகுதியில் முன்னேறவில்லை. ஏற்கெனவே வரட்சியான பிரதேசமான தெலுங்கானா, பல்வேறு விதங்களில் பின்தங்கியதாகவே இருந்தது. அந்தப்பகுதி மக்கள் பேசும் தெலுங்கு மொழிகூட, திரைப்படங்களில் கேலிக்கு உள்ளானது.

## கலவரங்கள்; மாணவர் போராட்டங்கள்; தீக்குளிப்புகள்

## பிரச்னையின் மூலகாரணம் வளம்கொளிக்கும் 'ஹைதராபாத்'

அதிருப்தி விரைவிலேயே ஆத்திரமாக மாறி, போராட்டமாக வெடித்தது. மிகப்பெரும் போராட்டம் 1969இல் சென்னா ரெட்டி தலைமையில் நடந்தது. உஸ்மானியா பல்கலைக் கழக மாணவர்கள் 350 பேர் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியானார்கள். பொட்டி ஸ்ரீராமுலுவின் ஒரே ஓர் உயிர் போனதன் விளைவாக ஆந்திர மாநிலம் உருவாவது உறுதிசெய்யப்பட்டது. ஆனால், 350 மாணவர்கள் பலியான பின்புகூட, தெலுங்கானா தனி மாநிலமாக அறிவிக்கப்படவில்லை. இதற்கு முழுமுதல் காரணம் தெலுங்கானா தலைவர்கள்தாம். இவ்வளவு பெரிய போராட்டத்தை நடத்திய சென்னா ரெட்டி, இந்திரா காந்தியின் அழைப்புக்கு இணங்கி காங்கிரசில் சேர்ந்து, ஒட்டுமொத்த ஆந்திராவுக்கு முதல்வரானார். அதன்பின், தமிழக கவர்னர் உள்பட, வாழ்நாள் முழுவதும் பதவிகளால் குளிப்பாட்டப்பட்டார். இந்தப் பகுதியிலிருந்துவந்த இன்னொரு முக்கியமான தலைவர் நரசிம்மராவ். அவரும் இதைவைத்தே வளர்ந்து, நாட்டின் பிரதமராகவும் ஆனார். இவர்கள் எல்லோருமே, ஏற்றிவிட்ட ஏணியை எட்டி உதைத்தவர்கள்தாம்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக போராடியும் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க முடியவில்லை. காங்கிரசின் பயம்தான் இதற்கு முக்கிய காரணம். தொடக்கத்தில் தெலுங்கானா பகுதியில் கம்யூனிஸ்டுகளின் கை ஓங்கியிருந்தது. ஒருவேளை தேர்தல்கள் நடந்தால் கேரளா, மேற்கு வங்காளம்போல, தெலுங்கானாவும் கம்யூனிசப் பாதையில் பயணப்படும் மாநிலமாகிவிடுமோ என்று காங்கிரஸ் பயந்தது. இதனாலேயே, எப்பாடுபட்டாவது தெலுங்கானா தனியாகப் பிரியக்கூடாது என்று அது நினைத்தது. அல்லாவிடின், மத்தியிலும் மாநிலத்திலும் பல ஆண்டுகள் பதவியில் இருந்த அக்கட்சி நினைத்திருந்தால் இதனைச் செய்திருக்கலாம்.

1990களில் 'தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி' என்ற பெயரில், முதலில் இயக்கமாகவும், பின்னர் அதையே கட்சியாகவும் மாற்றி, அதன் தலைவர் சந்திரசேகர ராவ் பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்திவந்தார். இதற்கான 'பலனாக' பலமுறை அரசு பதவிகளையும் அநுபவித்தார். தன்னைத் தேர்ந்தெடுத்தால், தெலுங்கானா பெற்றுத்தருவேன் என்று சொல்லியே இவர் மக்களிடம் வாக்கு கேட்டார். ஆனால், அவர் பெற்றுக்கொண்டது மந்திரி பதவியே. இதைத் தெலுங்கானா மக்கள் மறக்காமல், சமீபத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சந்திரசேகர ராவின் கட்

சியை மண்ணைக் கவ்வவைத்தனர். காங்கிரஸ் இதை வேறுவிதமாகப் பார்த்தது. சந்திரசேகர ராவ் மக்களின் நம்பிக்கையை இழந்து, செல்லாக்காசாகிவிட்டார் என்ற முடிவுக்குவந்து, அவரை அலட்சியம் செய்தது. அவருடன் தெலுங்கானா கோரிக்கையும் பின் தள்ளப்பட்டது.

அரசியலில் அநாதையாவதற்கு எந்த அரசியல்வாதியும் விரும்பமாட்டார். சந்திரசேகர ராவும் அப்படித்தான். மறுபடியும் தெலுங்கானாவுக்காக உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தார். முதலில் யாரும் அதைக் கண்டுகொள்ளவில்லை. உடல்நிலை மோசமாகி, மருத்துவமனையில் சேர்ந்தவுடன், பொலிஸ் மற்றும் அரசு வற்புறுத்தலின் பேரில் சந்திரசேகர ராவ் மருத்துவமனையில் பொலிஸ் உயர் அதிகாரி வழங்கிய பழரசத்தைக் குடித்தார். ஆனால், அதற்குள் மாணவர்களும் பெருவாரியான மக்களும் ராவுக்கு ஆதரவாக களத்தில் குதித்து, போராட்டத்தைத் தீவிரப்படுத்தியிருந்தனர். இதற்கெல்லாம் காரணமான சந்திரசேகர ராவ் தனது போராட்டத்தை வாபஸ் பெறும் வகையில் பழரசம் குடிக்கிறார் என்ற வகையில் அரசாங்கத்தின் பிரச்சாரம் இருந்தது. ஹைதராபாத் மற்றும் தெலுங்கானா பகுதிகளில் சந்திரசேகர ராவ் பழரசம் குடிப்பது தெருக்களில் பொலிசாரால் திரையிட்டுக் காண்பிக்கப்பட்டது. இதைப் பார்த்து கலவரம் அடங்கும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக, மாணவர்களின் கொந்தளிப்பு அதிகரித்தது. சந்திரசேகர ராவ் தங்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டார் என்றுகூறி, மாணவர்கள் மற்றும் போராட்டக்காரர்கள் அரசு சொத்துக்களோடு சேர்ந்து, ராவின் கட்சி அலுவலகங்களையும் தாக்க ஆரம்பித்தனர்.

இதை அறிந்த சந்திரசேகர ராவ், மறுபடியும் உண்ணாவிரதம் தொடங்கினார். இதை மற்றையவர்கள் நம்புவதற்கு இரண்டு நாள்களாகியது. அரசும் அலட்சியம் செய்தது. ஏற்கனவே உண்ணாவிரதம் இருந்ததால் பலவீனமான அவர் உடல், சட்டென்று மோசமானது. இதைப்பற்றி அறிந்தும் கூட, 'இந்த நாடகம் எத்தனை நாளைக்கு என்று பார்க்கலாம்' என்று மத்தியிலுள்ள ஆளும் காங்கிரஸ் நினைத்தது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டும் கூட ராவ் உணவருந்த மறுத்தார். இதனால் அவருக்கு மறுபடியும் ஆதரவு கூடியது. பலர் அவருக்கு ஆதரவாக தீக்குளித்து இறந்துபோனார்கள். தெலுங்கானா போராட்டத்தால் ஆந்திரா ஸ்தம்பித்துப்போனது. கட்சிகள் இதைக்கண்டு, தங்கள் பங்குக்கு 'தெலுங்கானாவுக்கு ஆதரவு' என்று அறிவித்தார்கள். அலட்சியம் செய்யப்பட்ட சந்திரசேகர ராவ், மறுபடியும் பிரதான இடத்தைப் பிடித்தார். முதல்வர், ஆளுநர், மாநில அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் ஆகியோர் ராவ் உண்ணாவிரதத்தைக் கைவிடவேண்டும் என்று நேரிலும் செய்தி ஊடகங்கள் மூலமும் வலியுறுத்தினார்கள். உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், மருத்துவ மனையில் ஆபத்தான நிலையில் இருந்த சந்திரசேகர ராவுடன் தொலைபேசிமூலம் பேசினார். ஆனாலும், தெலுங்கானாபற்றி அறிவிப்பு வரும் வரை உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை என்று ராவ் கூறினார்.

ஒருவேளை ராவுக்கு ஏதாவது நடந்தால், அதனால் ஏறக்குறைய அத்தனை கட்சிகளுக்குமே தெலுங்கானாவில் ஓர் இடம்கூடக் கிடைக்காது என்பது நிச்சயமானது. ஆரம்பத்திலேயே சந்திரசேகர ராவை அலட்சியம் செய்யாமல் இருந்திருந்தால், உண்ணாவிரதத்துக்கு அடுத்த நாளே அவரைக் கைது செய்து, மருத்துவமனையில் சேர்த்திருக்கலாம். ஆனால், நடந்து முடிந்த தேர்தல்களில் அவரது கட்சி படுதோல்வி அடைந்திருந்த அம்சத்தை மட்டும் கணக்கிட்டு, ஆளும் காங்கிரஸ் நிலையைச் சரியாகக் கணிக்கத் தவறியது. அதன்பின்னர், நிலைமை கைமீறிப் போய்விடுமோ என்ற நிலை வந்தவுடன் அரசு அவசரமாகச் செயல்பட்டது. இதன் விளைவாக, 2009 டிசம்பர் 9ஆம் தேதி நள்ளிரவில் மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் ஓர் அறிக்கையை வெளியிட்டார். 'நாட்டின் 29ஆவது மாநிலமாக தெலுங்கானா உருவாக்கப்படும்' என்பதுதான் அது. சந்திரசேகர ராவ் உடனடி கதாநாயகனாக ஆனார்.

ஆனால், நிலைமை மற்றொரு விதத்தில் மோசமானது. ஏனைய ஆந்திராவைச் சேர்ந்த மக்கள், ஆந்திராவைப் பிரிக்கக்கூடாது என்று பேராட்டத்தில் குதித்தனர். நாட்டிலேயே மிகவும் முன்னேறிய நகரங்களில் ஒன்றான ஹைதராபாத், தெலுங்கானாவுக்குச் சென்றுவிடும் என்பது இந்த எதிர்ப் போராட்டங்களுக்கான காரணங்களில் முக்கியமானது. இந்தப் போராட்டத்தில் பாரதிய ஜனதா கட்சியைத் தவிர, காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் இறங்கின. சந் திரசேகர ராவ் உயிருக்குப் போராடும் காலகட்டம் வந்ததும், காங்கிரஸ், தெலுங்கு தேசம், பிரஜா ராஜ்யம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தெலுங்கானா கோரிக்கையை ஆதரித்து தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்தனர். அமைச்சர் சிதம்பரம், தெலுங்கானா அமைக்கப்படும் என்று அறிவித்தவுடன், மேற்படி கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆந்திராவைப் பிரிக்கக்கூடாது என்று போராட்டத்தில் குதித்தனர். ராஜிநாமா நாடகத்தின் இரண்டாவது கட்டம் அரங்கேறியது. தெலுங்கானாவைத் தவிர, ஏனைய இடங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள். ஒன்றுபட்ட ஆந்திராவுக்கு ஆதரவு தெரிவித்துத் தங்களது பதவிகளை ராஜிநாமா செய்தனர். இதற்கிடையில் மத்திய அரசு, ஜனாதிபதி ஆட்சியை அமுல் செய்யப்போவதாக ஒரு 'செய்தியை'ப் பரவவிட்டது. 'ஒன்று பட்ட' ஆந்திராவுக்கு ஆதரவு பெருகியதும், மத்திய அரசு, 'தெலுங்கானா அறிவிப்பை உடனடியாகச் செயல்படுத்த முடியாது' என்று அறிவித்தது. சில நாள்களுக்கு தெலுங்கானா அறிவிப்பைக் கொண்டாடிய அதன் ஆதரவாளர்கள், மறுபடியும் தெருவில் இறங்கிப் போராட ஆரம்பித்தார்கள்.

தெலுங்கானாவுக்கு ஆதரவாக மட்டும் கடந்த நவம்பரிலிருந்து இதுவரை 10 கடையடைப்புப் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. அதேபோல, ஒன்று பட்ட ஆந்திராவுக்காகவும் நடந் திருக்கின்றன. கலவரங்கள், மாணவர்கள் போராட்டம், தீக்குளிப்புகள் என்பன தொடர்கின்றன. மத்திய அரசு, தெலுங்கானா அமையும் என்றோ அல்லது அமையாது என்றோ தெளிவாகக் கூறாமல் காலம்கடத்துகிறது. காலம்தான் இந்தப் பதற்றங்களை தணிக்கும் என்று அது நினைக்கிறதோ என்னவோ? தெலுங்கானா அமைவதற்கான பெரும் முட்டுக்கட்டை, ஹைதராபாத் குறித்த உரிமைகோரல். இந்த விஷயத்தைத் தீர்த்துவிட்டால், இப் பிரச்னைக்கு சுலபமாக ஒரு முடிவை எடுத்துவிடலாம். ஆனால், ஹைதராபாத் பிரச்னை எப்படித் தீரப்போகிறது என்பதுதான் தெரியவில்லை.

தெலுங்கானாவுக்கான போராட்டம் இனி இதற்குமேல் தீவிரமாக முடியாது. சந்திரசேகர ராவ் போன்றவர்களின் உண்ணாவிரதப் போராட்டங்களை எப்படிச் சமாளிப்பது என்பதையும் மத்திய, மாநில அரசுகள் தெரிந்துகொண்டுவிட்டன. தெலுங்கானா அமையும் என்றால் அது அரசியல் வழிகளால் மட்டும்தான் சாத்தியம் என்பதே நிதர்சனம். ■

# SPICE HOUSE

## INDIAN AND SRILANKAN CUISINE


**A choice pf Eastern flavours letting you experience that tantalising taste of Spice House herbs and spices**

FREE DELIVERY
with orders over £10

1st
Sri Lankan
Restaurant And
Take Away
In Tolworth

OPENING TIMES:
MONDAY - SATURDAY 12 NOON - 12 MIDNIGHT
SUNDAYS 12 NOON - 11PM

எல்லாவகை வைபவங்களுக்குமான சிற்றுண்டி, உணவு வகைகள் குறைந்த விலையில்



SH
INDIAN AND SRI LANKAN CUISINE

7 TOLWORTH BROADWAY
TOLWORTH
KT6 7DQ
TEL: 020-8390 7766

ஒபாமா: ஓர் ஆண்டு

# மந்திர வாசகம் உயிர்ப்பு பெற்றதா?

**மிகப்பெரும் மாற்றத்துக்கான காலம் அல்ல. ஆனால், மாற்றத்துக்கான அடித்தளத்தை ஒபாமா அமைத்தாரா?**

டி. ஐ. ரவீந்திரன்




அமெரிக்க அதிபர் பராக் ஹுசைன் ஒபாமா பதவியேற்று ஒரு வருடம் முடிந்துவிட்டது. இந்தக் காலக்கணக்கு ஒரு நிகழ்வாகக் கருதப்பட்டு, இதுபற்றிக் கருத்து சொல்லாத செய்தி ஊடகம் எதுவுமே இல்லை என்று சொல்லலாம். ஒபாமாவுக்கு முன்னர் பதவி வகித்த 43 அதிபர்களைப்பற்றி இப்படியான அலசல்களோ விமர்சனங்களோ எழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா என்கிற மிகச் சக்திவாய்ந்த நாடு, உலகில் உள்ள முக்கிய நிகழ்வுகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்குவகிப்பது இன்று நேற்று நிகழ்வதல்ல. ஆனாலும், ஒபாமாவின் ஒருவருட பதவிக்காலம், முன் எப்போதையும்விட மிக முக்கியமான விஷயம் என்று கருதப்படுகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, இதுவரை பதவிவகித்த அமெரிக்க அதிபர்கள் அமெரிக்காவை முன்னிறுத்தி, அதன் நலன்களினூடாக மதிப்பிடப்பட்டார்கள். படைபலத்தில், நிதிவசதியில், வள ஆதாரங்களில் அபரிமிதமான அளவுக்கு முன்னணியில் இருக்கும் அமெரிக்கா, அவற்றை எப்படிப் பயன்படுத்தப்போகிறது என்பதைத் தீர்மானிப்பதில் அதிபருக்குப் பெரும்பங்கும் அதிகாரமும் உண்டு. இதன் அடிப்படையில்தான் ஏனைய அமெரிக்க அதிபர்கள் மதிப்பீடு செய்யப்படடார்கள்; முக்கியத்துவம் பெற்றார்கள், அல்லது விமர்சிக்கப்பட்டார்கள். ஆனால், ஒபாமாவின்நிலை வேறு. கறுப்பின மனிதர்களின் மீதான அமெரிக்கர்களின் அணுகுமுறை மாறியிருப்பதன் நடைமுறை உதாரணமாக ஒபாமா விளங்குகிறார். இதுவரையில் அமெரிக்க மக்கள் யாருக்கெல்லாம் வாக்களித்தார்கள் என்று பார்த்தால், இந்த மனமாற்றத்துக்கான முக்கியத்துவம் விளங்கும்.

றொனால்ட் றேகன் இருமுறை அதிபரானார். அவர் காலத்தில்தான் கம்யூனிச சோவியத் சிதறிக்கடிக்கப்பட்டது. அடுத்து கிளின்டன். இவர் காலத்திலேயே மத்திய ஆசியாவில்

**‘மக்கள் அதிருப்தியாகவே இருக்கிறார்கள் என்பதை நான் உணர்கிறேன்’**



அமெரிக்கா பெருமளவில் தலையிட்டு எண்ணெய்வள நாடுகளைத் தனது நேரடி மற்றும் மறைமுகக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது. இவரும் இரண்டுமுறை அதிபர் பதவியை வென்றவர்தான். மூன்றாவதாக, ஜோர்ஜ் புஷ். இவரது காலத்தில் நடந்தவற்றை யாராலும் அவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியாது. இவர்மீது உலகமே குறைகூறினாலும், அமெரிக்க மக்கள் இரண்டாம் முறையாக இவரைத் தங்களது அதிபராகத் தேர்வு செய்தனர். இவரது ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் அதிகாரமும் அதன் வீச்சும் பரந்து விரிந்தது. இதை அமெரிக்க மக்கள் விரும்பியதால்தான் புஷ் இரண்டாவது முறையும் பதவிக்கு வர முடிந்தது. அதாவது, அமெரிக்கா தனது செல்வாக்கின் எல்லையை விரிவுபடுத்துவது அமெரிக்கர்களுக்கு, அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டசபைகளின் உறுப்பினர்களுக்கும் பிடித்திருந்தது. இப்படிப்பட்ட நிலையில், திடீரென்று ஒபாமா தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றால் அதன் காரணம் என்ன?

முதலாவது, மேற்படி அதிகார பரவலுக்கு, செல்வப் பெருக்கத்துக்குக் கொடுக்க வேண்டியிருந்த விலையை அமெரிக்கர்கள் உணர ஆரம்பித்திருந்தார்கள் என்று கூறலாம். ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற இடங்களிலிருந்து உயிரிழந்த வீரர்களின் சடலப் பைகள் அதிக அளவில் வர ஆரம்பித்தன. போரில் உடல் ஊனமுற்றவர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் போன்றோரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்ததை மக்கள் உணர ஆரம்பித்தார்கள். இதுமட்டுமன்றி, தீவிரவாதிகளின் தாக்குதலை சமாளிக்க, அவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க அமெரிக்கா செலவழிக்கவேண்டியிருந்த டொலர்களும், எடுக்கவேண்டியிருந்த இமாலய முயற்சிகளும் மக்களுக்குச் சில விஷயங்களை உணர்த்தின. நாம் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்றால் இவ்வளவு பெரிய விலை கொடுத்தாகவேண்டும் என்பது அவர்களுக்கு உறைத்தது. இந்தநிலையில் மாற்றம் வேண்டும் என்றால் அதிகார மையம் மாறவேண்டும். புதிய செய்தியை உலகுக்குத்

தெரிவிக்கவேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள். இதை அதிகார மையங்கள் சரியாகப் புரிந்துகொண்டன.

வெளிச்சூழல் இப்படி இருந்தது என்றால், உள்நாட்டுச் சூழ்நிலை இதைவிட மோசமாக இருந்தது. ஜோர்ஜ் புஷ் அமெரிக்க மக்களை உற்சாகப்படுத்தவும் அவர்கள் கவனத்தைத் திருப்பவும் செயற்கையான மாற்றங்களை பொருளாதாரத்தில் வலிந்து திணித்தார். இதனால், எண்ணையில் இட்ட பூரியைப்போன்ற தற்காலிக பூரிப்புக்கொண்ட பொருளாதார வளர்ச்சி தோன்றி அடங்கியது. மக்கள் தங்கள் வாழ்க்கையைப்பற்றி, சமூகப் பாதுகாப்பு பற்றி, மருத்துவ செலவுகளைப்பற்றி, கவலைப்படவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார்கள். அவர்களுக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டது.

அதே சமயத்தில், அமெரிக்கா முஸ்லிம்களுக்கு எதிரானது என்ற எண்ணம் உலக முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. இதை மாற்றவேண்டிய கட்டாயம் கிறிஸ்தவ மதத் தலைமைக்கு உருவானது. இப்படிப்பட்ட பல்வேறு காரணிகளின் விளைவாகத்தான் ஒபாமா அதிபராகும் சூழல் ஏற்பட்டது.

ஒபாமா இத்தகைய காரணங்களால் அதிபரானதால்தான், உலக செய்தி ஊடகங்கள் அவரது ஓராண்டுப் பதவிக் காலத்தை ஆய்வுசெய்ய முற்பட்டுள்ளன. ஒரு வருடம் என்பது மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய கால கட்டம் என்று கூறமுடியாது. ஆனால், மாற்றத்துக்கான அடித்தளத்தை அமைக்கும் முயற்சிகளை மேற்கொள்ளமுடியும். அப்படிப்பட்ட முயற்சிகளை ஒபாமா மேற்கொண்டிருக்கிறாரா?

முதலில், உள்நாட்டுச் சூழ்நிலையைப் பார்க்கலாம். மாற்றம் ஏற்பட முடியும் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்தியதுதான் ஒபாமாவின் முதல் சாதனை. அதிபர் பதவிக்குப் போட்டியிடும்போது, மக்களின் அனைத்து பிரச்னைகளையும் பட்டியலிட்டு அதை நம்மால், அமெரிக்க மக்களால், சரிசெய்ய முடியும் என்ற நம்பிக்கையை அளித்தார். இதன் அடையாளபூர்வமான வாக்கியமான 'ஆம், நம்மால் முடியும்' (*Yes, we can*) என்ற கோஷம் மந்திரமாகவே மாறியது. ஆனால், இந்த மந்திரத்துக்குக் கட்டுண்டு மக்கள் தந்த சக்தியை வைத்து, அவர் தனது கோஷத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறாரா என்று பார்த்தால், இப்போது ஒருவிதமாக நிறைவேற்றப்பட்டுவிட்ட மருத்துவ காப்புறுதி சட்டம் 'ஆம்' என்ற பதிலைச் சொல்ல ஓரளவு உணர்த்துகிறதா?

அவர் ஆட்சிக்கு வந்ததுமே, ஜோர்ஜ் புஷ் கட்டிய பொருளாதார மணல் கோட்டை விழுந்ததன் விளைவுகளைச் சரிசெய்ய முயற்சித்தார். அதற்கு ஓரளவு வெற்றி கிடைத்தது. அதற்குக் கொடுத்த விலையும் அதிகம்தான். வேலையில்லாத் திண்டாட்டம் வரலாறு காணாத அளவுக்குப் பெருகியது. இதுகுறித்து மக்கள் பெரும் அதிருப்தியோடும் கோபத்தோடும் இருக்கிறார்கள் என்பது சமீபத்தில் நடந்த செனட் தேர்தல்களின் முடிவுகள்மூலம் வெளிப்பட்டிருக்கிறது. மசாச்சுசெற் மாகாணத்துக்கான செனட் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் ஸ்கொட் பிரவுன் செனட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். கடந்த ஐந்து தலைமுறைகளாக இந்த மாகாணத்தில் ஒபாமாவின் ஜனநாயக கட்சிதான் வெற்றிபெற்று வந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒபாமா அளித்த மற்றொரு முக்கியமான வாக்குறுதி, ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்காவின் இருப்பைக் குறைத்து, 2012க்குள் படைகள் முழுவதுமாக வெளியேறும் என்பதுதான். ஈராக்கில் அதற்கான முயற்சிகளை ஒபாமா எடுத்திருக்கிறார். அதுமட்டுமன்றி, ஈராக்கிலிருந்து பிணமாக வரும் அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. அங்கேயும் அமைதியின் அறிகுறிகள் மங்கலாகத் தெரிகின்றன. ஆனால், ஒபாமாவால் ஆப்கானிஸ்தானில் சொன்னபடி செய்யமுடியவில்லை என்பது மட்டுமன்றி, போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். அங்கேயிருந்த படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு பதிலாக, 30 ஆயிரம் வீரர்களை அதிகமாக அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது. அங்கே, நிலைமை மோசமாகிப் போனதுதான் இதற்குக் காரணம் என்று அரசு கூறுகிறது. இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. ஆனால், வாக்குறுதி கொடுத்தபடி ஆப்கானில் நிலைமையை மேம்படுத்த முடியவில்லை என்பதற்கான பொறுப்பை ஒபாமா ஏற்க வேண்டியிருக்கிறது.

இவை எல்லாவற்றையும்விட அமெரிக்க மக்கள் அதிருப்தியாக உணர்ந்த முக்கியமான விஷயம், அந்நாட்டில் உள்ள மருத்துவக் காப்புறுதி மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள்தாம். இதைத் தன்னால் சரிசெய்ய முடியும் என்று தேர்தலின்போது உறுதியாகக் கூறினார் ஒபாமா. அமெரிக்கா வைப் பொறுத்தவரை மருத்துவ பராமரிப்பு என்பது நூறு சதவிகிதம் மருத்துவக் காப்புறுதியையே சார்ந்துள்ளது. அதாவது, அமைப்பு சார்ந்த நிறுவனங்களில், மற்றும் தனித்தொழில் செய்பவர்கள் போன்றவர்களுக்கு சிகிச்சை என்பது மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் மூலமே கிடைக்கிறது. இந்த காப்புறுதித் திட்டம் ஏறக்குறைய கட்டாயமாக்கப்பட்ட ஒன்று. உள்நாட்டார், புலம் பெயர்ந்தோரென யாராக இருந்தாலும் மருத்துவ காப்புறுதி இன்றியமையாத ஓர் அம்சம். இந்தக் காப்புறுதி திட்டத்தில் உள்ள ஏராளமான குளறுபடிகள் மக்களைப் பாதிக்கின்றன. ஒப்பந்தப்படி காப்புறுதித்தொகை வழங்காதது, உடல் நிலை, பின்னணி ஆகியவற்றைக் காரணம் காட்டி குறிப்பிட்ட சில நபர்களுக்குக் காப்புறுதி மறுப்பது, அதிகமான காப்புறுதித் தொகை வசூலிப்பது, ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி சேவை வழங்காதது என்று பல குறைகள் இந்தத் துறையில் உள்ளன. இன்று, அமெரிக்காவில் 47 மில்லியன் மக்கள் காப்புறுதி இல்லாமல் இருக்கிறார்கள். இதற்குக் காரணம், அவர்களுக்குக் காப்புறுதித்தொகை செலுத்துகின்ற அளவுக்கு வசதியில்லை; அல்லது அவர்களது உடல்நிலை காப்புறுதி நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யவில்லை என்பதுதான்.

இதைத்தவிர, அமெரிக்க சமூகத்தில் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் கருச்சிதைவு தனிப்பட்டவர்களின் உரிமையா இல்லையா என்பதும் இப்போது காப்புறுதித் திட்டத்தில் குறுக்கிட்டுள்ளது. ஏனெனில், அமெரிக்காவின் இன்றைய சட்டப்படி, மத்திய அரசு வழங்கும் மருத்துவ உதவி பொதுவாக மகப்பேறுக்காக வழங்கப்படுவதில்லை. பாலியல் பலாத்காரம், குடும்பத்துக்குள்ளாக நடக்கும் முறைதவறிய உறவு, மற்றும் கருச்சிதைவு செய்யாவிட்டால் தாயின் உயிருக்கு ஆபத்து போன்ற நிலைமைகளைத் தவிர, வேறு எந்தவிதமான கருச்சிதைவுக்கும் 'மெடிக் எய்ட்' எனப்படும் அரசின் நிதி உதவி கிடைக்காது.

இதையெல்லாம் சரிசெய்யும் விதமாக அனைவரையும் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கொண்டுவரும் சட்டத்தை இயற்ற ஒபாமா திட்டமிட்டார். மக்கள் சபையிலும் அவரது கட்சிக்குப் பெரும்பான்மை இருக்கிறது. ஆனால், இந்தத்

**அமெரிக்க மக்களை உற்சாகப்படுத்தவும் அவர்களின் கவனத்தைத் திருப்பவும் ஜோர்ஜ் புஷ் பொருளாதாரத்தில் செயற்கையான மாற்றங்களை வலிந்து திணித்தார்**

திட்டத்திலும் பல கோளாறுகள் இருப்பதாக விமர்சனங்கள் பரவலாக எழுந்தன. இத்திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் அதற்குப் பெரும் தொகையை அரசு செலவிடவேண்டும். உதாரணமாக, 2010இல் இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டுமானால், அதற்காக அரசாங்கம் ஒரு வருடத்துக்கு 3 டிரில்லியன் டொலர்களைச் செலவழிக்கவேண்டும். இதற்கான தொகையை வரிவிதிப்பின்மூலமோ, அல்லது கடனாகவோதான் பெறமுடியும். இல்லையென்றால், இது அரசாங்க கஜானாவைக் காலியாக்கிவிடும். ஆனால், இதைச் செய்தேயாகவேண்டும். ஏனெனில், இவ்வகையான சமூகப் பாதுகாப்புத் திட்டம் மக்களுக்கு மிகவும் அவசியமாக இருக்கிறது. செய்தாலும் தொல்லை; செய்யாவிட்டாலும் தொல்லை என்கிற ரீதியில் இந்த விஷயம் ஒபாமாவின் காலைச் சுற்றியிருக்கிறது. ஒபாமா அரசின் திட்டம், காப்புறுதிக் கட்டணத்தை வெகுவாகக் குறைப்பது, உடல் நிலைகுறித்த கடும் நிபந்தனைகளைத் தளர்த்துவது என்ற இரு முக்கியமான அம்சங்களை உள்ளடக்கியிருக்கிறது.

அரசின் புதிய மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் காப்புறுதி மட்டுமன்றி நோய்த் தடுப்பு, நோய் பரவல் தடுப்பு போன்றவற்றுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியிருப்பதால் அதிக நிதி இதற்கு தேவைப்படுகிறது. இதற்கு ஒபாமா ஒரு திட்டத்தை முன்வைக்கிறார். அதாவது, ஆண்டுக்கு 350 ஆயிரம் டொலர்களுக்குமேல் வருமானமுள்ள அமெரிக்கர்கள் கூடுதல் வரி செலுத்தவேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம். உலகத்திலேயே மருத்துவச் செலவுகளுக்கு என்று அதிக பணம் செலவழிப்பது அமெரிக்கர்கள்தாம். ஆனாலும்கூட, அவர்களது ஆயுள்காலம் மற்ற நாடுகளில் உள்ளவர்களைவிட அதிகமாகிவிடவில்லை. ஒபாமாவின் மருத்துவக் காப்புறுதிச் சீர்திருத்த மசோதா நிறைவேறியிருக்காவிட்டால், அதன் நேரடி விளைவை ஒவ்வோர் அமெரிக்கக் குடும்பமும் அநுபவிக்கவே நேரும். சமீபத்திய ஆய்வின்படி, ஏற்கனவே காப்புறுதி திட்டத்தில் இருக்கும் ஒவ்வொரு சராசரி அமெரிக்க குடும்பமும் (4 பேர்கள் அடங்கியது) இனி வருடத்துக்குக் கிட்டத்தட்ட ஆயிரத்து 750 டொலர்கள் அதிகமாக செலவிடவேண்டியிருக்கும். இந்தநிலை சமூகத்தில் பெரும் அமைதியின்மையை உருவாக்கும்.

புதிய காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்தால், அதனை நிறுத்தமுடியாது. ஆரம்பிக்க வேண்டுமானால் வரிவிதிப்பில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். இதைக் கொண்டுவராவிட்டால், வாக்களித்த மக்களின் அதிருப்தியைச் சம்பாதிக்கநேரும். திட்டத்தைக் கொண்டுவர வரி விதித்தால், தேர்தலுக்குக் கோடிக்கணக்கில் வாரியிறைக்கும், பணக்காரர்களின் அதிருப்தியை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். எனவே, இவை இரண்டுக்கும் நடுவில் ஏதாவது வழிகிடைக்குமா என்பதையும் ஒபாமா தீவிர மாக யோசித்தாகவேண்டும்.

உள்நாட்டுப் பிரச்னைகளும் இராணுவ விவகாரங்களும் இப்படியிருக்க, சீனாவின் அபரிமிதமான வளர்ச்சியும் அமெரிக்காவுக்குச் சவால்விடுகிறது. இது ஒபாமாவுக்குச் சாதகமாக இல்லை. சீனா தனது பொருளாதாரச் செழுமையை அடிப்படையாகவைத்து தனது நெடுநாளைய கனவை - அமெரிக்காவை மண்டியிடவைக்கும் கனவை - ஏறக்குறைய நனவாக்கியிருக்கிறது. அமெரிக்க டொலரின் மதிப்பு உலக அளவில் குறைந்துள்ளது. ஆனால், சீனாவோ இரண்டு டிரில்லியன் டொலர்களைக் கையிருப்பாக வைத்திருக்கிறது. டொலருக்குப் பதில் தனது நாணயமான 'யென்' ஐ பிறநாடுகள் வர்த்தகத்துக்குப் பயன்படுத்தவேண்டும் என்று கூறி, சில ஆசிய நாடுகளை அப்படி பின்பற்ற வைத்திருக்கிறது சீனா. டொலர்களை ஐரோப்பிய யூரோக்களாக மாற்றப்போவதாக மறைமுகமாக மிரட்டிவருகிறது. இந்த நடவடிக்கைகள் டொலரை மேலும் பலவீனப்படுத்தும். இதனாலேயே அமெரிக்கா முன்னர்போல சீனாவை விமர்சிப்பதையும் சீனாவை எரிச்சல்படுத்தும் காரியங்களைச் செய்வதையும் குறைத்துக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு தலாய் லாமா வாஷிங்டனுக்குச் சென்றபோது, ஒபாமா அவரைச் சந்திக்க மறுத்தார். அதுமட்டுமன்றி, அவர் சீனாவுக்குச் சென்றபோது, வழக்கமாக எல்லா அமெரிக்க அதிபர்களும் செய்யும் காரியமான சீன மனித உரிமைகுறித்த 'கருத்துக்கள்'எதையும் அவர் வெளியிடவில்லை (ஆனால், அண்மையில் அமெரிக்காவுக்குவிஜயம்செய்த தலாய் லாமாவை அவர் வெள்ளை மாளிகையில் வரவேற்றார்.)

ஒபாமாவின் மற்றைய வாக்குறுதிகளான ரஷ்யாவுடனான நல்லுறவைப் புதுப்பித்தல், பாலஸ்தீனப் பிரச்னையைத் தீர்க்கும்வகையில் விஷயத்தை அடுத்த நிலைக்குக் கொண்டுசெல்லுதல், அணு ஆயுத ஒழிப்புக்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துதல், ஈரான் விவகாரத்துக்கான தீர்வு, வட கொரியாவின் அணு ஆயுத மிரட்டலுக்கு பதிலடி போன்ற எதையெடுத்தாலும் அவரது விருப்பத்துக்கு ஏற்ற வகையில் நடக்கவில்லை. சமீபத்தில் நடந்த பருவநிலை மாற்றம் குறித்த கொபன்ஹேகன் மாநாட்டிலும் அமெரிக்காவால் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவர முடியவில்லை.

அதேசமயத்தில், மேற்படி பிரச்னைகள் இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஓர் ஒபாமாவினால் ஒரு வருடத்தில் தீர்த்துவிடமுடியாத அளவுக்கு ஆழமான பிரச்னைகள் இவை. ஆயினும், இவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஒபாமா எந்த அளவு முன்னேற்றம் கண்டுள்ளார் என்று பார்க்கும்போது திருப்திகரமான பதிலை அளிக்கமுடியவில்லை என்பதே யதார்த்தம்.

இப்போது ஒபாமாவின் முன்னுள்ள சவால்; உள்நாட்டுப் பொருளாதாரம் மிகப் பிரகாசமாக இருக்கவேண்டும். அதே சமயம் மற்றைய நாடுகள் அமெரிக்க வழிகாட்டுதலை ஏற்க முன்வரும் வகையில் தீர்வுகளை உருவாக்க முடியவேண்டும். இவை இரண்டுக்குமே உடனடியாக சாத்தியம் இல்லை.

இந்நிலையில், தனது தவறுகளை முழுவதுமாக மூடிமறைக்காமல், பிரச்னைகள் தொடருவதற்கு தான் மாத்திரமன்றி, எல்லோருமே காரணம் என்று கூறாமல், உண்மை நிலையை ஒப்புக்கொண்டிருக்கிறார் ஒபாமா. "மக்கள் என்மீதும் அரசின் செயல்பாடுகள் மீதும் அதிருப்தியாக, எரிச்சலாக இருக்கிறார்கள். அதை நானும் உணர்கிறேன். எனக்கும் தற்போதைய நிலைகுறித்து அதிருப்தியாகவே இருக்கிறது." என்று ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறார். இது ஒரு வகையில் விமர்சனங்களைச் சமாளிக்கும் உத்தியாகத் தெரிந்தாலும், இப்படிச் சொல்லியிருப்பதன்மூலம் தனது செயல்பாடுகளின் போதாமையை ஒபாமா வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார். தவிர, இனி எந்த 'சாக்குப்போக்கும்' எடுபடாது; செயல்பட்டே ஆகவேண்டும் என்ற உணர்தலின் வெளிப்பாடாகவும் இந்தக் கூற்றைப் பார்க்கலாம். இந்த உணர்தலின் வெளிப்பாடு அவரது செயல்களிலும் பிரதிபலித்தால் அமெரிக்காவில் மாற்றங்கள் விரைவில் நிகழக்கூடும். அப்படி நடந்தால் 'ஆம், நம்மால் முடியும்' என்ற மந்திர வாசகத்துக்கு உயிர்ப்பு கிட்டும். மருத்துவ காப்புறுதி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதையடுத்து, 'நாம் இன்னமும் மிகப்பெரும் விடயங்களைச் சாதிக்கவல்ல மக்களாகவே இருக்கிறோம்' என்று ஒபாமா கூறுவது, அந்த உயிர்ப்பின் நம்பிக்கை. ■




கொபன்ஹேகன் மாநாடு

# பஞ்சபூதங்களுடன் ஒரு சதுரங்கம்

முயற்சியைத் தவிர, நடவடிக்கை எதுவுமில்லை

கிரீஷ்வரன்

இன்று உலகத்தை விரட்டிக் கொண்டிருக்கும் விஷயம் எது என்று கேட்டால், பெரும்பாலோர் 'பயங்கரவாதம்' என்று கூறுவார்கள். ஆனால், இதை எதிர்கொள்ளவும் வெல்லவும் என்ன செய்யலாம் என்று சிந்திக்கவோ திட்டங்களை வகுக்கவோ எத்தனை நாடுகள் எத்தனைமுறை கூடியிருக்கின்றன? பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். அப்படியே கூடினாலும், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகள், பெரும்பாலும் இரகசியமாக சந்தித்துப்பேசி, இணைந்து செயல்படத் திட்டமிட்டுக்கொள்ளும்.

பயங்கரவாதம் மட்டுமல்ல; ஏழ்மை, தொற்று நோய், மனித உரிமை மீறல்கள் போன்ற விஷயங்களுக்காகவும் உலக நாடுகள் ஒன்றிணைவது என்பது பெரிதும் நடைபெறாத ஒன்றாகவே இருக்கிறது. ஆனால், கடந்த 15 வருடங்களாக உலகத்தில் உள்ள 194 நாடுகளில் ஒன்றிரண்டைத்தவிர, அனைத்து நாடுகளும் ஒன்றுசேர்ந்து ஆலோசித்துவரும் ஒரே விஷயம், உலகம் முழுவதும் பருவநிலையில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள்; அவற்றின் விளைவுகள்; அதை எதிர்கொள்வது எப்படி என்பனவற்றைப் பற்றித்தான். அந்தவகையில், பருவநிலை மாற்றம் குறித்து கோபன்ஹேகனில் கடந்த டிசம்பரில் நடந்த மாநாடு தனித்துவம்பெற்றது என்றே கூறவேண்டும்.

இந்த மாநாடு சாதித்தது என்ன என்று கேட்டால், ஒரே வாக்கியத்தில் 'பெரிதாக ஒன்றுமில்லை' என்று கூறிவிடலாம். உலக நாடுகளைப் பொருளாதார ரீதியில் மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் மற்றும் வறியநாடுகள். அதேபோல, உலக பருவநிலை மாற்றங்களுக்குக் காரணமாக இருக்கும் நாடுகளையும் 'தரம்' பிரித்திருக்கிறார்கள். இதில் முதலில் வருவன அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பணக்கார நாடுகள். இரண்டாவதாக, வளரும் நாடுகளின் பட்டியலில் உள்ளவை. மூன்றாவதாக வறிய நாடுகள்; குறிப்பாக, ஆபிக்கா மற்றும் ஆசியாவில் உள்ள நாடுகள் சில.

பருவநிலை மாற்றம், உலக வெப்பம் அதிகரித்தல், இவற்றுக்கெல்லாம் காரணமான 'பசுமை இல்ல' விளைவு ஆகியவைபற்றி உலக நாடுகளுக்கு இன்றுதான் தெரியவந்தது என்று கூறமுடியாது. 1824ஆம் ஆண்டிலேயே ஜோசப் ஃபோரியர் என்பவர் இதைக் கண்டுபிடித்துக் கூறினார். இந்த விஷயத்தைப் பற்றி ஆரம்பத்திலிருந்தே அனைவரும் மெத்தனமாகவே இருந்து வந்துள்ளனர். 1824இல் வெளிவந்த பசுமை இல்ல விளைவுபற்றிய கண்டுபிடிப்புபற்றி, பரிசோதனை ரீதியாக நிரூபிக்க விஞ்ஞான உலகு 34 ஆண்டுகளை எடுத்துக் கொண்டது. 1858ஆம் ஆண்டில் ஜோன் ரின்டால் என்பவர் மேற்படி விஷயத்தைச் சோதனைகள்மூலம் நிரூபித்தார். இந்தப் பசுமை இல்ல விளைவு எவ்வளவு பெரிய பாதிப்பை உண்டாக்கும்; அதாவது, உலகம் முழுவதும் இதனால் எவ்வளவு பாதிக்கப்படும் என்பதை 1896ஆம் ஆண்டு ஸ்வன்ரி அரேனியஸ் என்பவர் கண்டறிந்து கூறினார். இந்த விஷயம் உலக நாடுகளின் முழுமையான கவனத்தையும் ஈர்ப்பதற்கு மேலும் ஒரு நூற்றாண்டு தேவைப்பட்டது. பசுமை இல்ல விளைவினால், புவி வெப்பநிலை கணிசமான அளவுக்கு நிச்சயமாக அதிகரிக்கும் என்பதை, இதன் விளைவுகளைக் கண்கூடாகப் பார்த்து ஒப்புக்கொள்வதற்கு இவ்வளவு காலம் எடுத்தது.




**சீனா, இந்தியா. பிரேசில், தென்னாபிரிக்காஆகிய நாடுகளும் பாவப் பரிகாரத்தில் பங்குபெறவேண்டுமென்பது அமெரிக்காபோன்ற நாடுகளின் வாதம்**

பசுமை இல்ல விளைவால் பூமியின் மேற்புறத்தில் காபனீரொக்சைடு (கரியமில வாயு) அதிகரித்துள்ளது. இதனால் உலகம் முழுவதும் வெப்பநிலை மிகவும் அதிகரித்துவருகிறது. 1974இலிருந்து எடுக்கப்பட்ட கணக்குகளின்படி, நிலத்தின் வெப்பநிலை, கடலின் வெப்பநிலையைவிட இருமடங்காகிவிட்டது. இதனால், கடல் வெப்பநிலை அதிகரிக்கவில்லை என்று அர்த்தமல்ல. பூமியின் வெப்ப உயர்வுக்கு இணையாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான வெப்ப உயர்வால் துருவங்களிலும் பனிமுகடுகள், பனி ஆறுகள் போன்றவையும், இமயமலைபோன்ற பனிச்சிகரங்கள் அதிகம் உள்ள மலைப் பிரதேசங்களும் உருக ஆரம்பிக்கின்றன. இம்மாதிரியான பனி உருகுவதால் கடல் மட்டம் அதிகரிக்கும். இதனால் கடற்கரைகளுக்கு அருகே உள்ள நிலப்பகுதிகளைக் கடல் விழுங்க ஆரம்பிக்கும்.

இமயமலைபோன்ற பனிமலைகள் உருகினால் இம்மலைகளால் நீர்பெறும் நதிகளுக்கு நீர்வரத்து அதிகமாகும். இதனால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, நதிக் கரைகளில் அனைத்தும் நாசமாகும். இந்தியாவில் இதுபோன்ற நிலை வந்தால், இமயமலையைச் சுற்றியுள்ள நாடுகளான நேபாளம், பூட்டான் ஆகியன பெரும் சேதத்துக்கு உள்ளாகும். இந்தியாவில் ஓடும் பல ஜீவ நதிகளின் நீர் ஆதாரம் இமயமலைதான். இங்கு பனி உருகின் நதிப்பெருக்கு, வெள்ளப் பெருக்காகத்தான் மாறும். பல மாநிலங்கள் மீளமுடியாத நஷ்டத்தில் மிதக்கும். கடல் மட்டம் அதிகரித்தால் உப்புத் தன்மை ஊடுருவி, நிலப்பகுதிகளில் உள்ள நீர்மட்டம் குறையும். இதனால் விவசாயம் பெருமளவில் பாதிப்படையும்.

இந்த விளைவுகள் யாவும் மனிதரை நேரடியாகவே பாதிக்கும். நீர், காற்று மூலம் பரவும் தொற்றுநோய்கள். அது



வரை புகாத இடங்களில் தங்குதடையின்றி நுழையும். பணம் படைத்தவர்கள் வெப்பத்திலிருந்து ஓரளவு தங்களைக் காத்துக்கொள்ளமுடியும். ஆனால், சமுதாயத்தின் கடைநிலையில் இருக்கும் ஏழைகள், உடல் நலிந்தோர் ஆகியோர் மிகவும் பாதிப்படைவார்கள்.

இதெல்லாம் உலகின் பல இடங்களில் ஏற்கனவே நடந்துவரும் விஷயங்கள்தாம். ஆனாலும், இவ்வாறு உலகம் எங்கும் நிகழாமல் இருக்கவேண்டுமானால், ஒருங்கிணைந்த முயற்சிகளும் நடவடிக்கைகளும் தேவை. இன்று வரை முயற்சிகள் மட்டும்தான் இருக்கின்றனவேதவிர, கூட்டு நடவடிக்கைகள் என்று எதுவும் இல்லை என்பதுதான் உண்மை.

வறிய நாடுகள் என்று அறியப்படும் ஆபிரிக்க, ஆசிய நாடுகள், ஒரு சில ஐரோப்பிய நாடுகள், அரபு நாடுகளில் பின்தங்கிய சில நாடுகளில் உள்ள நிலைமைகளைச் சொல்லலாம். இவை இன்றும் புதையுண்டு உக்கிப்போன மரங்களால் நிலத்தின் ஆழத்தில் உருவாகும் நிலக்கரி மற்றும் பெற்றோலிய பொருள்களைத்தான் அதிகமாகப் பயன்படுத்துகின்றன. எனவே, இவர்களால்தான் பசுமை இல்ல விளைவு மிக மோசமாக இருக்கிறது என்பது வளர்ந்த நாடுகளின் வாதம். இது மட்டுமன்றி, பூமியின் மேற்பரப்பில் அதிகமாகப் பரவியிருக்கும் மற்றொரு முக்கியமான கெடுதலை உண்டாக்குவது மீதேன். இது தொழிற்சாலைகளில் அதிகமாக வெளியேற்றப்படும் வாயுக்களில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இதைத்தவிர, கால்நடைகளின் சாணத்

**உயர்மட்டத்தில் ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையும் இன்னும் உருவாகவில்லை. இந்த உண்மையை வெளிச்சம்போட்டுக் காட்டியதுதான் கொபன்ஹேகன் மாநாட்டின் சாதனை**

திலும் அவற்றிலிருந்து வெளியேறும் வாயுவிலும் மிக அதிகமாக மீதேன் உள்ளது. கால்நடைகளைத் தங்களது நாட்டுச் செல்வங்களாகக் கருதும் நாடுகள் பல இருக்கின்றன. அசைவ உணவு உண்ணும் மனிதர்களிடமிருந்தும் பல்வேறு வழிகளில் மீதேன் வெளியேற்றப்படுகிறது. இதனாலும் மூன்றாம் உலக நாடுகள் பசுமை இல்ல விளைவுக்குப் பெரும் காரணங்களாக இருக்கின்றன என்பது வளர்ந்த நாடுகளின் மற்றொரு வாதம்.

ஆனால், வளரும் மற்றும் வறிய நாடுகள், வளர்ந்த நாடுகள் என்று கூறப்படும் 40 நாடுகளின்மேல் பல குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. தொழிற்புரட்சியும் அசுர வளர்ச்சியும் வளர்ந்த நாடுகளில்தான் முதன்முதலாக ஏற்பட்டன. ஆக்கத்துக்குப் பயன்படும் விவசாயத்திலிருந்து, அழிப்பதற்குப் பயன்படும் அணு ஆயுதங்கள்வரை, அநேகமாக எல்லாச் செயல்பாடுகளும் தொழிற்புரட்சியின் வரையறைக்குள் இந்நாடுகளில் எப்போதோ வந்துவிட்டன. இதனால் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் மக்களின் வசதிகளும் வாழ்க்கைத் தரமும் உயர்கின்றன. மக்களின் தேவைகளும் வசதிகளும் முடிவின்றிப் பெருகிக்கொண்டேவருகின்றன. வளர்ந்த நாடுகளில் இந்த நிலையும் மாற்ற இயலாதபடி நிரந்தர அம்சங்களாக மாறிவிட்டன. இதனால், தொழிலகப் பொருள்களின் பயன்பாடு, வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் இன்றியமையாத தேவைகளாக மாறிவிட்டிருக்கின்றன. இந்த நிலையை எதிர்கொள்ள, அதாவது மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய தொழிலகங்கள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. இயந்திரமயமாகிப்போன தொழிலகங்களை உருவாக்க கனிமங்களும், இயக்குவதற்கு எரிபொருளும் மிக அதிகமான அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. செயற்கை வளங்கள் இந்த இடத்தை நிரப்புகின்றன.

இதற்கான விலையாக நம்ப முடியாத அளவுக்குச் சுற்றுச்சூழல் கெட்டுப்போயிருக்கிறது. வாகனங்கள் பெருக்கம், தொழிலகங்களிலிருந்து பல்வேறு விதங்களில் வெளியாகும் கழிவுகள் ஆகியவை நிலம், நீர், காற்று, ஆகாயம் போன்றவற்றை மாசுபடுத்துகின்றன. இதைத்தான் வறிய நாடுகள் மற்றும் வளரும் நாடுகள் ஆகியன, வளர்ந்த நாடுகளைப் பார்த்துக் குற்றம் சொல்கின்றன. அதிலும் குறிப்பாக, அமெரிக்காவின்மேல் இக்குற்றச்சாட்டு அதிகமாகவே எழுந்துள்ளது. உலக மக்கள் தொகையில் நான்கு வீதம் மட்டுமேகொண்ட அமெரிக்கா, உலகின் 40வீத வள ஆதாரங்களைப் பயன்படுத்துகிறது. இதனடிப்படையில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. ஓர் அமெரிக்கரின் செயல்பாடுகளால் வெளியாகும் சுற்றுப்புறச் சூழல் ஆபத்தை விளைவிக்கும் வாயுக்கள் மற்றும் மாசுக்களின் அளவோடு, மற்றைய நாட்டுக் குடிமக்களது நடவடிக்கைகளின் விளைவுகள் இதில் ஒப்பீடு செய்யப்பட்டன. ஓர் அமெரிக்கரால் வெளியேற்றப்படும் நச்சுவாயு மற்றும் மாசுகளை, 17 இந்தியர்கள் சேர்ந்தால்தான் உருவாக்கமுடியும். அதேபோல, 105 பங்களாதேஷிகள், 21 இலங்கையர்கள், 271 நேபாளிகள் மற்றும் 135 பூட்டானியக் குடிமக்கள் ஆகியோர்தாம் ஓர் அமெரிக்கருக்குச் சமமாகச் சுற்றுச்சூழல் நாசம் செய்யமுடியும். அங்கே அந்த அளவுக்கு வாழ்க்

கைமுறை இருக்கிறது. அமெரிக்காவின் முன்னேற்றத்துக்கான விலை இது என்று கூறலாம்.

அமெரிக்காவுக்கு இதுபோல பல்வேறு முனைகளில் குற்றச்சாட்டுகளைக் கேட்டுப் பழகிவிட்டதென்றாலும், அமெரிக்கர்களும் இதில் பாதிப்புகளை அநுபவிக்கிறார்கள் என்பதால் அமெரிக்கா இப்போது இதில் அக்கறையுடனும் கவலையுடனும் கவனம் கொள்கிறது. இந்தக் கவலை, வளர்ந்த நாடுகளுக்குப் பொதுவானது. எனவே, அமெரிக்கா மட்டுமன்றி, வளர்ந்த நாடுகள் என்று அறியப்படும் அவுஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஸ்பெயின் உள்ளிட்ட 40 நாடுகள் 1997ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி ஜப்பான் நகரான கையோற்ரோவில் நடைபெற்ற பருவநிலை மாற்ற மாநாட்டில் சில நடவடிக்கைகளில் ஈடுபட ஒப்புக்கொண்டன. இதனையடுத்து எழுந்த வாதங்களுக்குப் பின்னர் 2005இல், உலகநாடுகள் சில நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டன. இந்த ஏற்பாட்டில் 187 நாடுகள் கையெழுத்திட்டன. 2009 நவம்பர் மாதத்தில்தான், இந்த கையோற்ரோ ஒப்பந்தப்படி, 40 வளர்ந்த நாடுகள் காபனீரொக்சைடு, மீதேன், நைற்றஸ் ஒக்ஸைட், சல்பர் ஹெக்ஸாபுளோரைட் ஆகியவற்றை 1990ஆம் ஆண்டில் இருந்த அளவிலிருந்து 5.2வீதம் குறைப்பதாக உறுதியளித்தன.

இந்த நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்குத் தனித்துறை, தனி அதிகார அமைப்பு, தனியான நிதி ஒதுக்கீடு போன்றவற்றை ஏற்படுத்துவதாக வளர்ந்த நாடுகள் உறுதி அளித்துள்ளன. இத்தகைய முயற்சிகளை ஏழை நாடுகள் மேற்கொள்வதற்கு அவர்களுக்கு ஆரம்ப கட்ட நிதி உதவியாக 30 மில்லியன் டொலர்கள் அளிப்பது, பின்னர் அதைப் படிப்படியாக அதிகரித்து, 100 மில்லியன் டொலர்கள்வரை அளிப்பது என இந்நாடுகள் உறுதிகூறின. இந்தநிலை ஏற்படுவதற்கு கையோற்ரோ ஒப்பந்தம் உருவாகிய 1997இருந்து ஒரு 'மாமாங்க' காலம் (12 ஆண்டுகள்) ஆகியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இடைப்பட்ட காலத்தில், உலகநாடுகளில் புதிய பொருளதார சக்திகள் தோன்றி வளர்ந்திருக்கின்றன. சீனா, இந்தியா, பிரேசில், தென் ஆபிரிக்கா போன்றவை இந்த ரதத்தில் முக்கியமான பந்தயக் குதிரைகள். இப்போது, அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் எழுப்பும் கோரிக்கை என்னவெனில், கையோற்ரோ ஒப்பந்தத்தில் மேற்படி நாடுகளும் தங்களை இணைத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான். இந்த நான்கு நாடுகளும்கூட, கடந்த தலைமுறை ஆண்டுகள் காலத்தில் பொருளாதாரத்தில் அசுர வளர்ச்சி அடைந்துள்ளன. இந்நாடுகளின் ஒட்டுமொத்த மக்கள்தொகை, உலக மக்கள் தொகையில் 67வீதம். அனைவருமே பொருளாதார நடவடிக்கைகளில் பங்குபெறுவதால், இவர்களாலும் சுற்றுச்சூழல் கணிசமான அளவில் கெட்டுப்போயிருக்கிறது. இது இனியும் தொடரும். ஆகவே, பாவப் பரிகாரத்தில் இவர்களும் பங்குபெறவேண்டும் என்பது அமெரிக்கா போன்ற நாடுகளின் தற்போதைய வாதம்.

ஆனால், இந்நாடுகள் நான்கும் தங்களுக்குள் என்னதான் பிரச்னை இருந்தாலும் இந்த விஷயத்தில் ஒன்றுபட்டு இருக்கின்றன. "நாங்கள் ஏதோ தட்டுத் தடுமாறி மேலேவந்துவிட முயன்று கொண்டிருக்கிறோம், இந்தச் சமயத்தில் கையோற்ரோ ஒப்பந்தம்போன்ற மிகப்பெரும் பொறுப்பை எம்மால் சுமக்கமுடியாது'' என்று கூறுகின்றன. இந்தநிலையில் கோபன்ஹேகன் மாநாட்டில், வளர்ந்த நாடுகள், அவற்றைச் சார்ந்து இருக்கும் நாடுகள் ஆகியன, நேரடியாகவும், மறைமுகமாகவும், மேற்படி நான்கு நாடுகளை 'அமெரிக்க ராகத்துக்கு' தாளம் போடச்சொல்லி வலியுறுத்தின. ஆனாலும், அவர்களால் ஏதும் செய்யமுடியவில்லை.

இந்த நான்கு நாடுகளும் ஒப்புக்கொள்ளாவிட்டால் மாநாடு தோல்வியில் முடியும் என்ற நிலை எழுந்தது. உடனடியாக, ஒபாமா மாநாட்டின் கடைசி நாளன்று கோபன்ஹேகனுக்குப் பறந்துபோனார். பல்வேறு நாடுகளின் தலைவர்களைப் பார்த்துப் பேசினார். முக்கியமாக சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் தென் ஆபிரிக்கா நாடுகளின் உயர் அதிகாரிகள் மற்றும் தலைவர்களை சந்தித்துப் பேசி, அடிப்படையாகச் சில விஷயங்களையாவது யோசிப்பதுபற்றி முடிவுசெய்ய இந்நாடுகளை வெற்றிகரமாக வலியுறுத்தி, அதையே கோபன்ஹேகன் மாநாட்டின் முடிவு அறிவிப்பாக வெளியிட்டார். இதில் மொத்தம் 12 அம்சங்கள் இருந்தன. இந்த நான்கு நாடுகளோடு அமெரிக்காவும் ஐந்தாவது நாடாக சேர்ந்து, இத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது. இவற்றில் சில விஷயங்கள் முக்கியமானவை.

● வறியநாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு, சுற்றுச் சூழல் மாசுகள் உருவாக்கும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக, நிலைமையைச் சீர்செய்ய நவீன வசதிகளை உருவாக்க நிதியுதவிகளை அளிப்பது.

● கையோற்ரோ ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்ட உதவிகளை அளிக்க வளர்ந்த நாடுகளுக்கு 2020வரை கால அவகாசம் அளிப்பது.

● காடுகள்,நிலவளங்களை அழிப்பது போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணரச்செய்ய கூட்டு நடவடிக்கைகள் எடுப்பது.

● கோபன்ஹேகன் பசுமை பருவநிலை நிதியகத்தை உருவாக்குவது.

● தேவைப்படும் நாடுகளுக்குப் பசுமை இல்ல விளைவு மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றைத் தடுப்பதற்குத் தேவையான, தொழில் நுட்பம், அறிவுத்திறன், செயல்திறன் போன்றவற்றில் உதவுவது.

● மேற்படி ஷரத்துகளை 2015க்குள் நடைமுறைக்குக் கொண்டுவருவது

யார் எப்படித் தீர்மானம் இயற்றினாலும், இற்றுக்கெல்லாம் உலகநாடுகளிலுள்ள சாதாரண பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. அவர்களது ஒத்துழைப்புத் தேவையெனில், இவற்றைப்பற்றி அவர்களுக்கு ஓரளவாவது விஷயம் தெரிந்திருக்க வேண்டும். இது குறித்து 2008ஆம் ஆண்டில் 'கலப் போல்ஸ்' என்ற சர்வதேச கருத்துக்கணிப்பு நிறுவனம், உலகளாவிய ஆய்வு ஒன்றை நடத்தியது. 127 நாடுகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வளரும் நாடுகளில் இதுபற்றிய தெளிவு மிகக் குறைவாக இருக்கிறது. ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தெளிவான புரிதல் என்பது இல்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.


நிலைமை மோசமாக இருந்தாலும், பருவநிலை குறித்த பிரச்னை உலகத்தின் உயர் மட்டத்தில் இருப்பவர்களின் முழுமையான கவனத்தைப் பெற்றிருப்பது ஆறுதல் அளிக்கிறது என்பது உண்மைதான். ஆனால், இந்த உயர் மட்டத்தில் இந்த விஷயத்தில் ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையும் இன்னும் உருவாகத் தொடங்கவில்லை. இதனாலேயே தீர்வுகளும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும் இதுவரை எட்டாக் கனியாக இருக்கின்றன. இந்தக் கசப்பான உண்மையை மீண்டும் ஒருமுறை வெளிச்சம்போட்டுக் காட்டியதுதான் கோபன்ஹெகன் மாநாட்டின் சாதனை என்று சொல்லலாம். ■

ஜி. என். பி. நூற்றாண்டு

# கர்நாடக இசைக்கு வைர அலங்காரம்

## எவருக்கும் இல்லாத யோக்கியதை

எஸ். சம்பத்குமார்



"சொன்னதை செய்திட சாகசமா..."
"திக்குத் தெரியாத காட்டில்..."
"ராதா சமேத கிருஷ்ணா..."

"கண்ணனே என் கணவன்..." இந்தப் பாட்டுக்களெல்லாம் ஒரு காலத்தில் புகழ்பெற்று, பட்டி தொட்டிகளெல்லாம் ஒலித்த பாடல்கள். இந்தப் பாடல்கள் பிரபலமடையக் காரணம், இவற்றைப் பாடியவரின் மாயக் குரல்தான். மயக்கும் அக் குரலுக்குரியவர், ஜி.என். பாலசுப்பிரமணியம் என்ற மேதை; 'ஜி. என். பி.' என்று அழைக்கப்பட்டவர்.

திரைப்படப் பாடல்களை பாடி நடித்த எம். கே. தியாகராஜ பாகவதருக்கு (எம். கே. ரி.) இணையான புகழை கர்நாடக இசையில் ஜி. என். பி. பெற்றிருந்தார். எம். கே. ரி. யைப் போலவே, ஜி. என். பி. க்கும் ஏராளமான விசிறிகள். 1910 ஆம் ஆண்டு யூன் 6 ஆம் தேதி பிறந்த ஜி. என். பி. யின் நூற்றாண்டு இப்போது கொண்டாடப்படுகிறது.

ஜி. என். பி. பிறந்ததுமுதலே சங்கீத சூழலில்தான் வளர்ந்தார். அக் காலத்திலேயே ஆங்கில இலக்கியத்தில் சிறப்பு பட்டம் பெற்று, இசையைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்த கலைஞர் அவர்.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோதுதான் அவரின் முதல் மேடைக்கச்சேரி நிகழ்ந்தது. 1928ஆம் ஆண்டு, சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் உற்சவத்தில் முசிரி சுப்பிரமணிய ஐயரின் இசை நிகழ்ச்சி நடைபெறுவதாக இருந்தது. ஆனால், அவரால் வரமுடியவில்லை. அவருக்குப் பதிலாக ஜி. என். பி. பாடினார்.

அன்று அவர் மூன்றுமணிநேரம் பாடினார். அப்படியே புகழேணியில் ஏறத்தொடங்கினார்.

அழகிய தோற்றம்; காதில், மின்னும் வைரக் கடுக்கன்; நெற்றியில் குங்குமம்; சிவந்த நிறம். எல்லாவற்றுக்கும் மேலாக, மயக்கும் குரல். ஒப்பற்ற இசைப் புலமை.

கேட்கவா வேண்டும்; உடனடியாகவே அனைவரையும் கவர்ந்து, புகழின் உச்சிக்கு சென்றுவிட்டார்.

ஜி. என். பி. யின் குரல்வளம்; கற்பனைத் திறன்; ராகங்களை அவர் கையாளும் விதம் அனைத்துமே கவர்ச்சிகர

மாக இருந்தன.

அவருடைய முதல் குரு, மதுரை சுப்பிரமணிய ஐயர். நேரடியாக பாடங்களைக் கற்றுக்கொண்டது அவரிடம் மட்டுமே. பி. ஏ. (சிறப்பு) முடித்த பின்னர், சென்னை பல்கலைக் கழகத்தில் இசைத் துறையில் டிப்ளோமா வகுப்பில் சேர்ந்தார். அங்கு அவருக்கு இசை கற்பித்தவர் டைகர் வரதாச்சாரியார்.

படித்து பட்டம் பெற்றிருந்ததால், இசையிலும் ஜி. என். பி. ஓர் ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்தார். அரியகுடி இராமானுஜ ஐயங்கார்தான் தனது மானசீக குரு என்று அவர் கூறி வந்தார்.

கீர்த்தனைகளுக்கு மெருகூட்டி, அலங்கரித்துப் பாடும்போது மக்கள் மயங்கிநின்றனர். "ப்ரோசேவா..'' என்ற கமாஸ் இராக கீர்த்தனையை இவர் பாடக்கேட்ட மைசூர் வாசுதேவாச்சாரியார், "நானா இந்தக் கீர்த்தனையை இயற்றினேன்? என் கீர்த்தனைக்கு இத்தகைய அழகும் கவர்ச்சியும் ஜி.என்.பி.யால் மட்டுமே அளிக்கமுடியும்'' என்று கூறினார். அவர்தான் அக் கீர்த்தனையை இயற்றியவர்.

"சாதாரணமான ஒரு பெண்ணை அற்புதமான வைர ஆபரணங்களால் அலங்கரிப்பதுபோல, என் கீர்த்தனைக்கு அவர் உயிரூட்டிவிட்டார்'' என்றார் அவர்.

1956ஆம் ஆண்டு ஒரு கச்சேரியில் காம்போதி ராகத்தில் "ஸ்ரீ சுப்ரமண்யாய நமோஸ்துதே..'' என்ற தீக்ஷிதர் கிருதியை ஜி. என். பி. பாடினார். எல்லா வித்வான்களும் 'வாசவாதி' - என்ற அடியைத்தான் நிரவல்செய்ய எடுத்துக்கொள்வது வழக்கம். ஆனால், ஜி. என். பி. 'தாபத்ரய ஹர நிபுண' என்ற அடியை எடுத்து அற்புதமாக நிரவல்செய்து, சுரம் பாடினார். அந்த நிகழ்ச்சியைக்கேட்ட இசை அறிஞர் டி. எல். வெங்கட்ராம ஐயர் - இவர்தான் தீக்ஷிதர் கிருதிகளில் வல்லவர் என்று கருதப்பட்டவர் - கூறினார், "நாங்கள் வேறு உலகுக்கே கொண்டுசெல்லப்பட்டுவிட்டோம்; ஜி. என். பி. என்ற மாமேதையால் மட்டுமே இப்படியானதொரு புதுமையைச் செய்ய முடியும்'' - என்று.

தோடி ராகம் என்றாலே நாதஸ்வர மேதை திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளையின் நினைவுதான் வரும். அவரின் இல்லத் திருமணம் ஒன்றில் ஜி. என். பி.யைத் தோடி ராகம் பாடும்படி பிள்ளைவாள் கேட்டுக்கொண்டார். ஜி. என். பி. பாடிய தோடியைக் கேட்டு, 'இதுவல்லவா தோடி' என்று வியந்து பாராட்டினார். ஜி. என். பி. பாடிய சண்முகப்பிரியாவை ஒருமுறை கேட்ட இராஜரத்தினம்பிள்ளை, "இந்த ராகத்தை ஐயாதான் பாடணும்; நான்தான் வாசிக்கணும். வேறு எவருக்கும் இந்த ராகத்தைத் தொடக்கூட யோக்கியதை கிடையாது'' என்றார்.

ஜி. என். பி. யின் 'பிருகா'க்கள் மிகவும் பிரசித்தமானவை. நல்ல பிருகா சாரீரம் அவருடையது. ஆனால், சுருதியை விட்டு, ஒரு நூலிழை விலகியே பாடுவார். அதைத் தன் மேதைமைமூலம் சரிசெய்துவிடுவார். விரிவான ராகம்-தானம்-பல்லவி பாடுவதில் வல்லவர். ராக ஆலாபனையின்போது 'சுருதி பேதம்' செய்து, மெய்சிலிர்க்கச் செய்வார். *Key change* என்ற மேற்கத்திய இசை உத்தி அது.

எனினும், அவருடைய இசையில் 'பாவம்' இல்லை, வேகம் மட்டுமே இருந்தது; புலமையும் கற்பனையும் இருந்தன, 'சௌக்கியம்' இல்லை - என்று குறைகூறுவோரும் உண்டு. அவர் ஆணழகன். நறுமணப் பொருள்களை பயன்படுத்துவது அவருக்குப் பிடிக்கும். பெண்களைக் கவர்ந்த கலைஞர்.


அவரது இசை நிகழ்ச்சிகளில் ரசிகர் விருப்பமாக வரும் சீட்டுக்கள் பெரும்பாலும் பெண் ரசிகர்களிடமிருந்தே வரும் என்பார்கள். அந்தச் சீட்டுக்களில் தங்கள் முகவரியையும் எழுதிவைப்பார்களாம் பெண்கள்.

அவர், 'உதயணன் வாசவதத்தை', 'பாமா விஜயம்', 'சதி அனுசூயா', 'ருக்மாங்கதன்', 'சகுந்தலை' ஆகிய ஐந்து திரைப்படங்களில் நடித்திருக்கிறார். எம். எஸ். சுப்புலட்சுமியுடன் 'சகுந்தலை'யில் துஷ்யந்த மகாராஜாவாக நடித்து, இருவரும் பாடிய "பிரேமையில்...'' என்ற பாட்டு இன்றும் இனிக்கும் பாட்டு. அப்பொழுது, ஜி. என். பி. க்கு எம். எஸ். சுப்புலட்சுமி காதல் கடிதம் எழுதி அனுப்பியதாக எம். எஸ்ஸின் சுயசரிதையாளர் டி. ஜி. எஸ். ஜோர்ஜ் கூறியிருக்கிறார்.

ஜி. என். பி. பல பாடல்களை இயற்றியுள்ளார். எம். எல். வசந்தகுமாரி, திருச்சூர் இராமச்சந்திரன், சாருமதி, ராதா ஜெயலட்சுமி என்ற அவருடைய சிஷ்ய பரம்பரை, இன்றைய சுதா ரகுநாதன்வரை தொடர்கிறது. ஒரு காலத்தில் புகழ்பெற்றிருந்த அவருடைய பாட்டுக்களை இன்று பாடுவோர் இல்லை.

ஜி. என். பி. 1965ஆம் ஆண்டு மே முதலாம் தேதி, அவரது 55ஆவது வயதை அடையும்வேளையில் மறைந்தார். என்றாலும், ஜி. என். பி. இசை உலகில் ஒரு சகாப்தமாகவே திகழ்ந்தார்.

படங்கள்: நன்றி, 'சுருதி'



கண்டதும் கேட்டதும்

# இசைப் பிரியர்

சுதா ஜகந்நாதன்



இவர் ஓர் இசைப் பிரியர். இசை கேட்டு, தாளமும் போடுவார். அப்படித்தான் இவர் வீற்றிருக்கிறார்.

யார் என்று தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளதா? தெரிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்.

கர்நாடக இசைக் கலைஞர்களும் பலர், அதிக இசைப் புலமைபெற்று விளங்க வேண்டுமென்று இவரை நாடி வந்து போய்க்கொண்டிருப்பதாக தெரியவருகிறது. இவர்தான் விண்ணையும் தாண்டி உயர்ந்தவர்.

நரசிம்மர் என்னும் கடவுள்தான் இவர்.

மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் நான்காவது அவதாரமே நரசிம்ம அவதாரம். இவர் மிகவும் கடுமையாகவும் உக்கிரமாகவும் அவதாரமெடுத்தார்.

ஆந்திர மாநிலத்திலுள்ள அஹோபிலம் என்ற இடத்தில்தான் விஷ்ணு, நரசிம்மனாக பக்தன் பிரகலாதனுக்கு காட்சி கொடுத்து, இரண்யகசிபு என்ற அரக்கனை வதம்செய்தார். இங்கு அதிசயம் என்னவென்றால், நரசிம்மர் ஒன்பது சுயம்பு (தான்தோன்றி) மூர்த்திகளாக காட்சிகொடுக்கிறார். அவர்களுள் எட்டாவது மூர்த்தியாக சத்ரவாட நரசிம்மர். 'ஆஹா, ஊஹூ' என்று, கந்தர்வர்களின் கானத்தைக் கேட்டு, தன் தொடையில் ஆதி தாளம் போட்டுக்கொண்டிருக்கிறார்.

இவர் மெய்மறந்து, கானத்தை ரசித்துக்கொண்டிருக்கிறார் என்று, இங்கு வந்துபோவோருக்கு இந்த மகிமையை விளக்கும் பணியாளர் சஞ்சீவா கூறுகிறார்.

சஞ்சீவா, மிகவும் அழகாக இந்த இறைவனின் மகிமையையும், இங்குள்ள அர்ச்சகர் தெலுங்கு மொழியில் இவ்விறைவனைப் பற்றியும் கூறியவற்றைக்கேட்டு மெய்சிலிர்த்தது.

சித்திர வீணை கணேஷ், சுமித்தா மாதவ் போன்றவர்கள் அண்மையில் வந்து இச் சந்நிதியில் பாடிச் சென்றதாக சஞ்சீவா தெரிவிக்கிறார். கலையில் முன்னேறவேண்டும் என்று அதிகம் விருப்பம் உள்ளவர்கள் இங்கு அடிக்கடி வந்து அருள் பெற்றுச் செல்கின்றனர் என்று அவர் கூறுகிறார்.

ஆக, முத்துஸ்வாமி தீக்ஷிதரே நரசிம்ம பெருமானைப் பற்றி சமஸ்கிருதத்தில் "நரஸிம்ஹாகச்ச.." என்ற மோகன ராக கீர்த்தனையை மிஸ்ரசாபு தாளத்தில் இயற்றியுள்ளார். இக் கீர்த்தனை தமிழ்நாட்டிலுள்ள சோளிங்கபுரம் என்ற ஊரில் கோவில்கொண்ட இறைவனைப்பற்றியது.

இதுபோலவே, தமிழ்நாட்டின் கூத்தனூருக்கு அருகே கலைமகளுக்கு கோவில் உள்ளது. இக் கோவிலில் வீணை விதுஷி கல்பகம் சுவாமிநாதன் தனது சிஷ்யர்களுடன் வாசித்து அருள்பெற்றதாக முன்பொருமுறை கூறியிருந்தார்.

(நான்கு கைகளில், தாளமிடும் கை அங்கவஸ்திரத்துள் மறைந்து போயிருக்கிறது) ■

விழாக்களில் கொள்ளையாய்க் குதூகலிப்பதில் சென்னையைத் தவிர இன்னோரிடம் இருக்குமா? அதுவும் 'மார்கழிச் சென்னை..?'

'டிசம்பர் சீசன்' - இசைவிழாக் காலம், சுமார் நூறாண்டுகால பிரசித்தமானது.

சின்ன வயதில், அகில இந்திய வானொலி அஞ்சல்செய்யும் இசைவிழா நிகழ்ச்சிகளை இரவு ஒலிபரப்பு முடியும்வரை பலரும் கூடியிருந்து கேட்பது, அந்தக் காலத்து நினைவுகளில் பசுமையாயிருக்கிறது. 'ஆசைகாட்டி மோசம் செய்வது'போல, கச்சேரி தொடர்ந்துகொண்டிருக்கையிலேயே அஞ்சலை நிறுத்தி, ஒலிபரப்பை முடித்துக்கொள்வதும் நினைவிருக்கிறது.

அப்போதெல்லாம் நான்கு, ஐந்து சபாக்களில் நடைபெற்ற இந்த இசைவிழா, இப்போது நூற்று முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில், டிசம்பரையும் தாண்டி, ஜனவரியும் முடியும்வரை நடைபெறுகிறது. சபாக்கள் தவிர, கலாக்ஷேத்ரா, சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன், இன்னும்பல அமைப்புக்களும் இதில் சேர்கின்றன.

இசையுடன், நடனத்துக்கும் ஒரு சிறப்பிடத்தை தியாகராஜநகர் கிருஷ்ணகானசபா அளித்துவந்தபோது, இப்போது, மியூசிக் அக்கடெமி உள்பட பல சபாக்களில் நடனமும் முக்கியத்துவம் பெறுகிறது.

இதுதவிர, இசை, நடனத்துடன் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள்; பாராட்டு, பட்டமளிப்பு வைபவங்கள்.

இம்முறை இதில், ஜி. என். பி. நூற்றாண்டு சிறப்பிடம்.

ஜனவரியில் திருவையாற்றில் தியாகராஜ உற்சவம். இவற்றோடு, மற்றொரு பெருவிழாவாக சென்னை புத்தகக் கண்காட்சி.

கூடவே இப்போது இவை எல்லாவற்றுடனும், மாநில அரசின் 'சென்னை சங்கமம்', ஏராளமான அரங்கங்களில் நடைபெறும் கிராமிய திருவிழா. ஆக, இப்படி அதிகாலையிலிருந்து நள்ளிரவுவரை தினசரி நிகழ்ச்சிகள்.

குதூகலமா, 'மார்கழிச் சென்னைபோல..' என்று இனிச் சொல்லவேண்டும்!

டிசம்பர் 31ஆம் தேதி இரவு சென்னையை அடைந்திருந்தபோது, மறுநாள் புதுவருட தினத்தை வரவேற்று, வழக்கம்போலவே காலையில் இந்தியன் பைன் ஆர்ட்சில் பிரமீளா குருமூர்த்தியின் இசைக் கச்சேரி. மாலை, நாரதகான சபாவில் டாக்டர் பத்மா சுப்ரமண்யத்தின் நடனம்.



பூஷணி கல்யாணராமன்



பிரமீளா குருமூர்த்தி

# மார்கழிச் சென்னை

## கொள்ளை இன்பம் குலவும் இன்னிசை

ஒ. எஸ். தியாகராஜன், சஞ்சய் சுப்பிரமணியம், ரி. எம் கிருஷ்ணா, சுதா ரகுநாதன், சௌமியா, பூஷணி கல்யாணராமன், காயத்திரி கிரிஷ், சிக்கில் குருச்சரண் என்று பலருடைய கச்சேரிகள்.

முதன் முதலாக பார்த்த சில நடன நிகழ்ச்சிகள்.

அலர்மேல் வள்ளி, மாளவிகா சருக்கை, நர்த்தகி நடராஜ், ரமா வைத்தியநாதன் ஆகியோரின் நடனங்கள் ஆவலாக இருந்தபோதும் பார்க்க முடியவில்லை.

எவ்வளவு நேரம் வேண்டுமானாலும், தன்னுடைய முகபாவம், அபிநயத்தால் மட்டுமே முழு அவையையும் லயிப்பில் ஆழ்த்தி வைத்திருக்கவல்ல ஆற்றல் பத்மாவுடையது. விராலிமலைக் குறவஞ்சியில் அவரது மாணவிகள் அத்தனைபேரிடமும் அவரது நடனத்தின் துல்லியமான தனித்துவ முத்திரை பளிச்சிடுகிறது. பாட்டு, நட்டுவாங்கம், பக்கவாத்தியமும் அப்படியேதான். பத்மா சுப்ரமண்யத்தின் சிஷ்யரான திரை நடிகர் வினீத் கட்டியக்காரனாக வந்தார்.

கச்சேரிகள் அனைத்தும் சீசனுக்கான விசேஷ உழைப்பை வெளிக்காட்டுகின்றன.

ரி. எம். கிருஷ்ணா தனி பல்லவி கச்சேரிகள் செய்கிறார். "வாதாபி கணபதிம்.." உம் இராகம்-தானம்-பல்லவியோகவே பாடுகிறார். சஞ்சய் சுப்பிரமணியத்தின் நான்கு மணிநேர கச்சேரி விசேஷமாக அறிவிக்கப்படுகிறது.

ஆக, உண்மை ஒன்று சொல்வேன். பிரமீளா குருமூர்த்தியும் பூஷணி கல்யாணராமனும் 'மாமியார் மெச்சும் மருமக்கள்' இருவர். ஆரவாரமில்லாத, தூய்மையான இனிய கர்நாடக சங்கீதம் இவர்களுடையது. நல்ல சாரீர வளம். மனதுக்கு சுகம் தரும் உன்னதமான இசை.

நாரதகான சபாவில், ஜி. என். பி. நூற்றாண்டு வைபவத்தில் பூஷணி பாடினார். இவர்கள் இருவரும் இந்தியாவின் மருமக்களான இலங்கையர்.

'மார்கழி மஹோற்சவம்' என்று ஜெயா தொலைக்காட்சியும் இந்த சீசனில் விழாவொன்றை நிகழ்த்துகையில், சென்னை, ராதாகிருஷ்ணசாலை 'ரசம்' உணவகமும் 'டெக்கான் குரோணிக்கிள்' தினசரியும் தினம் ஒரு கலைஞருடனான சந்திப்பு நிகழ்ச்சியை நடாத்தியது. இந்த 'கலை ரசத்தை' எம்பார் கண்ணனுடன் சுவைத்தது முத்தாய்ப்பான ஒரு பெருநிறைவு.

வளர்ந்துவரும் பிரபல்யமான இந்த இளம் வயலின் வித்வான், '1930 - 60 காலப்பகுதி கர்நாடக இசையின் பொற்காலம்' என்று மன அர்ப்பணிப்புடன் கூறினால், அது இத்துணை கொள்ளைக் கொண்டாட்டத்திலும் பெற்ற பெருங் களிப்பு அல்லவா?

– மாலி

# கண்ணாடியும் காவிய நாயகனும்

## ரெண்டுல்கரின் பிரமிப்புச் சாதனை

அரவிந்தன்



அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் ஆட்டக்காரரும் கிரிக்கெட் எழுத்தாளருமான இயன் சப்பல் 2007இல் இப்படி எழுதினார்: "சச்சின் ரெண்டுல்கர் கண்ணாடிமுன் நின்று, 'கண்ணாடியே, நான் இப்போது என்னசெய்யவேண்டும்' என்று கேட்கவேண்டும். 'நீ ஓய்வுபெறவேண்டும்' என்று அவரது பிம்பம் சொல்லும்".


கிரிக்கெட் உலகமே ரெண்டுல்கர் புகழ்பாடிவரும் இன்றைய சூழலில், இயன் சப்பலின் கருத்து விநோதமாகவே இருக்கும். இப்படி அவர் எழுதியதன் பின்னணியை முதலில் பார்ப்போம். 2007இல் உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியா முதல் சுற்றிலேயே தோற்றுத் திரும்பியிருந்த தருணம் அது. இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் மிகவும் கோபமாக இருந்தார்கள். அப்போது அணியின் பயிற்சியாளராக இருந்த கிரேக் சப்பல் அணியின் மூத்த ஆட்டக்காரர்களைக் குறைகூறிய செய்திகள் கசிந்த நேரம். ரெண்டுல்கர், சௌரவ் கங்குலி, ராகுல் திராவிட் போன்ற மூத்த வீரர்கள் விலகி, இளைஞர்களுக்கு வழிவிடவேண்டும் என்று சிலர் சொல்லிக்கொண்டிருந்த சமயம். ரெண்டுல்கரின் தனிப்பட்ட ஆட்டமும் அவ்வளவு சிறப்பாக இல்லாமலிருந்த காலகட்டம் அது.

இந்த மூன்று ஆண்டுகளில் பல விஷயங்கள் நடந்துவிட்டன. இங்கிலாந்து சென்று ஒருநாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் இந்திய அணி நன்றாக விளையாடியது. அதன்பிறகு அவுஸ்திரேலியாவிலும் இந்தியா சிறப்பாகவே விளையாடியது. வேகப்பந்து வீச்சுக்குத் தோதான பெர்த் ஆடுகளத்தில் நான்கே நாள்களில் ஆஸி அணியை வென்றது. இந்த ஆட்டங்களில் ரெண்டுல்கரின் பங்கு கணிசமாக இருந்தது (இங்கிலாந்திலும் பெர்த்திலும் அவர் சதங்கள் அடித்தார்). அவுஸ்திரேலியாவில் முதன்முறையாக ஒருநாள் போட்டித் தொடரைக் கைப்பற்றியதிலும் ரெண்டுல்கரின் பங்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது. 2008இல் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 387 ஓட்டங்களைத் துரத்தி எடுத்த சாதனையில் சதம் அடித்த சச்சினுக்கு மிக முக்கியமான பங்கு இருந்தது. சென்ற ஆண்டு ஆஸி அணிக்கெதிரான ஒருநாள் ஆட்டத்தில் 175 ஓட்டங்கள் எடுத்து, எதிரணி கப்டன் ரிக்கி பொண்டிங்கின் அபரிமிதமான பாராட்டைப் பெற்றார் சச்சின்.

சச்சின் ரெண்டுல்கர் இன்று கிரிக்கெட்டின் காவியநாயகன் என்னும் அந்தஸ்தைப் பெற்றுவிட்டார். டெஸ்ட் போட்டிகளிலும் ஒருநாள் போட்டிகளிலும் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் அவர். இரு ரகங்களிலும் அதிகபட்ச சதங்களைக் குவித்தவர். உலகிலேயே அதிக அநுபவம் உள்ள ஆட்டக்காரர். எல்லாவற்றுக்கும் மேலாக, ஒருநாள் போட்டிகளில் 200 ஓட்டங்கள் எடுத்த ஒரே துடுப்பாட்ட வீரர் என்னும் பெருமையைச் சமீபத்தில் பெற்றிருக்கிறார். நாடாளுமன்றம் அவரைப் பாராட்டுகிறது. சினிமா உலகம் அவர்மீது புகழுரைகளைக் குவிக்கிறது. மக்கள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். உலகம் முழுவதிலும் உள்ள கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் அவருக்குப் புகழாரம் சூட்டுகிறார்கள். இவர் டொன் பிராட்மனைவிடவும் சிறந்த வீரர் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் நாசர் ஹுசைன் கூறுகிறார்.

ரெண்டுல்கர்போன்ற ஓர் ஆட்டக்காரர் சிறப்பாக ஆடுவார் என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஆனால், ஆட ஆரம்பித்து பதினெட்டு ஆண்டுகள் கழிந்தபின்னர் 'ஆட்டத்தில் சரளமும் துல்லியமும் குறைந்துவிட்டது. இப்போதே ஓய்வுபெறுவது நல்லது' என்றும் விமர்சனங்கள் எழுந்தபிறகு ஒரு துடுப்பாட்ட வீரர் புத்துயிர் பெறுவது, அதுவும் பிரமிக்கத்தக்க சாதனைகளை நிகழ்த்துவது நம்பமுடியாத நிகழ்வு. அதை நிகழ்த்தியிருப்பதுதான் சச்சினின் மாபெரும் சாதனை.

ஆட்டத்தின்மீதான அபரிமிதமான காதல் (கிட்டத்தட்ட பக்தி என்றும் சொல்லலாம்), விடாமல் தொடர்ந்து போராடும் குணம், எந்த வயதிலும் தவறுகளைத் திருத்திக்கொள்ளும் அணுகுமுறை, விமர்சனங்களைக்கண்டு உணர்ச்சிவசப்படாத பக்குவம், வெற்றியின் கனம் தலைக்கு ஏறாமல் பார்த்துக்கொள்ளும் நிதானம், காலத்தின் ஓட்டத்தை மறுதலிக்கும் எதிர்நீச்சல் ஆகிய பண்புகள்தான் சச்சினின் நீடித்த



## எடுக்கும் ஓட்டங்களைவிட, அவற்றை எடுக்கும் விதம் முக்கியமானது

வெற்றிக்கும் எப்போதும் வளர்முகமாக இருக்கும் அவரது திறமைக்கும் காரணம்.

இயன் சப்பல் சச்சினை ஓய்வுபெறச் சொன்னபோது அவரது ஆட்டத்தை விமர்சித்தவர்கள்கூட அந்த 'அறிவுரை'யை மிகையான கூற்றாகவே கருதினார்கள். ரெண்டுல்கர்போன்ற ஒரு மேதைமைகொண்ட ஆட்டக்காரரை சில தோல்விகளைவைத்து எடைபோடக்கூடாது என்றும், எப்போது ஓய்வுபெறுவது என்பது அவருக்கே தெரியும் என்றும் கிரிக்கெட்டின் ஜாம்பவான்களான விவியன் ரிச்சர்ட்ஸ், ஜெவ்ப் பொய்கொட், சுனில் கவாஸ்கர் போன்றோர் கூறினார்கள். 'இன்றைக்கு ஓய்வுபெற்றாலும்கூட, அவர் கிரிக்கெட்டின் காவிய நாயகன்தான் (லெஜெண்ட்) என்று சொல்லுமளவுக்கு சச்சின் ஏற்கனவே சாதித்துவிட்டார்' என்றார் ரிச்சர்ட்ஸ். பீற்றர் ரூபோக்போன்ற கிரிக்கெட் விமர்சகர்களும் இதையே கூறினார்கள். இந்தியக் கிரிக்கெட் வாரியத்தின் தேர்வுக் குழுவும் சக ஆட்டக்காரர்களும் அவர்மீது முழு நம்பிக்கை வைத்தார்கள். சச்சின் மீண்டுவந்தார். தன் ஆட்டத்தை மறுகண்டுபிடிப்புச் செய்தார். புத்திளமையோடு ஆட்டத்தின் எல்லைகளை விரிவுபடுத்திக்கொண்டிருக்கிறார்.

துடுப்பு வீச்சில் வரப்பிரசாதம் பெற்றவர் என்று சொல்லத்தக்க திறமை படைத்தவர்தான் என்றாலும், தாக்குப்பிடிக்கவும் தொடர்ந்து ஆடவும் அவர் பட்ட சிரமங்கள் கொஞ்சநஞ்சமல்ல. முதுகு வலி, கால் விரலில் எலும்பு முறிவு, முழங்கை வலி, தோன்பட்டைச் சதை கிழிசல் என்று உடல் முழுவதும் விழுப்புண்கள் தாங்கிய சச்சின் தொடர்ந்து ஆடுவதற்கே சிரமப்பட்ட காலம் உண்டு. குறிப்பாக 2005இல் 'ரென்னிஸ் எல்போ' என்று சொல்லப்படும் முழங்கை வலி அவரது ஆட்டத்தையே முடிவுக்குக் கொண்டுவந்துவிடுமோ என்ற அளவுக்கு அச்சுறுத்தியது. "கையில் தேநீர்க் கோப்பையைத் தூக்கக்கூட முடியாமல் அவதிப்பட்டேன்" என்று ரெண்டுல்கரே சொல்லியிருக்கிறார்.

உடல் காயம் இப்படியிருக்க, மனதளவிலும் நிறைய காயங்கள். கடும் நிர்ப்பந்தம், அசாத்தியமான எதிர்பார்ப்பு ஆகியவற்றைச் சுமந்து ஆடவேண்டியிருப்பது ஒருபுறம் இருக்க, 1999இல் அவர் உலகக் கோப்பை ஆடிக்கொண்டிருந்தபோது அவரின் தந்தை இறந்துபோனார். 2006-07 ஆண்டுகளில் அவர் விரைவில் ஆட்டமிழந்துகொண்டிருந்த சில சமயங்களில் ஆளுக்கு ஆள் அவருக்கு அறிவுரை சொல்ல ஆரம்பித்தார்கள். எப்படிக் காலை நகர்த்தவேண்டும் என்றெல்லாம் அந்த மேதைக்குப் பாடம் எடுத்தார்கள் சில விமர்சகர்கள். அவரது சொந்த ஊரான மும்பையில் ஒரு டெஸ்டில் இந்தியாவை வெற்றிபெறவைக்க அவரால் முடியாமல் போனபோது, ரசிகர்கள் அவருக்கு எதிராகக் கோஷம் எழுப்பினார்கள். மனதிலும் உடலிலும் பட்ட இத்தனை காயங்களையும் தாண்டிவந்ததுதான் அவரது கிரிக்கெட் வாழ்வின் பயணம்.

இன்று ரெண்டுல்கர் தன் இளமைக் காலத்தில் ஆடியது போலச் சரளமாக ஆடுவதாக விமர்சகர்கள் சொல்கிறார்கள். அவரது திறமையின் உச்சத்தில் அவர் இருப்பதாகவும் சிலர் சொல்கிறார்கள். கடந்த 12 மாதங்களில் சர்வதேச போட்டிகளில் 10 சதங்கள் அடித்திருக்கிறார். அதில் நான்கு டெஸ்ட் சதங்கள் தொடர்ந்து நான்கு டெஸ்ட்களில் அடித்தவை. ஒருநாள் போட்டிகளில் கடந்த ஓராண்டில் மட்டும் மூன்று முறை 150 ஓட்டங்களைக் கடந்திருக்கிறார்.

எடுக்கும் ஓட்டங்களைவிட அவற்றை எடுக்கும் விதம் முக்கியமானது. ரெண்டுல்கர் எல்லாவிதமான ஆடுகளங்களிலும் எல்லாவிதமான பந்துவீச்சாளர்களையும் எதிர்கொண்டு சிறப்பாக ஆடிவருகிறார். எகிறும் பந்துகளைத் தைரியமாக ஹூக் செய்வது அல்லது சற்றே பின்னால் வளைந்து 'அப்பர் கட்' அடிப்பது, கால் திசையில் வீசப்படும் இடப்புறச் சுழல்பந்தை 'இன்சைட் அவுட் ஷொட்' அடிப்பது, வலப் புறத்தில் அதிக தடுப்பாளர்கள் இருக்கும்போது வலப்புறப் பந்துகளை வேகமாக நகர்ந்து இடப்புறம் திருப்புவது என்று பல விதங்களில் அவரது ஆட்டம் மூச்சை நிறுத்தும் அளவுக்கு அபாரமான உத்திகளுடனும் செய்நேர்த்தியுடனும் இருக்கிறது. டெஸ்ட் போட்டிகளில் 50 சதங்கள் என்பது இப்போது அவருக்குக் கைக்கெட்டும் தூரத்தில் வந்துவிட்டது (இப்போது 47). இன்னும் ஓர் இன்னிங்ஸில் பிரையன் லாரா அடித்த 400 ஓட்டங்களைத் தாண்டவேண்டிய சாதனை மீதியிருக்கிறது என்று கவாஸ்கர் போன்றவர்கள் கூறிவருகிறார்கள்.

இன்னும் எவ்வளவு சாதனைகள் படைக்கிறார் என்பது முக்கியமல்ல. 'இவ்வளவுதான்; நீ காலி' என்று சொல்லப்பட்ட ஒருவர் புத்துயிர்பெற்று, ஆட்டத்தின் சிகரத்தைத் தொடுவதும் புதிய சிகரங்களை உருவாக்குவதும் அசாத்தியமானவை. இந்த அசாத்தியத்தைத் தனக்கே உரிய உறுதியுடனும் நளினத்துடனும் சாத்தியமாக்கிவருவதே ரெண்டுல்கரின் தனிப்பெருமை.

இன்று கற்பனை செய்யமுடியாத உயரத்தில் இருக்கும் சச்சினைப் பார்த்து இயன் சப்பல் என்ன சொல்வார்? ஒருவேளை அவர் கண்ணாடி முன்னால் நின்றால் அந்தக் கண்ணாடியின் பிம்பம் என்ன சொல்லும்?

"நீ எழுதுவதை நிறுத்திக்கொள்" என்று சொல்லக்கூடும்.




# ஓட்டம்

**எப்படி நான் அந்த சாப இரவில் எழுந்தேன்?**
**சிறு தூறல் ஜன்னலில் தெறிக்கும் சப்தம் தவிர**
**வேறு எந்த சப்தங்களுமற்ற அந்த இரவில்**
**எப்படி எனக்கு விழிப்பு வந்தது?**
**இயல்பற்ற அனுமாஷ்ய அமைதி என்னுள் ஊடுருவிற்று.**
**அமைதி நம்மை உறக்கத்திலிருந்து தட்டி எழுப்புமா?**

கடந்த வருடம்தான் பெருநகரங்களில் வாழ்வதை விட்டு கேரளாவில் குடியேறுவது என்று முடிவெடுத்தேன். என்னுடைய கலைப் படைப்புகளின் புகழ் அதிகரித்த காலத்தில் என்னுடைய விரல்கள் திறமையை இழக்க ஆரம்பிப்பதாய் சிலவேளைகளில் நினைத்தேன். அநுபவ வரட்சி அதன் பின்புலமாக இருந்திருக்கக்கூடும். இதனைத் தொடர்ந்து என்னுடைய சிற்பங்கள் ஒரேமாதிரியாக உருவெடுத்தன. கலை, வாழ்வைப் பிரதிபலிக்கலாம்; தவறில்லை. ஆனால், மாற்றமின்றித் தொடர்ந்தால்?

நகரங்களில் எனக்கு 'மொடலா'க வந்தவர்கள் ஆன்ம வரட்சியுடைய நகர்ப்புற படைப்புகளாயிருந்தார்கள். வெளிறிய முகமும் தூசுபடிந்த தலையுமாய் காணப்பட்டார்கள். நனைந்த பஞ்சுபோல அவர்களது தசைகள் தொளதொளத்து இருந்தன. அவர்களின் அடிவயிற்றில் இருந்த கட்டிகளையும் அறுவைச் சிகிச்சை தழும்புகளையும் புடைத்திருக்கும் நரம்புகளையும் ஒருவித சங்கடத்துடன் கவனித்தேன். ஓய்வு நேரத்தில் கருகிய உதடுகளுக்கிடையே சிகரெட்டைப் பற்றவைத்தார்கள். பூரியையும் உருளைக்கிழங்கையும் சுவைத்துச் சாப்பிட்டார்கள். என்னுடைய கழிவறையில் பெரும் ஓசையுடன் மலசலம் கழித்தார்கள். அவர்களுடைய வேகமான அசைவுகள் என்னையும் பீடித்தன. பேருந்துகளிலும் மின்சார ரயிலிலும் செல்லும் பயணிகளின் பொறுமையின்மை அவர்களிடத்தும் காணப்பட்டது.

எப்போதும் எனது நேரம் நிதானமாக கழிவதையே விரும்பினேன். மண்ணுக்கடியில் புதைந்திருக்கும் வித்து போல, பொறுமையை என்னுள் வளர்த்து வைத்திருந்தேன். ஒரு செடி செழித்து மரமாக வளர்வதைப்போல எனது சிற்பங்கள் நின்று நிதானித்து உருவெடுத்தன. மேற்கூரையில்லாத வராந்தாக்களில் வேலைசெய்தேன். நான் உத்தேசிக்காமலேயே எனது சிற்பங்கள் அனல் பறக்கும் வெய்யிலிலும் காற்றிலும் மழையிலும் உருமாறின. இயற்றை அவற்றைத் தொட்டுத் தடவி ஒளிர்ந்திடச் செய்தது. அதனாலோ என்னவோ, பலரும் அவற்றுக்கு உயிர் இருப்பதாக கூறினர். மொடல்களிடமிருந்த அந்த உயிர்ப்பை சிற்பங்கள் இவ்வாறாகப் பெறமுடிந்தது. என்னுடைய சிற்பங்கள் நிறைய விற்பனையாகி வருவாய் அதிகரித்தது. கலையுணர்வு அற்றவர்கள் நான் நிர்வாண உடல்களை கொண்டு சிற்பங்கள் உருவாக்குவது குறித்து அவதூறுகள் பரப்பினர். இத்தகைய வதந்திகளைப் பரப்புகின்றவர்கள் மனநோய் பீடித்தவர்கள் என்றும் அவர்களின் விஷம் தோய்ந்த இதழ்கள் இத்தகைய அருவருப்புக்கு பழகிப்போனவை என்றும் கூறி, அவர்களைப் பற்றி அறியவைத்தார் என் கணவர். அதன்பின்னர் அவர்களது வசைச் சொற்களுக்காய் என் கண்ணீரை நான் வீணாக்கியதில்லை. என் கணவர் தனது நாற்பத்துமூன்றாம் வயதில் அதிக இரத்த அழுத்தம் காரணமாக மூன்றுமாத காலம் படுக்கையில் கிடக்க நேர்ந்தது. அவரது வலது காலும் கையும் முற்றிலுமாய் செயலற்றுப்போயின. சிலகாலம் அவருடைய பேச்சு பாதிக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில்தான் நான் குடும்ப பொறுப்பை ஏற்கவேண்டியதாயிற்று. எனது கலை முழுநேரத் தொழிலானது. படிப்படியாக ஊன்றுகோலுடன் வீட்டில் நடக்கவும் பேசவும் அவருக்கு தெம்புவந்தது. ஆனால், அந்தநிலை வந்தபோது அவருக்கு வேலை பறிபோயிருந்தது. நான் ஓய்வின்றிச் சிற்பங்களை செதுக்கிக்கொண்டிருக்கும்போது என்னருகில் சாய்ந்தவாறு ஊன்றுகோலில் கையூன்றி மெலிதான குரலில், 'வாதநோய்க்காரனுக்கு வாழ்க்கைப் பட என்ன தலையெழுத்து உனக்கு? பாவம், துரதிருஷ்டமானவள் நீ' என்று கூறுவார்.

அந்தக் குரலில் இருந்த அநுதாபம் எனக்கு வேண்டியதாயில்லை. குடும்பத் தேவைகளுக்காய் பொறுப்பேற்பதற்கு முன்னர், காமவிகாரம் படைத்த என் கணவருக்கு ஒரு விளையாட்டுப் பொம்மையைப்போலிருந்தேன். முழுமையான என் உடலை அர்ப்பணிப்பதன்மூலமே அவரை நான் திருப்திப்படுத்தமுடிந்தது. ஒருவேளை அவருடைய இடத்தில், நான் வாதநோயில் படுத்திருந்தால் ஒரு வருடத்துக்குமேல் அவரால் தாக்குப்பிடித்திருக்க முடி

யாது. படுக்கையறையில் கடமையாற்ற முடியாத மனைவியை அவர் கவனித்திருக்கமாட்டார். காம உணர்வுகளுக்கு அவர் அளித்த அதீத முக்கியத்துவம் எனக்கு அச்சமூட்டியது. இதன்காரணமாகவோ என்னவோ, இப்போது அவரைக் கவனித்துக்கொள்வது இரகசிய சந்தோஷத்தை அளித்தது. இந்நிலையில் எனக்கு அவநம்பிக்கைக்குரியவராய் இருக்கமாட்டார் என்ற எண்ணமே தெம்பளித்தது. ஒருநாள் என்னிடம் "நீ இப்போதெல்லாம் கண்ணாடியில் உன்னைப் பார்த்துக்கொள்வதில்லையா?'' என்று கேட்டார்.

"எனக்கு தொடர்ந்து வேலைகள். கண்ணாடியில் முகம்பார்த்துப் பூரிப்பதற்கு வேலைசெய்யும் பெண்ணுக்கு எங்கு நேரம்?'' என்றேன்.

"இந்நாட்களில் நீ மிகவும் அழகு வாய்ந்தவளாகிவிட்டாய். அழகுசாதனங்களின் உதவியின்றியே உன் அழகு சுடர்விடுகின்றது. கண்டிப்பாக உன்னை நீ கண்ணாடியில் பார்க்க வேண்டும்'' என்றார். எவ்வித பொறுப்புமற்று சுகபோகத்தில் திளைத்த பழைய நாட்களில் இவர் என் அழகைப் புகழ்ந்து பேசுகையில் அளவிடமுடியாத சந்தோஷமாயிருக்கும். ஒரு விளையாட்டுப் பொருளுக்கு அந்தப் புகழ்ச்சி தேவையானதுதான். அது நம் சார்புத் தன்மையை மறப்பதற்குப் பெரிதும் உதவும். பொருளாதாரரீதியில் கணவனையும் உறவினரையும் வீட்டு வேலையாட்களையும் பொறுப்பேற்றிருக்கும் மனைவிக்கு இத்தகைய புகழ்ச்சி தேவையில்லை என்பதைப் படிப்படியாக உணர்ந்தேன். என்னை அழகுப் பதுமையாக்கி அவரைச் சந்தோஷப்படுத்தும் அவசியம் இப்போது எனக்கில்லை. நான் அடிமையல்ல; சுதந்திரமானவள். தலைமுறையாய்த் தொடர்ந்துவரும் பரம்பரைப் பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட்டவள் என்று கர்வத்துடன் நினைத்துக்கொண்டேன்.

ஆயுர்வேத சிகிச்சைக்காக என் கணவரைக் கேரளாவுக்கு அழைத்துச் செல்லுமாறு என் நண்பர்கள் ஆலோசனை கூறினர். எங்களது இடமாற்றத்துக்கு இதுவும் ஒரு காரணம். நகரின் எல்லைதாண்டி, கடற்கரையோரத்தில் அமைந்திருந்த நாற்சாரம் வீட்டினை ஒரு தரகன் என்னிடம் காண்பித்தான். பழைய வீடாக இருப்பதால் வாடகை மிகவும் குறைவு என்றான். அந்த வீட்டுச் சுவர்களிலும் மேற்கூரைகளிலும் பாசி படர்ந்திருந்தது. அந்த இரும்பு 'கேற்' துருப்பிடித்து, பல இடங்களில் கிராதி விட்டுப்போயிருந்தது. சுவர்களுக்குப் பின்புறம், பயன்படுத்தப்படாத பாழ்நிலங்களில் காட்டுச் செடிகளும் கொடிகளும் படர்ந்து கிடந்தன. அதற்கப்பால் நீலக்கடல் விரிந்து கிடந்தது. நீரில் சூரிய ஒளி படுவதாலோ என்னவோ கடலுக்கு மேலிருந்த வானம் விநோத வெண்மையில் ஒளிர்ந்தது. அந்தத் தருணத்தில் கடலையும் மேகங்களையும் வானத்தையும் பார்த்தபின்பு, தரகனிடம் "வேறு ஒரு வீட்டைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை'' என்றேன்.

கதவைத் திறந்து இருள் அடர்ந்த அந்த வீட்டுக்குள் நுழைகையில் வௌவால்களின் எச்சமும் எலிப்புழுக்கைகளின் வீச்சமும் கூடிய துர்நாற்றம் வீசியது. வீட்டுக் கதவுகளிலும் சன்னல்களிலும் படிந்திருந்த தூசியை துடைத்துக்கொண்டே வீட்டுத் தரகன், "அண்டை அயலவர்கள் இந்த வீட்டைப் பற்றி நிறைய பொய்கள் சொல்வார்கள்; பொறாமை பிடித்தவர்கள். இந்த வீட்டில் யாரோ ஒருவனை அடித்துக் கொலைசெய்ததாகக்கூட கூறுவார்கள். இங்கு வாடகைக்கு வருபவர்களை விரட்டுவதற்காக இட்டுக்கட்டப்பட்ட கதைகள் அவை'' என்றான். சன்னல்கள் மிகவும் சிறிதாயிருந்தன. நடு முற்றத்திலிருந்து பார்க்கும்போது நீண்ட உருண்ட தூண்களும் கடப்பைக் கல் தளம் பாவியிருந்த முற்றமும் தெரிந்தன. தென்மேல் திசையிலும் கீழ்மேலும் காற்று நுழைந்து செல்வதற்கான வழிகளுடன் வீடு அமைந்திருந்தது.

உள் முற்றத்தின் ஓரங்களில் எனது சிற்பங்களை நிறுவத் தீர்மானித்தேன். சிற்பங்களில் வேலைபார்க்கும்போது நிறைய காற்றும் வெளிச்சமும் அங்கு கிடைக்கும். தரகனிடம் "இந்த வீடு எனக்குப் பொருந்தும்'' என்றேன்.

என் கணவர், "கழிவறைகளை நீ பார்க்க விரும்பவில்லையா?'' என்றார். நான் தலையாட்டினேன்.

"இப்போது எதனையும் பார்க்க எனக்கு விருப்பமில்லை.''

இத்தனை காலம் எனக்காய்த் தனிமையில் கனவுகளுடன் காத்திருந்த வீடு, இறுதியில் என்னுடையதாயிற்று. அதன் கனவுகள் மட்டுமே அந்த பழைய வீட்டை நிலைகுலையாமல் பாதுகாத்திருக்கவேண்டும். இல்லையென்றால், வெகுகாலத்துக்கு முன்பே காற்றும் மழையும் அதன் கூரைகளையும் உத்திரங்களையும் தூண்களையும் சூறையாடியிருந்திருக்கலாம்.

நானும் பல வருடங்களாக எனது மனத் தோற்றத்தில் இம்மாதிரியான வீட்டினைக் கனவுகண்டு வந்திருக்கிறேன். அதன் துருப்பிடித்திருந்த கேற்றும் முள் புதர்கள் நிறைந்த பாழ்நிலமும், அதனைத் தாண்டிக் கரையை முட்டி மோதிக்கொண்டிருக்கும் அலைகளும் எனது கனவுகளில் திரும்பத் திரும்ப வந்திருக்கின்றன. அதன் தலைவாசலையும் சன்னல்களையும் நடுமுற்றத்தையும் தூண்களையும் கடப்பைக் கல் தரையையும் பாசி படர்ந்த மேற்கூரையையும் வௌவால்கள் படபடக்கும் பரண்களையும் எல்லாவற்றையும் நான் பார்த்திருக்கிறேன்.

என் கணவருக்கு மூலிகைத் தைலங்களை உடலில் தேய்த்துக் குளிப்பாட்டுவதற்கு ஒரு கிழவனை நியமித்தேன். வீட்டு வேலைகளையும் சமையலையும் செய்வதற்கு ஒரு கிழவி வந்து சேர்ந்தாள். முதல் சில மாதங்கள் மகிழ்ச்சியுடன் கழிந்தன.

ஒரு கிராமத்துப் பெண்ணும் எனக்கு மொடலாக கிடைத்தாள். அவள் பெயர் ஸ்ரீதேவி. பதினேழு வயதுகூட நிரம்பாதவள். ஆரம்பத்தில் மிகவும் கூச்சமும் தயக்கமும் நிறைந்தவளாயிருந்தாள். பின்னர் பெருமிதத்துடனே தனது நிர்வாணத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தாள். அவளை நிற்க, உட்கார, படுக்க வைத்து நிறைய சிற்பங்களை உருவாக்கினேன். அவளுடைய உயிர்ப்பின் இரத்தத்தையெல்லாம் உறிஞ்சியதாலோ என்னவோ, எனது உருவங்களில் அபூர்வ ஜீவன் ததும்பிற்று. அவள் உயிரற்ற பொம்மை போல சரிந்து விழுகையில் அவளின் பிரதிமைகளோ புத்துயிர்ப்புடன் தங்களை நிலைநிறுத்திக்கொண்டிருந்ததை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தேன். வெயிலின் வெம்மை படுவதாலோ என்னவோ, மனித உடம்பின் உஷ்ணமும் அவற்றுக்கு இருந்தன. நடுநிசி வரையிலும் அந்தக் கல்லிலும் மரத்திலும் சூடு இருந்தது. ஒருநாள் எனது கணவர் அந்தப் பெண்ணின் நிலையைப் பார்த்து, "போதும் நிறுத்து. இனியும் அவளால் தாங்கமுடியாது'' என்றார்.

அவர் முகத்தில் கோபம் தெறித்தது. நேரடியாக என்னிடம் காட்டிய கோபம் எனக்குத் திகைப்பூட்டியது. இதுவரையிலும் எனது சிற்பக்கூடத்துக்குள் நுழைந்திராதவர், இப்போது சிலைகள் உருவாக்க வேண்டாமென்று உத்தரவிடுகிறார்.

அந்தப் பெண் கடப்பைக்கல் தரையில் இடதுபுறம் ஒருக்களித்துப் படுத்திருக்கிறாள். அவள் கண்கள் மூடியிருந்தன.

"அவள் நன்றாகத்தானிருக்கிறாள்'' என்றேன்.

"ஒருவேளை இருக்கலாம். ஆனால், இவ்வாறு தொடர்ந்தால் நிச்சயம் அவள் இறந்துபோவாள். நீ இரத்தக் காட்டேறிபோல் அவள் இரத்தத்தை உறிஞ்சுகிறாய். உன்னுடைய சிற்பங்கள் உனது மொடல்களின் உயிரைத் திருடுகின்றன.''

அந்தப் பெண்ணின் முகத்தை மீண்டும் ஏறிட்டுப் பார்த்தேன். வெளிறிய அழகிய முகம். நீராம்பல்போன்ற கன்னங்கள். நீண்ட புருவங்களுடைய கண்கள்.

"அவள் அழகானவள் என்று நினைக்கிறீர்களா?'' என்று அவரிடம் கேட்டேன்.

"எனது கருத்துக்கு இங்கு இடமில்லை'' என்று முணுமுணுத்தார். ஸ்ரீதேவி; சதைப்பற்று இல்லாத, மெலிந்த இந்த அழகிய பெண்ணின் உடல்மீதான அவர் பார்வை என்னவாயிருக்கும் என்று அறிய முயன்றேன். பறித்துப்போடப்பட்ட பலாக்கிளை போல் படர்ந்திருந்த அவள் உடலின் ஏற்ற இறக்கங்களை கல்லில் வளைவுகளாக என்னால் உருமாற்றமுடிந்தது. ஒவ்வொரு சிலையை முடிக்குந்தறுவாயிலும் அவள் அதிக களைப்பினால் சரிந்துவிடுவாள். ஒரு வனவிலங்கின் அயர்ச்சி போன்றிருந்தது அது. நான் ஆறு உருவங்களை முடித்தபின்னர், அடுத்தடுத்து ஆறு குழந்தைகளைப் பெற்ற அதீத அயர்ச்சி அவளிடத்துக் காணப்பட்டது. ஒருமுறை கண்களைப் பாதி மூடிய நிலையில் "அம்மா, எனக்கு களைப்பாயிருக்கிறது. போக விடுங்கள்'' என்றாள்.

அவளுக்கு சூடான பால் கொடுத்தேன். அவள் உடலை வாசனைத் தைலம் தேய்த்து நன்கு பிடித்துவிட்டேன்.

நான் ஸ்ரீதேவியை மிகவும் நேசித்தேன். ஒரு சிற்பி தன்னுடைய மொடலாக பணிபுரிபவர்களிடத்து காட்டும் நேசந்தான் அது. அவளைக்கொண்டு நான் சிற்பங்களை வடித்த பின்பு, எனது அன்பு திடீரென்று மறைந்துவிடுமா என்று என் கணவர் கேட்டபோது பதில் பேசாமலிருந்தேன். அதற்கான தைரியம் எனக்கில்லை. உணர்வுகளின் வரட்சியை ஒளிவுமறைவின்றிக் காட்ட என்னால் இயலவில்லை. உணவுக்கும் உடைக்குமாய் என்னை முழுவதுமாய் சார்த்திருக்கும் அவருக்கு என் மீதுள்ள மரியாதை குறைந்துவிடும் என்ற பயத்தாலோ என்னவோ நான் ஏதும் பேசவில்லை. குடும்பத் தேவைகளுக்காய் பொறுப்பேற்றவள் என்ற முறையில் அவர் என்னைச் சார்ந்திருப்பதை உள்ளூர சபித்தேன். அதேநேரம், இந்நிலை தொடர்வதையே விரும்பினேன். ஆடம்பரமாகவும் எதிர்காலம் பற்றிய கவலைகளுமற்று இருக்கும் போதுதான் நான் அவருக்கு அவசியமானவள் என்பதை உணர்ந்திருந்தேன். அவர் மூட்டைப் பூச்சிபோல் என் இரத்தத்தை உறிஞ்சுவதற்கு அவர் பணியிலிருந்த காலத்தில் என்மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்ததாக நடித்தது கூட இல்லை.

எப்படி நான் அந்த சாப இரவில் எழுந்தேன்? சிறு தூறல் ஜன்னலில் தெறிக்கும் சப்தம் தவிர வேறு எந்த சப்தங்களுமற்ற அந்த இரவில் எப்படி எனக்கு விழிப்பு வந்தது? இயல்பற்ற அனுமாஷ்ய அமைதி என்னுள் ஊடுருவிற்று. அமைதி நம்மை உறக்கத்திலிருந்து தட்டி எழுப்புமா? நான் கையில் 'ரோர்ச்'சுடன் எனது கணவரை ஒவ்வோர் அறையாய்த் தேடினேன். நிலவொளியில் சமையலறைக்கு வெளியே இருந்த வராந்தாவில் என் கணவர் ஸ்ரீதேவியை தழுவிக்கொண்டிருப்பதைக் கண்டேன். வேதனை தகிக்கும் உயிர்களின் முகபாவங்களையும் உடல் விறைப்பையும் வெளிப்படுத்திய அவர்கள் பந்தயக் குதிரைகள் பந்தயத்தின் முடிவில் காணப்படுவதுபோல் இருந்தனர். அந்த ஒரு கணம். பின்னர், வராந்தாவை விட்டு ஓடினேன். ஒரு தொன்மையான சடங்கை சந்தர்ப்பவசத்தால் காண நேர்ந்ததைப் போன்று உணர்ந்தேன்.

அதன் பின்னர் அரைமணி நேரம் கூட அங்கு நான் தங்கவில்லை. அந்த இடத்துக்கு அந்நியமானவளாகிவிட்டேனா? கரையோரத்தில் நடக்கும் என்னைப் பெரிய அலையொன்று கடலுக்குள் மூழ்கடித்திருக்கும் என்று அவர் கருதலாம். அடுத்த மாத வாடகையைக் கூட கொடுக்கமுடியாத அவர் தன் துரதிருஷ்டத்துக்குக் காரணமான அந்தப் பெண்ணை வெறுக்கலாம். அவள் அழகு திடீரென்று ஊனமாகவும் மாறக்கூடும்.

கீழ்த் திசையில் சில ஒளிக்கீற்றுகள் தோன்றியிருந்தாலும் அந்தக் கடற்கரையில் இருள் அடர்ந்திருந்தது. அந்த இருள் புகைந்துகொண்டிருக்கும் மயானத்து சாம்பலின் நிறமாயிருந்தது. சிற்பங்களை உருவாக்கப் பயன்படும் களிமண்ணின் மணம் அந்த இருளுக்கு இருந்தது. நுரை தள்ளும் எண்ணற்ற வெறிநாய்களின் முகங்களாக கொந்தளிக்கும் அரபிக் கடலோரம் நான் நடந்துகொண்டிருந்தபோது, நூற்றைம்பது வருட காலத்து அருத வீடு எனக்கு அமைதியாக இறுதி விடை கொடுத்திருக்குமா?

அந்த வீட்டைத் தவிர வேறு யாரிடத்தும் அந்தக் கணத்தில் எனக்கு பற்று ஏற்படவில்லை. என்னுடைய வாழ்வு கனவு என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன். இந்த ஓட்டம் மட்டுமே நிஜம். ஒரு காலத்தில் நான் நேசித்த மனிதனிடமிருந்தும் திருமணம் என்ற பொன் விலங்கிலிருந்தும் ஓடிப்போகிறேன். மீறி நான் அணிந்திருந்த வெள்ளைச் சேலை, நான் முன்னேறி நடக்க நடக்க பாய்மரம்போல் காற்றில் ஆவேசத்துடன் படபடத்தது.

அமைதி குலைவுற்றிருந்த வேளையில் தனிமை, மேகத்தின் மென்மையுடனே என்னைப் போர்த்திக்கொண்டது. ஒரு சிறுமியாயிருக்கும்போதே அதன் தொடுதலை உணர்ந்திருக்கிறேன். கடற் காற்று ஓங்கி வீசுகையில் என் கால்கள் பிடிதளர்ந்து தள்ளாடின. நண்டு வளைகள் நிறைந்த ஈர மணலில் பாதம் புதையுண்டது. அந்தத் தருணங்களில் மட்டும் புதிதாய் முளைவிட்டிருக்கும் வேதனை இதயத்திலிருந்து பீறிட்டது.

கடலின் சில்லிப்பு என் பாதங்களை மரக்க வைத்தது. பறவைகள் வராந்தாவில் கிறீச்சிடும்போது, நடு முற்றத்தில் சூரிய ஒளி படரும்போது அந்த இரண்டுபேரும் இறந்தவர்கள். உயிருள்ளவர்கள் தங்கள் கண்களைக் கசக்கி சுற்றும் முற்றும் பார்ப்பார்கள். கனத்த மனதுடன் அங்குமிங்குமாக ஒவ்வோர் அறையாக என்னைத் தேடுவார்கள். சூரியனின் ஒளிக் கீற்றுக்கள் நடு முற்றத்தின் ஓரங்களிலிருக்கும் சிலைகளின் மேல் விழும். அவை உயிர் பெறும். வயோதிகம் பீடிக்கப்பெற்ற அந்த மனிதனும் அந்தப் பதினேழு வயதுப் பெண்ணும் சிலையாக மாறுவார்கள். அவர்கள் கலவியிலும் வெறும் சிலையாக மட்டுமே இருப்பார்கள், விரிந்த நாசிகளுடைய பந்தயக் குதிரைகளின் சிலைகள்போல.

திடீரென்று கடலில் பிண வாடை வீசுவதை உணர்ந்தேன். மேலெழும்ப முயற்சிக்கும் பட்டம்போல, எனது கரங்கள் காற்றில் உறைந்துவிடாதபடிக்கு அதவற்றை ஆட்டிக்கொண்டே முன்னே ஓடினேன். அந்தத் தருணத்தில் சூரியன் எனது வலது கண்ணின் ஓரம் வழியே கிழக்கில் உதிக்கக் கண்டேன்.

**மூலம்: மலையாளம்**
**தமிழில் க. லல்லி**



## ஆயிரத்தில் ஒருவன்

**இயக்கம்: செல்வராகவன்**
**நடிப்பு: கார்த்தி, ரீமா சென், அன்ட்ரியா, பார்த்திபன், அழகம் பெருமாள்**
**இசை: ஜி.வி. பிரகாஷ்குமார்**

### புதிய பாதை

வரலாற்றுப் பின்னணியில் கட்டமைக்கப்பட்ட புனைவை அடிப்படையாகக் கொண்ட படம் 'ஆயிரத்தில் ஒருவன்'. பல நூற்றாண்டுக்கு முன்னைய பகைமையின் நீட்சியாக விரியும் திரைக்கதை, யதார்த்தமும் மாயமும் முயங்கும் தளத்தில் பயணிக்கிறது.

பயணம்தான் படத்தின் முக்கிய அம்சம். காணாமல்போகும் புதைபொருள் ஆய்வாளரைத் தேடிச் செல்கிறது ரீமா, அழகம் பெருமாள் ஆகியோர் அடங்கிய ஒரு குழு. 12ஆம் நூற்றாண்டில் சோழர்கள் எடுத்துச்சென்ற பாண்டிய நாட்டின் குலதெய்வச் சிலையைத் தேடிச்சென்று, காணாமல்போகும் தன் அப்பாவை (பிரதாப் போர்தன்) தேடிச்செல்லும் அன்ட்ரியாவும், கூலியாளாகவந்து இந்தக் குழுவில் மாட்டிக் கொள்ளும் கார்த்தியும் இந்தப் பயணத்தில் இணைகிறார்கள்.


இதுவரை தமிழ்ப் படத்தில் பார்த்திராத காட்சிகளைச் சாத்தியப்படுத்தியிருக்கிறார் இயக்குநர். தடைகளும் அபாயங்களும் கலகலப்பும் கவர்ச்சியும் நிறைந்த பயணமாக நகரும் முதல் பாதி ஆர்வத்தைத் தூண்டுகிறது. ஒரு மர்மத்தைத் தேடிச்செல்லும் இந்தப் பயணம் இரண்டாம் பாதியில் திசை மாறுகிறது. அதுவரை அறிவியலை அடிப்படையாகக்கொண்டு இயங்கிவந்த ரீமா, மாயத் திறன் கொண்டவராக அவதாரம் எடுக்கிறார். தேடிச்செல்லும் சிலையைக் காணும் இடத்தில் அவர் மேற்கொள்ளும் தந்தரங்கள் நம்பகத்தன்மையை இழந்து பலவீனமாகக் காட்சியளிக்கின்றன. மிக அடர்த்தியான காட்சியமைப்புக்கொண்ட இந்த இரண்டாம் பாதியின் தொடக்கத்தைச் சற்றே முன்னால் தள்ளி இன்னும் விரிவுபடுத்தியிருந்தால் அதற்கான நம்பகத்தன்மையுடன் முன்வைத்திருக்க முடியும். இந்தக் கட்டத்துக்கு முன்னைய பகுதியைச் சுருக்கியிருக்கலாம்.

மாந்திரீகப் புனைவை அடிப்படையாகக்கொண்ட படமென்றாலும், படம் தான் தேர்ந்துகொண்ட கதைக் களத்தின் தர்க்கத்துக்கு விசுவாசமாக இருக்கவேண்டும். ரீமாவின் குழுவினர் மேற்கொள்ளும் பயணத்தில் ஏற்படும் தடைகளில் மாயாஜால அம்சங்களைக் கதையின் பின்புலம் சார்ந்து ஏற்றுக்கொள்ளலாம். நடராஜரின் நிழல் என்பதுபோன்ற அம்சங்களும் திரைக் கதையில் பொருந்திப்போகின்றன. ஆனால், சோழர்களின் வழித்தோன்றல்கள் தங்கியிருக்கும் இடத்தை நெருங்கியதும் ரீமாவிடம் ஏற்படும் மாறுதல்கள் நம்பகத்தன்மையுடன் உருப்பெறவில்லை. பார்த்திபனின் பாத்திர வார்ப்பும் சோழர்களின் சந்ததியினரைச் சித்தரித்துள்ள விதமும் ஏற்கக்கூடியதாக இல்லை. நிழலைத் தாக்குவதன்மூலம் ஆளையே தாக்கும் சோழ மன்னனுக்கு, இறுதிப் போரின்போது எந்த மந்திர சக்தியும் கைகொடுக்கவில்லை.

ரீமா நன்றாக நடித்திருக்கிறார். பாத்திரத்துக்கு ஏற்ற உடல்மொழி. அநாயாசமான நடிப்பு. பெரும்பாலும் சோகத்துடன் காட்சிதரும் அன்ட்ரியாவின் முகபாவங்கள் அழுத்தமானவை. கூலியாளாக வரும் கார்த்தி, தெனாவட்டான உடல் மொழியும் அலட்சியமான பேச்சுமாகக் கவர்கிறார். சோழ அரசனாக வரும் பார்த்திபன் கடுமையாக உழைத்திருக்கிறார்.

கலை இயக்குநர் சந்தானமும் ஒளிப்பதிவாளர் ராம்ஜியும் படத்துக்குப் பெரிய பலம்.

குறைகள் கணிசமாக இருந்தாலும் புதிய முயற்சிக்காகவும் புதிய காட்சி அநுபவத்தைச் சாத்தியப்படுத்துவதற்காகவும் செல்வராகவனைப் பாராட்டலாம்.



## தமிழ்ப் படம்

**இயக்கம்: சி.எஸ். அமுதன்**
**இசை: கண்ணன்**
**ஒளிப்பதிவு: நீரவ் ஷா**
**நடிப்பு: சிவா, திஷா, வெண்ணிற ஆடை மூர்த்தி, எம்.எஸ். பாஸ்கர், மனோபாலா, பரவை முனியம்மா**

### பகிடியின் அழகியல்

வணிகத் தமிழ் சினிமாவின் தேய்ந்து போன, நகைப்புக்குரிய சூத்திரங்களைப் பகிடி செய்து உருவாக்கப்பட்டுள்ள படம் இது. இதனையே சோ, எஸ்.வி. சேகர், கவுண்டமணி, விவேக் ஆகியோர் இதற்கு முன்னர் செய்திருக்கிறார்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இந்தப் பகடியை நாம் பார்த்திருக்கிறோம். அதையே முழுநீள படமாக எடுத்திருக்கிறார் இயக்குநர் சி.எஸ். அமுதன்.

பிறந்த குழந்தை விஜயின் பஞ்ச் வசனத்தைப் பேசுவது, சைக்கிள்மேல் ஏறி பெடலை மிதித்ததும் சின்னப் பையன் இளைஞனாகிவிடுவது, நாயகனின் ஒரே உதையில் ரவுடி ஒரு கிலோமீட்டர் தூரத்துக்குப் போய் விழுவது, ஒரே பாட்டில் கோடீஸ்வரனாவது, வயதானவர்கள் கல்லூரிமாணவர்களாக வருவது, தளபதி, பாட்ஷா, நாயகன், அபூர்வ சகோதரர்கள், அந்நியன், சிவாஜி, மொழி, காக்க காக்க ஆகிய வெற்றிப் படங்களின் காட்சிகளையும் வசனங்களையும் திருப்பிப்போட்டுப் பரிகசிப்பது, பின்னி மில்லில் சண்டை என்று இப்படி போகிறது.

நாட்டாண்மை, குடும்பப் பாட்டு, நம்ப முடியாத சண்டைகள் என்று காட்சிகள் கலகலப்பாக நகர்ந்தாலும், கிளைமாக்ஸு"ம் அதற்கு முன்னைய காட்சிகளும் கொட்டாவியை வரவழைக்கின்றன.

கதாநாயகன் சிவா, பாஸ்கர், மூர்த்தி, மனோ பாலா, பரவை முனியம்மா ஆகியோர் படத்துக்குத் தேவையான அளவு நடித்திருக்கிறார்கள். வணிக சினிமா இலக்கணப்படி, சரும தரிசனம் தருவது தவிர கதாநாயகி திஷா பாண்டேக்கு எந்த வேலையும் இல்லை.

கிண்டல்கள் ரசிக்கும்படி இருந்தாலும் இந்தப் படத்துக்கென்று சொல்லிக்கொள்ளும்படி கதைச் சரடு எதுவும் இல்லாததால், தொலைக்காட்சிகளில் வரும் 'லொள்ளு சபா' போன்ற பகிடி நிகழ்வுகளை மொத்தமாகப் பார்த்ததுபோல் இருக்கிறதே தவிர, ஒரு படம் பார்த்த உணர்வு ஏற்படவில்லை. தவிர, இந்தப் பகடிகளின் முன்னோடிகள் செய்ததைத் தாண்டி, அமுதன் புதிதாக எதையும் செய்யவில்லை.

---

## அசல்

**நடிகர்கள்: அஜீத், பாவனா, சமீரா ரெட்டி, சம்பத், பிரபு, ராஜீவ் கிருஷ்ணா, சுரேஷ்**
**ஒளிப்பதிவு: பிரசாந் டி மாஷாலே**
**இசை: பரத்வாஜ்**
**கதை, திரைக்கதை வசனம்: சரண், யூகி சேது, அஜீத்**
**இணை இயக்கம்: அஜீத்**
**இயக்கம்: சரண்**
**தயாரிப்பு: சிவாஜி பிலிம்ஸ் (பிரபு, ராம்குமார்)**

### 'தல' புராணம்

கதை என்று எதைச் சொல்வீர்கள்? கடத்தல் நாடகத்தையா, வல்லமை வாய்ந்த வில்லனின் கோட்டைக்குள் ஹீரோ அலட்டிக் கொள்ளாமல் நுழைந்து சுலபமாகக் காரியத்தை முடிப்பதையா? காப்பாறப்பட்டவனே வில்லனாக மாறும் திருப்பத்தையா, வில்லன்கள் ஹீரோவைக் கட்டிவைத்து எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டு, பின்னர் அடி வாங்கும் கிளைமாக்ஸ் கொமெடியையா, ஹீரோவை மணமுடிக்க இரு அழகிகளிடையே நடக்கும் பனிப்போரையா, எரிச்சலூட்டும் யூகி சேதுவின் சேட்டைகளையா அல்லது இதையெல்லாம்வைத்துக் கதை என்று எதையோ பின்னியிருக்கும் சரணின் கற்பனை வரட்சியையா?



சொல்லும்படி எதுவும் இல்லை என்பதே அசலான உண்மை. அஜீத்தின் ஸ்டைலான கேட் வாக்கிங் (அஜீத்தை ரேமாண்ட்ஸ் சூட்டிங் விளம்பர மாடல்போல பில்லாவிலேயே பார்த்துவிட்டோம்), பாவனாவின் முக அழகு, சமீராவின் உடலழகு (அவரவர் பலம் அவரவருக்கு), சகட்டுமேனிக்குப் பறக்கும் துப்பாக்கிக் குண்டுகள், வேலைவெட்டி இல்லாத பிரபு, பிரான்ஸ் பொலிஸாக வரும் முன்னாள் ஹீரோ சுரேஷ், விசித்திரப் பிறவிபோல உலாவரும் விக்கி (ராஜீவ் கிருஷ்ணா), திடீர் திடீரென்று கத்தும் மரவட்டை தாடி சம்பத், மெலடியைத் தொலைத்த பரத்வாஜ், காட்சிகள் கலர்ஃபுல்லாக, ஸ்டைலிஷாக இருந்தால் போதும், கதையே வேண்டாம் என்று முடிவு செய்துவிட்ட சரத் ஆகியோருக்கு மத்தியில் கதைச்சுருக்கத்தைத் தேடி எடுத்தால் அது இப்படி இருக்கிறது?

சம்பத், விக்கி, அஜீத் மூவரும் சகோதரர்கள் (அஜீத் மாற்றாந்தாயின் மகன்). தந்தையின் பெரும் சொத்துக்கு இதில் யார் அசல் வாரிசு என்பதுதான் கதையின் கரு. ஆனால், இந்தக் கருவை நேரடியாக அணுகாமல், வேறொரு வில்லனைக் களம் இறக்குகிறார் சரண். விக்கியை ஒரு டான் கடத்த, பிரான்சிலிருந்து அஜீத் தோழி சமீராவுடன் மும்பைவந்து விக்கியை மீட்கிறார். பிறகு குடும்பக் கதை தொடங்குகிறது. மாற்றாந்தாய் மகன் அஜீத்தை இரு சகோதரர்களும் வேட்டையாடுகிறார்கள். அஜீத் எப்படித் தப்புகிறார் என்பதே மீதிக் கதை. இடையில், அஜீத்துக்காக இரண்டு அழகிகள் உருகும் 'பாமா - ருக்மிணி' பஞ்சாயத்தும் நடக்கிறது.

வணிகப் படத்திலும் மனதைத் தொடும் ஏதேனும் ஒரு விஷயத்தை அடிச் சரடாக வைத்திருக்கும் வழக்கம் கொண்ட சரண் 'அசலி'ல் அதை முற்றாகக் கைவிட்டுவிட்டார். இரண்டு கதாநாயகிகள் இருந்தும் இருவருமே அஜீத்தைக் காதலித்தும் காதல் என்ற உணர்வு வலுவாக வெளிப்படவில்லை. புயல் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் தன்னார்வத் தொண்டர்போல, எப்போதும் முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டிருக்கிறார் அஜீத். பாவனா, சமீரா பேசிக்கொள்ளும் இடம் மட்டுமே ஏதோ கொஞ்சம் பேசுகிறது.

அஜீத்துக்கும் சம்பத்துக்கும் புதிதாகச் செய்ய எதுவும் இல்லை. பாவனாவுக்கும் சமீராவுக்கும் ஓரளவு நடிக்க வாய்ப்பு; பயன்படுத்திக்கொள்கிறார்கள். சுரேஷ் இனிய ஆச்சரியம். ஒளிப்பதிவு நீரவ் ஷாவின் முன்னாள் உதவியாளர் பிரசாந் டி மாஷாலே. பில்லாவின் பாதிப்பு நிறையவே தெரிகிறது.

வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் தலபுராணம் பாடும் சரணை அஜீத் ரசிகர்கள் கட்டாயம் பாராட்டுவார்கள். இரண்டு மணிநேரத்துக்குள் படத்தை முடித்ததற்காக நாமும் அவரைப் பாராட்டலாம்.

**- அரவிந்தன்**

அரசியலும் சினிமாவும்

# பாராட்டு விழாவில் பற்றிய 'தீ'



'அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட எங்களை மிரட்டுகிறார்கள்' - நடிகர் அஜித்

'நாங்கள் மிரட்டவில்லை. தேவைப்பட்டால் அதையும் செய்வோம்' - திரைப்பட சங்க தலைவர் வி. சி. குகநாதன்

'நான்தான் நம்பர் வன்', 'நான் பேச மாட்டேன்; என் படம் பேசும்' என்று, முன்பெல்லாம் அளவுக்கு அதிகமாகப் பேசும் பழக்கம் கொண்ட அஜித், சமீபத்தில் மிகவும் அளந்துபேச ஆரம்பித்திருந்தார். தொடர் தோல்விகளோ அல்லது அவரே சொல்கிறபடி வயதோ அவருக்குப் பக்குவத்தைக் கூட்டியிருப்பது தெரிகிறது. ஆனால், மீண்டும் ஒருமுறை அவரது பேச்சு அவருக்கே பாதகமாகியிருக்கிறது. இந்தமுறை கேலிப்பொருளாக அல்லாமல், தீவிரமான விவாதப் பொருளாகவும், திரை உலகத்தையே சற்று அசைத்துப் பார்ப்பதாகவும் அமைந்த பேச்சு அது.

பெப்ரவரி 6ஆம் தேதி, தமிழக முதல்வர் மு. கருணாநிதிக்கு நன்றி தெரிவிக்கும்விதமாக, 'பாசத் தலைவனுக்குப் பாராட்டு விழா' என்னும் அந்த விழாவில் மேடையேறிய அஜித், சமீபகால கவனங்களையெல்லாம் துறந்து, வெளிப்படையாக பேச ஆரம்பித்தார்.

"கலைஞர் 60 வருடங்களுக்குமேல் தமிழ் மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார். சூரியனை வாழ்த்த வயது தேவையில்லை. ஒவ்வொரு பொங்கலின்போதும் சூரியனுக்குப் பொங்கல் வைத்துப் படைக்கிறோம். அதுபோலத்தான் இந்த விழா" என்று தொடங்கினார். காகிதத்தில் எழுதிவைத்ததைப் படித்த அஜித், அதனை மடித்துப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, மேற்கொண்டு பேசினார்.

"ஐயா, கொஞ்ச நாட்களாக உங்களுக்கு எங்கமேல கோபம் இருக்கலாம். ஒவ்வொரு 'சென்சிடிவான' மக்கள் பிரச்னையின்போதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கறதுக்குமுன், சினிமாவில் பொறுப்பில் இருக்கும் சிலர் அறிக்கை விடுறாங்க; ஊர்வலம் நடத்துறாங்க. இந்தமாதிரி விஷயங்களை கவனிக்கதான் நீங்க இருக்கீங்க; அமைச்சர்களும் இருக்காங்க. அதனால், தன்னிச்சையா செயல்பட வேண்டாம்னு சொல்லுங்க ஐயா" என்றார். அரங்கம் அமைதியில் ஆழ்ந்தது.

"எங்களை வரச்சொல்லி கட்டாயப்படுத்துறாங்க. அப்படி வராவிட்டால் மிரட்டுறாங்க ஐயா. அல்லது நாங்கள் தமிழன் இல்லேன்னு பிரச்சாரம் பண்ணுறாங்க. இதற்கு நீங்கதான் ஐயா ஒரு முடிவு கட்டணும். நாங்க ரொம்ப ரயர்டா ஆகிட்டோம். எங்களுக்கு அரசியல் வேண்டாம். எந்த பிரச்னையாக இருந்தாலும் அரசாங்கம் பார்த்துக் கொள்ளும்னு சொல்லுங்க ஐயா.."


இவ்வாறு அஜித் பேசப்பேச, ரஜினி, சேரன், உள்ளிட்ட பலர் எழுந்துநின்று கைதட்ட ஆரம்பித்தார்கள். "இந்த விழாவுக்கு யாரும் எங்களை கட்டாயப்படுத்தல. நாங்களே விரும்பித்தான் வந்தோம்" என்று முடித்தார் அஜித்.

ரஜினி, சேரன் மட்டுமல்ல. த்ரிஷா போன்ற நடிகைகளும் அஜித்தின் பேச்சுக்கு இணையம் (ஃபேஸ் புக்) மூலம் பாராட்டுத் தெரிவிதார்கள். ஆனால், எதிர்பார்த்தபடியே திரையுலக அமைப்புகளின் பொறுப்புகளில் இருப்பவர்கள் அவ்வளவாக ரசிக்கவில்லை. வெளிப்படையாக அவர் வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்று திரையுலக அமைப்புகள் ஒன்றுகூடி தீர்மானம் எடுக்கிற அளவுக்கு பிரச்னை விஸ்வரூபம் எடுத்தது.

இதில் இன்னொரு பிரச்னையும் சேர்ந்துகொண்டது அஜித்துக்கு. ஸ்டண்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கம், அஜித்தின் பேச்சுக்குக் கடும் கண்டனம் தெரிவித்ததையடுத்து அவரது வீடும் காரும் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டது. அஜித் ரசிகர்களாலேயே தாக்கப்பட்டது என்று அவர் பகிரங்கமாக புகார் செய்தார். இந்த வழக்கில் அஜித்தை கைதுசெய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார் ஜாக்குவார். ஒவ்வோர் அரசியல் தலைவர்களையும் நேரில் சந்தித்து தனது போராட்டத்துக்கு ஆதரவு அளிக்கும்படியும் கேட்டார்.

ஜாக்குவார் வீட்டுக்கே சென்று ஆறுதல் சொன்னார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன். இயக்குநர் சீமானும் ஜாக்குவாருடன் கை கோர்க்க, பிரச்னையில் இன்னும் காரத்தின் சாரம்.

ஜாக்குவார் தரப்புக்கு இப்படி ஆதரவென்றால், அழைக்காமலே வந்து ரஜினிக்கும் அஜித்துக்கும் ஆதரவுக்கரம் நீட்



படம்: 'கலைமாமணி' யோகா

டினார் முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன். 'கலையுலகம் பொதுவானது. இதில் தமிழன், தமிழனல்லாதவன் என்ற வாதம் அர்த்தமற்றது' என்பது இவரது கருத்து.

அஜித் பேசும்போது முதல்வருக்குப் பக்கத்திலிருந்து அவரை உற்சாகப்படுத்துவதுபோல கை தட்டிய ரஜினி, அத்துடன் நிறுத்திக்கொள்ளவில்லை. முதல்வரைச் சந்தித்து அஜித்துக்காகப் பரிந்தும் பேசினார்.

இதற்கிடையில் முன்னணி வார இதழ் ஒன்றில் பேட்டியளித்த திரைப்பட தொழிலாளர் சங்க (ஃபெஃப்சி) தலைவர் வி. சி. குகநாதன், விழாக்கள் விஷயத்தில் தமிழ்நாட்டிலுள்ள நடிகர் நடிகைகளைச் சற்று உஷ்ணமாகவே விமர்சிக்க, இன்னும் சூடானது 'ஏரியா'. அதே தினத்தில், இசைப்பேழை வெளியீட்டு விழா ஒன்றில் பேசிய குகநாதன், "நாங்கள் மிரட்டவில்லை. ஆனால், தேவைப்பட்டால் அதையும் செய்வோம்'' என்றார். "சங்கம் நினைத்தால் உங்களை தூக்கி வீசிவிடும்'' என்றும் எச்சரித்தார். இதனால் அதிர்ச்சியடைந்த நடிகர் சங்கம், அவரது பேச்சைக் கண்டிக்கும் வித்ததில் ஓர் அறிக்கை வெளியிட்டது.

இந்த அறிக்கை வெளியான சிலமணி நேரத்திலேயே நடிகர் சங்கத்துக்கு எதிராகக் கூடியது ஃபெஃப்சி அமைப்பு. ரஜினிக்கும், அஜித்துக்கும் தொழில் ஒத்துழையாமே என்று தீர்மானித்தது. 'கலையுலகத்துக்கு ஏராளமான நன்மைகள் செய்துவரும் முதல்வர், நாம் அடித்துக்கொள்ள ஆரம்பித்தால் மனம் புண்படுவார். யாரும் செய்ய முன்வராத அளவுக்கு 90 ஏக்கர் நிலத்தை திரையுலகத்துக்கு கொடுத்த அவரது மனம் சங்கடப்படக்கூடாது. எனவே, பிரச்னையை பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஃபெஃப்சி அமைப்பினருக்கும் நடிகர் சங்கத்துக்குமிடையே சமாதானம்செய்ய முயன்றார் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் இராம. நாராயணன்.

போட்ட தடை போட்டதுதான் என்று ஒரு தரப்பும், அப்படி தடை விதிக்கப்பட்டால் என்னவெல்லாம் நஷ்டம் வரும் என்று இன்னொரு தரப்பும் மாறிமாறி பேசியதில் இறுதியாக அனைவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள் . 'அஜித் நிபந்தனையற்ற வருத்தம் தெரிவிக்கவேண்டும். ரஜினிக்கு எங்கள் கண்டனம்'.

இந்தத் தீர்மானத்தின் நகல் முறைப்படி பத்திரிகைகளுக்கு தரப்பட்டு, அஜித்துக்கும் ரஜினிக்கும் அனுப்பப்பட்டது. விடிந்தால் வருத்தம் தெரிவிப்பாரா, விடிவதற்குள் தெரிவிப்பாரா என்ற வாதங்களோடு கலைந்த திரையுலகினருக்கு பலத்த அதிர்ச்சி. மறுநாள் காலை வெளிவந்த ஆங்கில நாளிதழ் ஒன்றில் அஜித்தின் பேட்டி. அதில், "நான் பேசியதிலிருந்து பின்வாங்கப்போவதில்லை. மன்னிப்பும் கேட்க மாட்டேன். தேவைப்பட்டால் சினிமாவிலிருந்தே விலகிக்கொள்வேன்'' என்றெல்லாம் ஆவேசப்பட்டிருந்தார் அஜித்.

அஜித்தின் போக்கு மாறவில்லையே என்று அதிர்ந்தது திரையுலகம். அதே நேரத்தில் அஜித்துக்கும் அதிர்ச்சி. ஏனென்றால், இந்த பேட்டி அவர் ஒரு வாரத்துக்கும் முன்பு அளித்தது. அதைதான் வெளியிட்டிருந்தார்கள் சற்று தாமதமாக.

இதன் அடுத்த கட்டம் என்ன என்ற கேள்வியோடு விசாரணையில் இறங்கியபோது கிடைத்த தகவல்களில் நவரசங்களும் கலந்திருக்கின்றன.

அஜித்தின் மனைவி ஷாலினியும், முதல்வரின் மனைவி ராஜாத்தியம்மாளும் குடும்ப சிநேகிதிகள். அவ்வப்போது ராஜாத்தியம்மாள் வீட்டுக்குப்போய், தானே சமையல்செய்கின்ற அளவுக்கு அவங்க வீட்டு செல்லம் ஷாலினி. அதுமட்டுமல்ல, மதுரையிலிருந்து அழகிரியும் அஜித்துக்காக தன் பங்குக்கு முதல்வரிடம் பேசினாராம். அஜித் நடிக்கப் போகும் ஐம்பதாவது படத்தின் தயாரிப்பாளரே அழகிரியின் மகன் துரை தயாநிதிதானே.

அஜித்துக்கு ஆதரவுகொடுக்கும் நடிகர்கள் பட்டியலில் விஜயும் இருக்கிறார் என்பதுதான் விசேஷம்.


இத்தகைய சூழலில் திரையுலகினர் அமைதி காத்திட வேண்டும் என்றுகோரி முதல்வர் கருணாநிதி ஓர் அறிக்கை விடுத்தார். "கலையுலகில் இனி எவரும் கலகம் விளைத்திட முடியாது என்று எல்லோருமே கட்டுப்பாடு காப்பார்களேயானால், அது அவர்கள் நடத்திய விழா தந்த மகிழ்ச்சியை விட, பெருமகிழ்ச்சியாக எனக்கு அமையும்'' என்று, அந்த விரிவான அறிக்கையின் முத்தாய்ப்பாக வேண்டுகோள் விடுத்திருந்தார் கருணாநிதி. முதல்வரின் வேண்டுகோளை ஏற்று மனக்கசப்புகளை துறந்துவிடுவதாக குகநாதன் பெப்ரவரி 27இல் அறிவித் தார்.

'எங்கள் கலையுலகத்தின் பிதாமகன் கலைஞர். அவர் கேட்டுக்கொண்டபடி கருத்துவேறுபாடுகளை கைவிடுகிறோம். கலைஞர் வேண்டுகோளின்படி, கலையுலகினர் ஒன்றுபட்டு செயல்படுவோம். எங்களுக்குள் எழுந்த கருத்துவேறுபாடுகள் தீர்ந்தன. ரஜினி, அஜித்துடன் ஏற்பட்ட மனக்கசப்பும் அகன்றுவிட்டது. ஒரே குடும்பமாகச் செயல்படுவோம்' என்று அந்த அறிக்கையில் குகநாதன் கூறியுள்ளார்.

பிரச்னை சுமுகமாக தீர்ந்தாலும அஜித் எழுப்பிய கேள்விகள் அப்படியேதான் இருக்கின்றன. அரசியல் சார்ந்த போராட்டங்களில் திரைப்பட அமைப்புகள் தீவிரமாக ஈடுபடவேண்டியது அவசியம்தானா? அதில் கலந்துகொள்ளாவிட்டால் ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று நேரடியாகவும் மறைமுகமாகவும் எச்சரிப்பது நியாயமா? அப்படி கலந்துகொள்ளாதவர்களின் தமிழ் உணர்வையும் சமூக அக்கறையையும் கேள்விக்கு உள்படுத்துவது முறைதானா?

இக் கேள்விகள், பதில்களுக்காக காத்திருக்கின்றன.

**- கலைச்செல்வன்**



நோர்வே தமிழ் திரைப்பட விழா

# அநுபவம் புதுமை

## '1999' நள்ளிரவுச் சூரியன்

**மனிதர்களை நடிக்கவைப்பதே கடினமானபோது எலியை நடிக்கவைத்த இயக்குநர்**

சர்வதேச அளவில் முழுக்க முழுக்க தமிழ் சினிமாவுக்கென்றே ஏற்பாடுசெய்யப்பட்ட முதல் திரைப்பட விழா, கடந்த பெப்ரவரி 6ஆம் தேதி முதல் 9ஆம் தேதிவரை, நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்றது.

ஏற்கனவே கேன், டுபாய் மற்றும் தெற்காசிய திரைப்பட விழாக்கள் நடந்துவருகின்றன. ஆனால், இந்த விழாக்களுக்கு நிகராக, ஆண்டுதோறும் தமிழ்ப் படங்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்டுள்ள விழாதான் 'நோர்வே தமிழ் திரைப்பட விழா'. தமிழரல்லாதவர்களும்கூட ஆர்வத்துடன் பங்கேற்கும் வகையில் இதனை மாற்றும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறார் ஏற்பாட்டாளர் வசீகரன். வசீகரனின் 'இசைக் கனவுகள்' நிறுவனம் சார்பில் இந்த விழா ஏற்பாடாகிறது.

'மாயாண்டி குடும்பத்தார்', 'பேராண்மை', 'அஞ்சாதே', 'பொக்கிஷம்', 'பூ', 'மீண்டும்' (நோர்வேயில் எடுக்கப்பட்ட படம்), 'ஈ', '1999' (கனடாவில் எடுக்கப்பட்டது) 'சுப்ரமணியபுரம்', 'யோகி', 'பசங்க', 'நாடோடிகள்' மற்றும் 'நந்தலாலா' ஆகிய 13 படங்கள் திரையிடப்பட்டன. இதில் நந்தலாலா இப்போதுதான் முதன்முதலாக வெளியுலகின் பார்வைக்கு வந்துள்ளது.

சசிக்குமார் இயக்கிய சுப்பிரமணியபுரம் படத்துக்கு சிறந்த வெகுஜன திரைப்பட விருது வழங்கப்பட்டது.

மிஸ்கினின் நந்தலாலா படத்துக்கு சிறந்த மக்கள் தெரிவு விருது வழங்கப்பட்டது.

எஸ்.பி. ஜனநாதன் இயக்கிய பேராண்மை படத்துக்கு மேன்மை நிலை விருது வழங்கப்பட்டது.

மக்கள் இதயம் தொட்ட படமாக, சமுத்திரக்கனி இயக்கிய நாடோடிகள் தேர்வு செய்யப்பட்டது.

இந்த விழாவில் இனிய அதிர்ச்சியாக அமைந்த படம், கனடிய தமிழரான லெனின் எம்.சிவம் இயக்கிய '1999' திரைப்படம்தான். பார்வையாளர்கள் அனைவருமே பாராட்டிய படம் இது. இந்தப் படத்துக்கு நள்ளிரவுச் சூரியன் விருது வழங்கப்பட்டது.

நோர்வேயில் நடைபெற்ற தமிழ் திரைப்பட விழாவில் கலந்துகொண்டு திரும்பிய இயக்குனர்கள் எஸ்.பி. ஜனநாதன், மிஸ்கின், சசிக்குமார், சமுத்திரக்கனி ஆகியோர் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக சென்னையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்கள்.

படப்பிடிப்பு இருந்ததால் எனக்கு நோர்வே போகிற ஐடியாவே இல்லை. ஆனால், அங்கிருந்து என்னைத் தொடர்புகொண்ட வசீகரன், "நீங்க அவசியம் வரணும்" என்று வற்புறுத்தினார். அவர் கேட்ட முதல் கேள்விதான் என்னை அங்கு போகவைத்தது என்றார் சசிக்குமார்.

"உங்களுக்கு 'நொன் வெஜ்ஜா, வெஜ்ஜா' என்று கேட்டார். விருந்தோம்பலில் தமிழன் உலகம் முழுக்க ஒரே மாதிரித்தான் இருக்கிறான் என்பதற்கு வசீகரன் ஓர் உதாரணம். எனக்கு வெளிநாட்டில் இருக்கிறோம் என்ற உணர்வே வரவில்லை. விமானத்திலிருந்து இறங்கிய நிமிடம் முதல், இங்கு புறப்பட்டு வருகிறவரை என்னைச் சுற்றித் தமிழர்கள்தான் இருந்தார்கள். 'அண்ணே, யாருக்கு விருது கிடைக்கும்னு தெரியாது. உங்களுக்குக் கிடைக்காம போனாலும் நீங்க பொறுத்துக்கணும்' என்றார்.

"நான் அவரிடம், 'இங்கு யார் விருது பெற்றாலும் எனக்கு சந்தோஷம். எல்லாருமே என்னோட சகோதரர்கள்தான்' என்று சொன்னேன்'' என்றார் சசிக்குமார்.

எஸ். பி. ஜனநாதன்கூட முதலில் இந்த விழாவுக்குப் போகத் தயங்கினாராம். அதற்கான காரணத்தை அவரே சொன்னார். எனக்கு ஆங்கிலம் தெரியாது. அதனால், என்னுடன் வருகிறவர்கள் நண்பர்களாகவும் ஆங்கிலம் தெரிந்தவர்களாகவும் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். இதற்கு முன்பு இவர்களுடன் அதிகம் பழகியதில்லை. ஆனால், அங்கு சென்றதும் என் தம்பிகளுடன் போலிருந்த உணர்வு என்றார். இந்த திரைப்பட விழாவில் ஜனநாதனை அதிகம் கவர்ந்த படம் 1999.

இந்தப் படத்தைப் பற்றித்தான் அதிகம் பேசினார் சமுத்திரக்கனி. ரொம்ப ஸ்டன்னிங்கான படம் அது. பிரமாண்டமா எடுத்திருக்காங்க. அது மட்டுமல்ல, புலம் பெயர்ந்த தமிழர்களில் பல அற்புதமான இயக்குநர்கள் அங்கு இருக்காங்க. 'வன்னி எலிகள்' என்றொரு படம் பார்த்தேன். இரண்டே இரண்டு எலிகளை வைத்துக்கொண்டு ஓர் அற்புதமான கதையைச் சொல்லியிருக்கிறார் அந்த இயக்குநர். மனிதர்களை நடிக்க வைப்பதே கஷ்டம். இதில் எலியை நடிக்க வைத்திருக்கிற அந்த இயக்குநரை எப்படிப் பாராட்டுவது என்று வியந்தார் சமுத்திரக்கனி. இந்த படத்தை மற்றைய இயக்குநர்களும் பாராட்டத் தவறவில்லை.

இந்த நால்வரும் வியந்த 1999 படத்தை விரைவில் தமிழகத்திலும் ரிலீஸ் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் வசீகரன். ■

**சிலவரிகளில்**

# கால நதி



**கௌரவம்**

## ஜன்சிலா மஜீத்

இலங்கையைச் சேர்ந்த ஜன்சிலா மஜீத், அமெரிக்க இராஜாங்க செயலாளரின் 2010ஆம் ஆண்டுக்கான 'துணிச்சல்மிகும் சர்வதேச பெண்கள்' விருதைப்பெற்றிருக்கிறார். வாஷிங்டன், இராஜாங்க திணைக்களத்தில் இராஜாங்க செயலாளர் ஹிலறி கிளின்டன், மார்ச் 10ஆம் தேதி இந்த விருதை வழங்கினார். அமெரிக்க முதல் பெண்மணி மிச்செல் ஒபாவும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டார். உலகின் பலபகுதிகளிலுமிருந்து பத்து பெண்கள் இந்த ஆண்டு இந்த விருதுக்கு தெரிவாகியிருந்தனர்.

இலங்கையில் புத்தளம் மாவட்டத்தில், சிறுபான்மையினரதும் பெண்கள் தொடர்பான விவகாரங்களிலும் பல்வேறு விதமான திட்டங்களை கவனித்துவரும் சமூக நம்பிக்கை நிதியத்தின் நிர்வாகியாக ஜன்சிலா சேவையாற்றுகிறார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த ஒருவரான ஜன்சிலா, கடந்த இருபது ஆண்டுகளாக, இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம் சமூகத்தினரை ஐக்கியப்படுத்தும் அடிமட்டத்திலான பணிகளில் மிகுந்த உழைப்புடன் ஈடுபட்டுவருகிறார். இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகத்தில் கவனிக்கப்படாத பொது பிரச்னைகளிலும், முஸ்லிம் பெண்களின் பெரும் கட்டுப்பாடுமிகுந்த விவகாரங்களிலும் சில தீர்வுகளை இவர் மேற்கொண்டிருக்கிறார்.

1992ஆம் ஆண்டு, ஐந்துபேர் கொண்ட ஒரு குழுவாக தனது சேவையை இவர் ஆரம்பித்தார்.

**மறைவு**

## அமுது புலவர்



லண்டனில் வாழ்ந்த ஈழத்து தமிழ் அறிஞர் அமுது புலவர், அவருடைய 92ஆவது வயதில் காலமானார். 'யாழ்ப்பாணத்தில் தடுக்கி வீழ்ந்தால் ஒரு தமிழ்ப் பண்டிதர்மீதுதான் விழநேரும்' என்று 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்ட அந்த யாழ்ப்பாணத்து பண்டித மரபில் பெரும்பாலும் கடைசியான ஒருவர்.

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை, வித்துவசிரோமணி ந. சுப்பையாபிள்ளை, வித்துவான் வேந்தனார், இளமுருகனார் போன்ற பேராசான்களிடம் பெற்ற இலக்கண, இலக்கிய பயிற்சியுடன், பல்கலைக்கழக கல்வியையும் பெற்றிருந்த அமுது புலவர், கேட்போரை ஆவலில் ததும்பவைக்கும் தனித்துவமான ஒரு பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதி பட்டமளித்து கௌரவித்திருந்தபோது, பாப்பரசரின் 'செவாலியர்' விருதையும் இவர் பெற்றிருந்தார். இவர் இயற்றிய 'மடுமாதா காவியம்' இலக்கிய பாடநூலாக இடம்பெறவல்லது.

**மறைவு**

## மைக்கல் பூட்



பிரிட்டனின் சீர்த்திமிக்க அரசியல்வாதி ஒருவராக திகழ்ந்த மைக்கல் பூட் அவரது 97ஆவது வயதில் காலமானார்.

42 ஆண்டுகள் தொழில் கட்சி பாராளுமன்ற உறுப்பினராக திகழ்ந்த பூட், ஹரல்ட் வில்சன் அரசாங்க காலத்தில் வேலைவாய்ப்பு செயலாளராகவிருந்ததுடன், மாக்கிரட் தச்சரின் ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்தார்.

தீவிர அணுவாயுத ஒழிப்பு கொள்கையைக்கொண்டிருந்ததுடன் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் பிரிட்டன் இணைவதையும் இவர் எதிர்த்தார். இவரது தலைமையில் தொழில் கட்சி 1983 பொதுத் தேர்தலில் 1918ஆம் ஆண்டுக்குப் பின்னரான மிகப்பெரும் தோல்வியைத் தழுவியது.

சிறந்த கல்விமானாகவும், பேச்சாளர், எழுத்தாளராகவும், தொழிற்சங்கவாதியாகவும் விளங்கிய மைக்கல் பூட், 'ஈவினிங் ஸ்ரான்டர்ட்' உள்பட பல பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் விளங்கியவர்.

பிரபுக்கள் சபை உறுப்பினர் உள்பட, மகாராணியின் எந்த கௌரவத்தையும் ஏற்கவும் மறுத்துவந்தவர் மைக்கல் பூட்.

# MOHAN JEWELLERY MART

## அழகு நிலா நகை மாடம்




## 22 காரட் அசல் தங்க, வைர நகைகள்




201, rue du Saint-Denis, 75010 Paris
Tel: 01 42 05 65 26, Fax: 01 42 05 65 79
www.mohanjewellerymart.com, Email: mohanjm@hotmail.fr
Metro: La Chapelle ou Gare du Nord

# *Edgware's Leading Estate Agent*

***Specialising in Sales & Lettings***




*** No 1 Letting agents according to Rightmove**

*** Most Prominent Office**

*** Reliable & Committed Staff**

*** Free Valuation Sales/ Lettings**

**Properties urgently required in Edgware, Burnt Oak, Canons Park, Colindale, Kingsbury, Kenton, Queensbury, Stanmore, Mill Hill, Harrow**

**DISCOVER THE DIFFERENCE call us on 0208 238 5840**



# GLOBAL TOWERS HOTEL –SRI LANKA

**offers special rates for Two & Three bedroom apartments**

**Our Facilities**






24hour In-room dining
Train spotter Restaurant – 24hour
Internet Broadband with Wi Fi Facility
Indoor Swimming Pool
Laundry Services, Hair & Beauty Salon
Business Centre
Extensive rooftop Banquet & Conference Facilities
Beach Bar with live entertainment
Wellness Spa/Jacuzzi
Stream Room
Shopping & Gift Shop,
Travel & Tour office







**Tel:** **0094 11 259 1000**
**Emails:** malin@globallanka.com
**Address: No. 11, Station Avenue (Marine Drive) Colombo 06, Sri Lanka.**
**UK Office: 02082385840 –i nfo@morelanduk.com**


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909